
ஊழியன்

தேசீய சித்திர வாரப்பத்திரிகை

17—8—34.



மெல்போர்ன் நகரில் காணப்படும் "குக்கபூரா" என்னும் பறவை.

ஊழியன்

ஆசிரியன்—ராய. சொக்கலிங்கன்.

மலர் ௧௪. சென்னை, பவ௵ ஆவணி௴ 1௳ வெள்ளி (17-8-1934) இதழ் ௭.

இந்தியத்தாய் முடிசூடி எழிற்சிங்கா
  தனமேறி ஈடிலாது
சொந்தவா சேபுரியத் துயர்போக்கி
  யாவருமே சுகவாழ் வெய்த
இந்நிலம் வந்தவருள் இலைபிறப்பில்
  இழிவுயர்வென் இயற்கை ஓங்க
நந்தலிலா ஊழியமே நான் கொண்டேன்
  நல்லனவெந் நாளும் வாழ்க!

ஜவகர் விடுதலை

ஜவகர் இவ்வாரம் விடுதலை பெற்றார். ஆனால் அவ்விடுதலை எவ்வளவு நிலையானது என்று கூற முடியவில்லை. ஜவகருக்கு விடுதலையும் சிறை வாழ்வும் சர்வ சாதாரணம். அவர் எத்துணை முறை சிறைப்பட்டார்; எத்துணை தரம் விடுதலையானார் என்பதைச் சட்டென்று சொல்லிவிட முடியாது. நாட்டுப்பற்று ஒன்றே காரணமாக வாழ்நாளில் பல ஆண்டுகளைச் சிறையிற் கழித்த பெருமை வாய்ந்த பெரியார்களுள் பண்டித ஜவகர் ஒருவர்.

ஜவகர்லாலை மனத்தே பதித்து வைத்துக் கொள்ளாத இந்தியன் ஒருவன் இருக்கமாட்டான் என்பது உறுதி. அத்துணைப் பெருங் குணமும் பெருஞ் செயலும் பூண்ட—மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட—பெரியார் பண்டித ஜவகர்லால் நேரு. பண்டிதர் கடந்த சட்ட மறுப்பு இயக்கம் ஆரம்பமாகு முன்னரே முதன் முதலாகச் சிறைபிடிக்கப் பட்டார். லண்டன் மாநகர் சென்று திரும்பிய தனது தனித் தலைவரை வரவேற்க வருங்கால் வழியில் கைது செய்யப்பட்டார் ஜவகர். அதிலிருந்தே கடந்த பெரும் போர் ஆரம்பமாயது. அதுபோது இரண்டாண்டுக் காவல் விதிக்கப்பட்டார் ஜவகர்.

ஜவகர் சிங்கம் கூட்டில் அடைக்கப்பட்டு இரண்டாண்டுகள் ஒடுங்கிக் கிடந்தது. கம்பிக் கதவு திறந்துவிடப் பெற்றதும் "மாரி மழை முழைஞ்சில் மன்னிக்கிடந் துறங்கும், சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து"ப் போதருமா போலப் போந்து தன்னியல்பு தோன்ற முழக்கியது. எனவே திரும்பவும் உள்ளே தள்ளிப் பூட்டப்பட்டது. சட்ட மறுப்பு ஒருவாறாக நிறுத்தப்பெற்ற போதிலும் ஜவகர் சிங்கம் திறந்துவிடப் படவில்லை. சட்ட மறுப்புக் காரணமாக ஜவகர் அடைக்கப் படாததால் அவரைத் திறந்து விடுவது முடியாத காரியம் என அமைச்சரால் அருளப்பட்டது.

ஜவகர் இப்போது திடீரென விடுவிக்கப் பெற்றிருக்கிறார். காரணமாக நின்றது, அப்பெரியாரின் அருமைக் காதலி கமலாவின் மிதமிஞ்சிய பிணியாகும். அரசாங்கம் ஜவகர் விஷயத்தில் பிடிவாதம் காட்டியதெனினும் சமயமறிந்து விடுதலை நல்கிக் காதலியைக் காணச் சந்தர்ப்பமளித்த செய்கையை மனமாரப் போற்றுவோம். பத்திரிகைச் செய்திகளைப் பார்க்குங்கால்—கமலா அவர்களின் நோய் குணப்பட்டவுடன் திரும்ப ஜவகர் பிடிக்கப்படலாம் எனத் தோற்றுகிறது. சட்டப்படி தண்டனைக் காலம் முடியுமுன் விடவேண்டிய அவசியம் கிடையாது. மனைவியின் கடு நோய் காரணமாக விடுதலை செய்தது அரசாங்கத்துக்குப் பெருமையேயாகும். அப்பெருமை நிலைத்திருக்க வேண்டுமானால் விடுதலை தற்காலிகமாக இருத்தல் சரியாகாது. "ஜவகர் இல்லாத கூட்டம் எதுவும் பரிபூரணத் தன்மை யடையாது" எனச் சிலநாள் முன்னர் அடிகள் கூறினர். ஜவகர் விடுதலை இல்லையென இந்தியா மந்திரி இயம்பியதும் காந்தி கலங்கிப் போனார். எனவே எப்படியோ விடுதலை செய்யப் பெறவேண்டிய ஜவகர்லால் விடுதலைக்கு ஒரு காரணம் கிடைத்தது. விடுதலை பெற்றார். அவ்விடுதலையை உறுதிப்படுத்த அரசாங்கத்தார் தவற மாட்டார் என நம்புவோம்.

ஜவகர்லாலைத் தனது கடுமையான நோய்க் காலத்தில் காணப் பெற்றது கமலாவின் தவப்பயன் என்றே கருதுகிறோம். நாட்டுக் காதல் காரணமாக எத்துணையோ பெரியார்கள், தங்கள் உற்றார்,

உறவினர், பெற்றோர், பிறந்தார், காதலர், மக்கள் ஆகியோரின் சாவைக்கூடக் காண முடியாது சிறை கிடந்து தவித்திருக்கின்றார். இந்தியச் சட்டசபையின் முதல் தலைவரான பெரியார் விட்டல் பாயின் உடலை இறுதியாகக் காணும் சந்தர்ப்பத்தை யிழந்தார் அவருடன் பிறந்த நமது தலைவர் வல்லபாய் சிறை கிடந்த காரணத்தால் என்ற சமீப நிகழ்ச்சியை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். ஜவகர்லாலுக்கு நிபந்தனை யெதையும் விதித்து விடாமல் அவர்தம் அருமைக் கமலாவைக் காண அனுமதித்தது போற்றக் கூடியதே. தம் உயிரினும் பெரிதாக மதிக்கும் காதலியைக் காணப் பெரிதும் விழைகின்றார் ஜவகர்; ஆனாலும் என்ன தான் வந்த போதினும் 'விடுதலைக்கு நிபந்தனை' ஏற்கும் வகுப்பில் பிறந்தவரல்லர் ஜவகர் ஆதலால் அதனை அறிந்தே அரசாங்கம் கருமமாற்றியது.

ஜவகர், வாழ்க்கைத் துணைவி கமலாவின் நோயைக் குணப்படுத்தி அவரோடு இணைந்து பன்னெடுநாள் வாழ இறை அருள்வதாக!

இடி முழக்கம்

கட்சிப் பிளவு


காங்கிரஸ் சட்ட மறுப்பியக்கத்தைக் கைவிட்டதும், ஆங்காங்குள்ள காங்கிரஸ் கட்சியார்கட்குள் சிறு சிறு மனஸ்தாபமேற்பட்டிருப்பதாகச் செய்தி வருகிறது. ஏகமுகமாக இருந்து நாட்டின் விடுதலையைக் குறிவைத்துப் போராடவேண்டிய படை வீரர்கட்குள் இவ்வாறு அபிப்பிராய வித்யாசமும் தகராறும் தலைகாட்டுவது பெரும் தவறென்றாகும். கருமமே கண்ணாயிருப்பவர்கள் எவ்வெவா நிலையும் மேற்கொள்வர்; தம் செயலொன்றையே பார்த்து நிற்பர். அத்தகையோருக்கு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் சமாச புத்தியுமே உறு படைகளாயிருக்கும். அண்மையில் ஜபல்பூரிலிருந்து வந்த ஓர் செய்தியை இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூறுவதுபொருத்தமா யிருக்கும். மத்திய மாகாண(ஹிந்தி) காங்கிரஸ் கமிட்டித் தலைவரான சேத் கோவிந்ததாஸும் காரியதரிசி பண்டித துவாரகாப் பிரசாத் மிஸ்ராவும் அடியில் வருமாறு ஓர் அறிக்கையை விடுத்திருக்கிறார்கள்:—

தேச விடுதலைக்கான போராட்டம் நின்றதும் காங்கிரசுக்குள் இலேசாகக் கலகம் ஏற்பட்டு மெதுவாக எல்லா மாகாணங்களிலும் வியாபிக்கத் தொடங்கியிருக்கிறது. எனவே ஒற்றுமையின் பொருட்டு எங்கள் பதவிகளை யெல்லாம் நாங்கள் ராஜிநாமா செய்வதாக முடிவு செய்திருக்கிறோம். வரப்போகும் தேர்தலுக்கு நாங்கள் அபேட்சகர்களாக நிற்கப் போவதில்லை. ஆனால் காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு எங்களுடைய முழு ஆதரவையும் அளிக்கிறோம்.

இந்த உதாரணத்தைச் சில இடங்களில் கையாடுவதானால் காங்கிரஸ் அன்பர்கட்குள் ஒற்றுமை ஏற்படலாமல்லவா?

உண்ணாவிரத முடிவு

காந்திஜீ ஒருவார உண்ணா நோன்பு முடிவுற்று வெற்றிகரமாய் வெளிவந்துவிட்டார். ஹரிஜன ஊழியம் செய்ய விரும்புவோர் மனம் இப்போது சாலவும் குளிர்ந்திருக்கக்கூடும். இனிமேல் அவர்கள் அஹிம்சையில் சதா கண்ணுங் கருத்துமாயிருந்து தர்மத்தைக் கடைப்பிடித்து அதன் மூலமே ஹரிஜனத் தொண்டு செய்தல் வேண்டும். காந்திஜீயின் மனப்பான்மையால் ஹரிஜன ஊழியம் எவ்வளவு தூய கருத்துடன் செய்யப்படவேண்டுவதென்பது விளங்கிவிட்டது. ஒவ்வொரு தொண்டனும் எவ்வளவு சிறந்த சீர்திருத்தமாயினும் சரி, பாமர மக்களின் நெஞ்சில் சிறு சிறு துண்டுகளாகச் செலுத்த முயலவேண்டுமேயன்றி ஒன்றாகச் செலுத்திவிட முயற்சிக்கலாகாது. அவ்வாறு செய்ய முயலும்போது தான் பகைமையும் வெறுப்பும் ஏற்படுகின்றன. இலேசு லேசாக அன்போடு கலந்து 10 மாதத்



ஸ்ரீமதி சரோஜினிதேவி சினிமா சென்ட்ரலில் சட்டசபைத் தேர்தலைப்பற்றிச் சொற்பொழிவு நடத்தியபோது எடுத்த படம். படத்தில் திருவாளர்கள் ராஜகோபாலாச்சாரியார், சத்யமூர்த்தி, C. N. முத்துரங்க முதலியார், கெ. பாஷ்யம், ரங்கய்யா நாயுடு முதலியோர் காணப்படுகின்றனர்.

—P. P. B.

பண்டித ஜவஹர்லாலின் விடுதலை

அலகாபாத், ஆகஸ்டு 12.

ஸ்ரீமதி கமலா நேருவின் தேக அசௌக்கியத்தைக் குறித்து பண்டித ஜவர்லால் நேருவைத் தற்காலிகமாக விடுதலை செய்திருக்கிறார்கள்.

இன்று சாயுங்காலம் 8-½ மணிக்கு ஆனந்த பவனத்திற்கு கருகிலுள்ள பிரயாக் ஸ்டேஷனில் ஜவர்லால் வந்து இறங்கினார், ஜில்லா மாஜிஸ்ட்ரேட் வெர்னீடும் நகர டெப்புட்டி சூப்பிரெண்ட்டும் அவரைச் சந்தித்தார்கள். பிரயாணிகள் தங்கும் அறையில் மூவரும் டாக்டர் ஆதாவுடன் சம்பாஷித்தார்கள்.

பிறகு ஸ்ரீமதி ஆர். எஸ். பண்டிட் அவர்களுடைய மோட்டாரில் பண்டித ஜவர்லால் நேரே மனைவி இருக்குமிடத்திற்குச் சென்றார். அவர் முகத்தில் கவலையும் சோர்வும் குடிகொண்டிருந்தன.


ஸ்ரீமதி நேருவின் தேக நிலை முன்போல் தான் இருந்து வருகிறது.

தற்காலிகமாக இரண்டு நாட்கள் விடுதலையே பண்டிதர் அடைந்திருக்கிறார் என்று தெரியவருகிறது.

13-ந்தேதி ஜவர்லாலை பேட்டிகாணப் பலர் சென்றார்கள். அரசியல் விஷயங்களைப்பற்றிப் பேசஇடங்கொடுக்கவில்லை. பத்திரிகைக்காரர்களுக்கும் பேட்டி கொடுக்க மறுத்துவிட்டார்.

காங்கிரசில் உள்ள சச்சரவுகளுக்காக வருத்தப்பட்டார்; ஆனால் அவற்றைப் பற்றித் தமது அபிப்பிராயத்தை வெளியிடவில்லை. இன்று நகர காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும்படி அவரைக் கேட்டார்கள். தம்மால் வரமுடியாததைப் பற்றிப்பண்டிதர் வருத்தத்துடன் தெரிவித்துக் கொண்டார்.

தன்னை விடுவித்ததைப் பற்றி உபசாரமாக ஜில்லா மாஜிஸ்திரேட்டிற்கு எழுதியிருக்கிறார். அதில் எந்த நிபந்தனைகளுக்கும் உட்பட்டு விடுதலையடையத் தாம் விரும்பவில்லைஎன்று எழுதியிருப்பதாகத் தெரிகிறது.



சென்னை நகரசபை மேயரும் அங்கத்தினரும் ஸ்ரீமதி சரோஜனி தேவிக்கு ஓர் வரவேற்புப் பத்திரமளித்தார்கள். படத்தின் நடுவில் ஸ்ரீமதி சரோஜினி தேவியும் மேயர் திரு. W. W. லாடனும் காணப்படுகின்றனர். —P.P.B.

தில் செய்யப்படும் தொண்டு திடீரென அன்பற்று ஒரு மாதத்தில் செய்து விடப் படுகின்ற தொண்டைவிட எத்தனையோ முறை சிறந்தது. முன்னையது பலம் பெற்று வேரோட்டி வளரும்; பின்னையது பகையையெழுப்பித் தொண்டு செய்பவரையே அழிக்கமுயலும். இதனையே மகாத்மாவின் ஏழுநாள் தவம் காண்பித்திருக்கிறது. இந்த ஒப்பற்ற தவத்தின் தன்மையை "தர்மம் சரா, சத்யம்வதா" என்று ஓயாது வாயினல் கூறும் சனதனிகள் அறிவரோ? அவர்கள் இனியேனும் ஹரிஜனேத்தாரணத்தின் மஹிமையை அறியட்டும்.


காரைக்குடியில் விருந்து

கோட்டையூர் திருவாளர் ராம. அழ. சிதம்பரம் திருமதி ரங்கம்மாள் இவர்கட்கு இவர்கள் மறுமணத்தைப் பாராட்டி, காரைக்குடி முத்துப்பட்டினம் திருவாளர் ராம. சுப்பையா அவர்கள் இல்லத்தில் ஓர் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. திரு. ராய. சொக்கலிங்கன் தலைமை வகித்தார். விருந்தினர்க்கு உபசாரப்பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது. திருவாளர்களான ராம. சுப்பிரமணியன், சொ. முருகப்பா, ஈ. வெ. இராமசாமியார் ஆகியவர்களும் திருமதிகளான நீலாவதியார், மரகதவல்லியார் ஆகியவர்களும் பேசினார்கள். விருந்தினர்கள் பேச்சுக்குப் பின் தலைவர் முடிவுரை வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவுற்றது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

"காந்தி" ஜாமீன்

வஜா செய்யப்பட்டது

சென்னையி லிருந்து வெளிவரும் "காந்தி" பத்திரிகை சென்ற பெப்ரவரி 23-ந் தேதி பீஹார் பூகம்பம் சம்பந்தமாக எழுதிய தலையங்கத்தை முன்னிட்டு, ஏற்கெனவே மேற்படி பத்திரிகை ஜாமீனாகக் கட்டியிருந்த ரூபாய் 500ம் பறிமுதல் செய்யப்பட்டுவிட்டது. அதன்மேல் பத்திராசிரியர் திரு. தெ. ச. சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்ய ஜஸ்டிஸுகளான திரு. மாதவன் நாயர், திரு. கார்னிஷ், திரு. பக்கன் ஹாம் வால்ஷ் பிரஸ்தாபத் தலையங்கம் கவர்ன்மெண்டின் மேல் துவேஷத்தை உண்டுபண்ண வில்லையென்று அபிப்பிராயப்பட்டு ஜாமீனை வஜா செய்துவிட்டார்கள்.



புராண விநோதம்

மதுரையை அழிக்கச் சமணர்கள் ஒரு யானையை அனுப்பினர்கள். அந்த யானையை அம்பெய்து கொன்று மதுரையைக் காப்பாற்றினர் கடவுள். கொல்லப்பட்ட அந்த யானை கல்லாகச் சமைந்து, மதுரை—காரைக்குடி வழியில் மதுரைக்குச் சுமார் பத்து மைல் அளவில் ஏறக்குறைய யானையின் உருவத்தைப்பெற்று இன்னும் காட்சி தருகிறது. இம்மலைக்கு 'யானைமலை' யென்று பெயர். திருவிளையாடற் புராணம் யானையெய்த படலம் இதைப்பற்றி விஸ்தாரமாகக்கூறும். இது பச்சைப் பொய் என்று ஆரியச்சிக்காரர் யாராவது கூறுவார்களானல் புராண பக்தர்கள் யானைமலை இன்னும் இருக்கும்போது அது எப்படிப் பொய்யாகும் என்கின்றனர். ஏறக்குறைய யானையைப்போல் ஒரு மலையிருப்பதைப் பார்த்துத்தான் இக்கதை கட்டப்பட்டதென ஆராய்ச்சியாளர் அறைகின்றனர். இத்தகைய கதையைக் கட்டிய ஆசிரியர் சாமர்த்தியசாலிதான்.

* * *

போரில் தங்கள் கட்சியில் சேர்த்துக் கொள்வதற்காகத் துரியோதனன் அர்ச்சுனன் ஆகிய இருவரும் கண்ணபிரானிடம் சென்றனராம். அவர் இருவருக்கும் நல்லவராக நடித்து அர்ச்சுனனுக்குத் தேர்மட்டும் ஓட்டுவதாகவும் பாரதப் போரில் ஆயுதந்தாங்கிப் போர்புரிவதில்லையெனத் துரியோதனனுக்கு வாக்களித்ததாகவும் பாரதம் வசுதேவனைப் படைத்தலை அழைத்த சருக்கம் கூறுகின்றது. இவ் உறுதி மீறிப் படையெடுத்தான் தெய்வமன்னன் என எதிரிகளால் புகார் செய்யப்பட்டதுண்டு. பதினன்காம் போரில் விஜயனைக் காப்பாற்றும் பொருட்டுத் தனது சக்கரம் என்ற படையினல் சூரியனை மறைத்தான் கண்ணன். இதனல் எதிரி ஏமாந்து அர்ச்சுனன் அம்புக்கு இரையானன். "படையெடுத்து வினை செய்யேன் எனப் புகன்ற மொழிதப்பிப் பகைத்தபோரின், இடை யெடுத்த நேமியினல் வெயின் மறைத்தான்" கண்ணன் என உறுமுகின்றன் எதிரி. "படை யெடுத்துப் போர் செய்யவில்லைக் கண்ணன்; கதிரவனை மறைத்தது போர் செய்ததாகாது" என்று சட்டப்படி வாதிக்க இடமுண்டு. அது போகட்டும். இதிலுள்ள விநோதத்தை நோக்கலாம். சூரியனைச் சக்கரத்தால் மறைப்பதெப்படி? சூரியனின் உருவமும் ஒளியும் எவ்வளவு? சக்கரத்தின் அளவு—கனம்—அகலம்—நீளம் எவ்வளவு? பரந்த பெரிய ஒளிபரப்பி விரிந்த உலகமுழுமையும் விளக்கும் சூரியன் என்ற பெரும் பொருளை மறைத்து அதன் ஒளியே தெரியாமற் செய்து இருளடையும்படி செய்துவிட்டது ஒரு சக்கரம் என்ற ஒன்று என்பது விநோதமல்லவா? இது யானையை முறத்தால் மறைத்த கதையைவிடப் பன்மடங்கு பெரியதே யாகும்.

* * *

மநு தர்மங்கூறும் எண்வகை மணத்துள் பைசாச மணம் என்பது ஒன்று. ஒரு பெண் உறங்கும்போது அவளைக் கற்பழித்துவிடுவதுதான் பைசாச மணமாம். ஆ! ஹா!! என்ன அழகான மணம்? இப்படியொரு மணம்! இதற்கொரு தர்ம சாஸ்திரம்!



சென்னைப் பெண்கள் இந்திய சங்கத்தின் தலைவரும் அங்கத்தினரும் ஸ்ரீமதி சரோஜினி தேவிக்கு சனிக்கிழமை மாலையில் எழும்பூரிலிருக்கும் சங்கக் கட்டிடத்தில் ஒரு உபசாரப் பத்திரம் நல்கினர். படத்தில் டாக்டர் ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டி, ஸ்ரீமதி பட்டவர்த்தன், டாக்டர் ஸ்ரீமதி லக்ஷ்மிபதி, ஸ்ரீமதி விசாலாட்சி, ஸ்ரீமதி ஆச்சார்யா, ஸ்ரீமதி எம். எ. ஜானகி முதலியோர் காணப்படுகின்றனர். —P. P. B.

உண்ணாவிரத முடிவு.

ராய. சோ.

(காந்தியடிகளின் தனித்தொகுதி காரணமான உண்ணாவிரத முடிவை முன்னிட்டு ஆங்கீரச புரட்டாதி 15உ வேலூர்ச் சிறையில் பாடப்பெற்றது.)

பெரியோர்கள் திருவுள்ளம் பிழையாதென்
றுலகுணரப் பிறங்கக் காட்டும்
அரியோனே! தீண்டாதார் பிரிவுமுறை
அகற்றீரேல் வாழேன் என்று
உரைகூறி உண்ணாமை மேற்கொண்டு
நாடெல்லாம் ஒன்று கூடிச்
சரிதானென் றிடவெற்றி சார்காந்தி!
பல்லாண்டு தலத்தில் வாழ்க! (1)

"செயற்கரிய செய்வர்பெரி யா"ரென்னப்
புலவர்பிரான் செப்பும் உண்மை
மயக்கமற உலகுணரக் காட்டினைநீ!
மாகாந்தி! மண்ணின் மீது
தயக்கமின்றிக் கொள்கைக்காச் சத்தியங்கொண்
டுயிர்விடவும் சமைந்த சான்றோர்
சயக்கொடிநாட் டிடுவரிதிற் சற்றுமைய
மில்லையெனல் சரியே யன்றோ? (2)

அரியவினை யாதொன்றும் அவனியிலே
நினக்கில்லை! ஐயா! யாரும்
கருதரிய காரியத்தைக் கடிதினில்நீ
முடித்திட்டாய் காந்தி வள்ளால்!
பெரியஅர சாங்கத்தார் பெரிதாய்ந்து
முடித்தசெயல் பிளப்ப தென்ப
தரிதரிது! அறவடிவாய் அவதரித்த
நினக்கன்றி யார்க்கும் அம்மா! (3)

யார்வல்லார் ஆங்கிலத்தார் செய்தமுடி
வதைமாற்ற; அறமே பூண்ட
போர்வல்லாய்! புண்ணியனே! போர்ப்பந்தர்
பிறந்தருளும் புனித வாழ்வே!
பார்வல்ல மன்னவர்க்கும் பன்னரிய
செய்கைதனைப் படையி லாத
நார்வல்ல சிற்றுருவம் நண்ணுவித்தல்
காட்டினைநீ! நற்பு விக்கே! (4)

மண்முழுதும் தனியாளும் மன்னவர்க்கும்
ஆகாத வலிமை யெல்லாம்
உண்ணிறைய ஒளிபெருக்கி ஊனொடுக்கிப்
புலனையெலாம் ஒல்லும் ஆற்றால்
கண்ணடக்கி மற்றவர்க்கே கடலுலகில்
வாழுபெருங் கவின மைந்த
எண்ணறிஞர்க் கெளிதெனஇன் றெல்லவர்க்கும்
காட்டினைநீ! எந்தாய் காந்தி! (5)

தொடத்தகார் எனச்சொல்லும் நம்மரிய
துணைவர்தனித் தொகுதி நாட்டைக்
கெடுத்திடுமச் சோதரரைக் கீழ்நிலைநின்
றுயர்த்தாது கீழ்மேல் என்னும்
மடத்தையறப் போக்காது வளர்த்திடுமேல்
மேலுமென மனத்துட் கொண்டு
திடத்துடனல் உயிர்விடவும் துணிந்துநின்று
சிறந்தவெற்றி சேர்ந்தாய் காந்தி! (6)

வாய்கொண்ட மட்டும்தீண் டாதார்க்கே
வாழ்கின்றோம் என்று பல்லோர்
பேய்கொண்டார் போல்மேடைப் பேச்சிடுவார்!
செய்கையெனில் பின்னே போவார்!
தாய்கொண்ட தளைநீக்கத் தனிச்சிறையைச்
சார்ந்தோனே! தீண்டா தார்க்கா
நீகொண்ட செயல்மறைக்க நிலத்திலினி
எவர்க்கொண்ணும்? நேயக் காந்தி! (7)

கோயிலிலே நுழையுரிமை தீண்டார்க்கு
வேண்டுமெனக் கூட்டம் கூடி
வாயதனால் வகுத்துரைப்பார்! மாபெரிய
தீர்மானம் வரைவார்! ஆனால்,
ஏயசெயல் ஒன்றாற்றார்! இடரென்றால்
ஓடிடுவார்! எந்தால்! நின்போல்
நேயமுளார்க் கல்லாமல் நேர்வெற்றி
பெறலெளிதோ? நீள்சீர்க் காந்தி! (8)

நினக்கரிய செயலிந்த நிலத்திலிலைப்
பிறர்வாழ்வே நிதம்வி ரும்பென்
மனக்கினிய மாமணியே! மாத்துமப்பேர்
வாய்த்தபுகழ் வள்ள லே!நம்
வனப்புடைய பாரதத்தாய் மணிமுடிபெற்
றரசாள்நாள் சேணில் இல்லை
தனக்கெனவா ழார்நினைப்புச் சமைந்திடுதல்
சரதமிதில் தடையும் உண்டோ? (9)

மண்ணனைத்தும் அறம்பெருகி மக்களெலாம்
வாழுதற்கும் மண்ம கட்குக்
கண்ணனைய பாரதத்தாய் கைத்தளைபோய்ப்
பண்டைநாட் கவின டைந்தே
என்னுடைய முடிசூடி இனியஅர
செய்துதற்கும் இந்நி லத்தில்
தண்ணளியே சார்ந்தொழுகு தனிக்காந்தி!
பல்லாண்டு தழைத்து வாழ்க! (10)

"ஊழிய"னைப் பற்றிய மதிப்புரைகள்

"செட்டிநாடு"

12-7-34.

காரைக்குடியில் சுமார் பத்தாண்டுகள் வரை நடைபெற்று வந்த "ஊழியன்" பத்திரிகையையும், அதன் ஆசிரியர் திருவாளர் ராய. சொக்கலிங்கம் அவர்களையும், நேயர்களுக்கு அறிமுகம் செய்யத் தேவையில்லை. சென்ற வாரம் முதல் "ஊழியன்" சென்னையினின்றும் வாரப் பத்திரிகையாக வெளி வருகிறது. இதன் முதல் இதழ் வரப்பெற்றோம். சித்திரங்கள் சகிதமாகவும், பல அரிய கட்டுரைகளுடனும், சிறு கதைகளுடனும் பத்திரிகை விளங்குகிறது. இதன் வருடச் சந்தா ரூ. 6. தனிப்பிரதி அணா 2. அதன் நிர்வாகஸ்தர்களின் முயற்சி கைகூடும் என்று நம்புகின்றோம்.

"ஹிந்து"

31-7-34.

சென்னை நகரில் வெளியாகும் தமிழ் வாரப் பத்திரிகைகளுடன் "ஊழியன்" நன்கு வரவேற்கப்படவேண்டிய ஓர் பத்திரிகையாகும். பதினொன்கு வருடங்கட்கு முன்பு அது ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பதினொன்கு வருடங்கட்குள்ளும் மும்முறை அதனை நிறுத்தவேண்டி வந்தது. இருமுறை நின்றது ராஜிய காரணங்களாலேயாம். கடைசியாக 1933-ல் நிறுத்தப்பட்டு இம்மாதத்தில் திரும்பவும் பிரசுரம் செய்யப்பட்டது. அதன் வாழ்க்கை முழுதும் அதன் திறமை வாய்ந்த ஆசிரியர் அதன் மேலான தன்மையையும் அச்சமற்ற சுதந்திர மனப்பான்மையையும் கடுகத்தனையேனும் தளரவிடாது பாதுகாத்துக் கொண்டார். தற்போது தோன்றியிருக்கும் வரிசையின் முதல் இதழிலிருக்கும் கட்டுரைகளில் பல ஆசிரியரின் பேனாவின் வெளியீடுகளே. பத்திரிகை பல படங்களுடன் அமைந்திருக்கிறது. கட்டுரைகளும் பல விஷயங்களைத் தழுவி அமைந்திருக்கின்றன. இப்பத்திரிகைக்குச் செழிப்பும் பிரயோஜனகரமுமான வாழ்க்கையை விரும்புகிறோம்.

"ஆனந்த விகடன்"

5—8—34.

நேயர்களுக்கு இன்று நமது சகோதரப் பத்திரிகாசிரியர் ஒருவரை அறிமுகம் செய்து வைக்க விரும்புகிறேன். இவர் பெயர் ஸ்ரீமான் ராய. சொக்கலிங்கம்.

"என்ன, ராய. சொக்கலிங்கம் அவர்களை எங்களுக்குத் தெரியாதா? தனவணிக நாட்டில் காந்தியத்துக்கு ஒரு பற்றுக்கோல்போல் இருந்தவரல்லவா? அவரை என்ன நீங்கள் அறிமுகம் செய்து வைப்பது?" என்று கேட்கிறீர்கள்.

ரொம்ப வந்தனம். ஸ்ரீமான் ராய. சொக்கலிங்கம் அவர்களை உங்களுக்குத் தெரியுமென்றால் அவருடைய பத்திரிகையைப் பற்றியும் அவசியம் தெரிந்தே இருக்கும். இடையில் சிறிது காலம் நின்றிருந்த "ஊழியன்" பத்திரிகை இப்பொழுது சென்னை நகரிலிருந்து புதிய அழகிய தோற்றத்துடன் வெளிவரத் தொடங்கி யிருக்கிறது.

"ஊழியன் எப்போதுமே அரசியலிலும் சமூகத் துறையிலும் தீவிர வாதி. வழவழ கொழகொழப் பேச்சே அறியாதவன். இப்பொழுது உயர்தரப் பத்திரிகைக் குரிய பல சிறந்த அம்சங்களுடனும் ஏராளமான சித்திரப் படங்களுடனும் வெளி வருகிறான். தமிழ் நாட்டார் ஊழியனுக்குச் சிறந்த வரவேற்பளிப்பார்கள் என்பதில் எனக்கு யாதொரு சந்தேகமும் இல்லை.

"குமரன்"

9-8-34.

காரைக்குடியிலிருந்து வெளி வந்து கொண்டிருந்த 'ஊழியன்' பத்திரிகை சென்ற மாதமுதல் சென்னையிலிருந்து வெள்ளி தோறும் வெளி வருகின்றது. இதுவரை வெளிவந்துள்ள ஐந்து இதழ்களும் மிகுந்த வனப்புடன் விளங்குகின்றன. ஆப்டோன் படங்களும் வேடிக்கைப் படங்களும் நிரம்பி யிருக்கின்றன. கட்டுரை, கதை, பாட்டு, விகடம், குறிப்புக்கள் போன்ற பல அங்கங்களுடன் மிளிர்கின்றது. ராய. சொ. அவர்கள் சிறையிலிருந்த காலத்தில் பாடிய பாட்டுகள் இதழ் தோறும் வெளி வருகின்றன. என்றும் போல் காந்தியடிகளையும் காங்கிரசையும் பற்றிச் செல்லும் கொள்கையுடன் விளங்குகிறது. இனிய தமிழில் சிறந்த கருத்துக்களைக்கொண்டு புத்துயிரும் புதுத் தோற்றமுங் கொண்டு வெளிவரும் ஊழியனைத் தமிழ் மக்கள் யாவரும் ஆர்வமுடன் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

பட்டாஸ் இறக்குமதிக்கு தடை.

1935-ம் வருஷம் ஜனவரி மாதம் 1ந் தேதி முதல் பிரஞ்சிந்தியா எல்லைக்குள் பட்டாஸ் உற்பத்தி செய்யவோ அல்லது இறக்குமதி செய்யவோ கூடாதெனக் கவர்னரால் பிரஞ்சிந்திய கெஜட்டில் ஓர் உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பட்டாஸ் செய்ய சம அளவான பொட்டாஷியம் குளோரேட்டும் அர்ஸீனிக் பை ஸல்பேட்டும் உபயோகிக்கப்படுவதின் காரணமாகப் பொதுப் பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படுமெனக் கூறும் 1875-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 24-ந் தேதிய வெடி மருந்துகள் சட்டம் 13—படியும், ரெவினியு இலாகா சிபார்சின்படியும் மேற்படி உத்திரவு பிரஞ்சிந்திய சர்க்காரால் போடப்பட்டிருக்கிறது. இதுவரையில் பிரஞ்சிந்தியாவில், தீபாவளி கார்த்திகை முதலிய உற்சவாதிகளுக்கு ஆயிரக் கணக்கில் பட்டாஸ்கள் இறக்குமதி செய்யப்பட்டனவென்பது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். சீனாவிலிருந்து 'எலக்டிரிக்' பட்டாஸ்களும் வரவழைக்கப்பட்டதுண்டு. இவ்வுத்திரவின் காரணமாக பிரஞ்சிந்திய வர்த்தகர்களிடையே மிகுந்த பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

கணக்குப் பார்க்கும் குதிரைகள்

பிரெஞ்சு நூலாசிரியரான
மாரிஸ் மெட்டிர் லிங்க் எழுதியது.

சற்றேறக்குறைய இருபதாண்டுகட்கு முன் பெர்லின் நகரில் விலெம் வான் ஆஸ்டன் என்னும் ஒரு கிழவன் இருந்தான். அவனுக்கு மனித வருக்கமென்றால், மட்டில்லாத வெறுப்பு. காலந்தள்ளுவதற்குப் போதுமான சொத்துடையவன். அவனது நடவடிக்கைகள் பார்ப்போருக்குச் சற்று அசாதாரணமாகத் தோன்றும். அவனை ஒரே ஒரு கருத்துத்தான் பித்துப் பிடித்ததுபோல் பற்றிக் கொண்டிருந்தது. அதாவது, விலங்குகளின் அறிவைக் குறித்த ஆராய்ச்சி. முதலில் குதிரை யொன்றைப் பழக்கிப் பயிற்றுவிக்கத் தொடங்கினான். அது எவ்வித முடிவான பலனையுங் கொடுக்கவில்லை. பின்னர் 1900-ல் ருஷிய தேசக் குதிரையொன்று அவனுக்குக் கிடைத்தது. இதற்கு 'ஹான்ஸ் குலூஜ்' (Hanskluge) என்று பெயர். இந்தக் குதிரையே இதுகாறும் விலங்கு உலகின் அறிவைப் பற்றிக்கொண்டிருந்த கொள்கைகள் அனைத்தையும் அடியோடு கவிழ்த்து, இந்நாள் வரையிலும் மனிதன் எதிர்பாராத பல விந்தைகளைப் புரிந்தது.

வான் ஆஸ்டனுடைய விடாத முரட்டுப் பிடிவாதத்தால் அக்குதிரைக்கு நாளுக்கு நாள் அறிவு பெருகிக்கொண்டு வந்தது. இந்த அறிவு வளர்ச்சியைப் பற்றி ஒருவர் எழுதுவதாவது:—

சாதாரணக் கருத்துக்களான வலம், இடம், மேல், கீழ் முதலியனவற்றை நன்றாகப் பழக்கின பிறகு, அதன் எஜமானன் அதற்குக் கணிதம் கற்பிக்கத் தலைப்பட்டான். ஹான்ஸ் (குதிரை) ஒரு மேசைக்குக் கொண்டுவரப்பட்டது; மேசை மேலே முதலாவது, ஒன்றும், பிறகு இரண்டும், பிறகு பலவாகவும் சிறு ஊசிகள் வைக்கப்பட்டிருந்தன. வான் ஆஸ்டன். ஹான்சின் அருகில் மண்டி போட்டுக் கொண்டு, ஒவ்வொரு எண்ணையும் உரக்கச் சொன்னான். உடனே குதிரையை எத்தனை ஊசிகள் இருக்கின்றனவோ அத்தனை தாம் குளம்பினால் தட்டச் செய்தான். சிறிது நாட்களிலெல்லாம், ஊசிக்குப் பதிலாக கருப்புப் பலகையில் எண்கள் எழுதப்பட்டன. பின் நடந்தது மிக அற்புதம். குதிரை மேற் சொன்னவாறு எண்ணுவதல்லாமலும் தானே பல கூட்டல் கழித்தல் முதலியனவற்றைச் செய்யவும், சிறு கணக்குகளைப் பார்க்கவும் திறமை அடைந்தது.....................

ஆனால், ஹான்சுக்குக் கணக்குப் போடுவது மட்டுமா முடியும்? அதற்குப் படிக்கத் தெரியும்; அது ஒரு சங்கீத வித்வானுமாகிவிட்டது; இனிமையான சுரங்களுக்கும் அல்லாத சுரங்களுக்கும் வேற்றுமை கண்டது. அபார ஞாபக சக்தி இருந்தது. வாரத்தின் ஒவ்வொரு நாளிலும் என்ன என்ன தேதி என்று சொல்லும். சுருக்கத்தில், 14 வயதுடைய ஒரு சுறுசுறுப்பான பையன் செய்யக்கூடியவற்றையெல்லாந் தானுஞ் செய்துமுடிக்கும் வல்லமை பெற்றுவிட்டது.”

இந்த விந்தைப் பயிற்சியைப் பற்றிய செய்தி காட்டுத் தீப்போல் பரவிவந்து விட நாலா பக்கங்களிலுமிருந்து வான்ஆஸ்டனுடைய குதிரை லாயத்துக்குப் பிரபல மனிதர்களெல்லாம் விஜயஞ் செய்தார்கள். சமாசாரப் பத்திரிகைகள் இந்த விஷயத்தில் ஈடுபட்டன. இருகட்சியார் கிளம்பினர். இந்த அற்புதச் செய்கைகளெல்லாம் உண்மையென்று ஒரு சாராரும், வெறும் பொய்ப் புரட்டு என்று மற்றொரு கட்சியாரும் வாதித்தனர். 1904-லே இதனை ஆராய விஞ்ஞானக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதில் மனோ தத்துவ நூல், உடற்கூற்று நூல் முதலிய கலைகளில் வல்லுநரான போசிரியர்களும், மிருகக் காட்சி சாலையின் தலைவர் ஒருவரும், ஸர்க்கஸ் கம்பெனியின் மானேஜர் ஒருவரும், மிருக வைத்தியர்களும், குதிரைப் படை வீரர்களும் உறுப்பினராக இடம் பெற்றிருந்தனர். இந்தக் கமிட்டிக்குச் சந்தேக ஏதுவான எதுவும் புலப்படவில்லை; ஆயினும் அவர்கள் அதைப்பற்றி எதுவுமே கூறத் துணியவில்லை. இரண்டாவது முறையாக, வேறொரு கமிட்டி நிறுவப்பட்டது. இதன் உறுப்பினரிலே, ஹெர் ஆஸ்காற் பங்கஸ்ட்டு (Herr Oskar Pungst) என்ற பெர்லின் மனோ தத்துவ ஆராய்ச்சிக் கழகத்தைச் சார்ந்தவரும் ஒருவராவர். இவர், பலவிதப் பரீட்சைகள் செய்து முடிவாகப் பெரியதோர் அறிக்கை வெளியிட்டார். குதிரைக்கு எள்ளளவும் விசேஷ அறிவு கிடையாதென்றும், அது எண்ணையோ எழுத்தையோ தெரிந்து கொள்ளவில்லையென்றும், உண்மையில் அதற்குக் கூட்டவோ கணக்குப் போடவோ தெரியாதென்றும், ஆனால் அதன் எஜமானன் செய்துவரும், கணக்குப் புலனாகாத மிகமிக நுண்ணியதான போதமில்லாத சில ஜாடைகளையே அது அனுசரித்து வந்ததேயல்லாமல் வேறொன்றும் அற்புதமில்லையென்றும் ஆட்சேபித்தார்.

பொதுஜன அபிப்பிராயம் உடனேயே திடீரென்று புரண்டு விட்டது. பாவம்! வான்ஆஸ்டன் மறுத்துப் பார்த்தான்; பயனில்லை; ஒருவரும் அவனைச் சட்டை செய்யவில்லை; இதுவே அவன் ஆயுளுக்கு உலையாகிவிட்டது. ஏகாந்தனாகி உலகத்தின் மேல் தீரா வெறுப்புக்கொண்டு 1909-ல் ஜூன் மாதம் தன்னுடைய 71-வது வயதில் ஆஸ்டன் உயிர் துறந்தான்.

அவனுக்கு ஹெர்கிரால் என்று பெயருள்ள ஒரு சீடனிருந்தான். பொதுஜன ஏளனத்தால் எள்ளளவும் ஆட்டங் கொள்ளாதவனாயிருந்தான் ஹெர் கிரால். இவன் எல்பர் பெல்டிலுள்ள ஒரு பெருத்த வர்த்தகன். வான்ஆஸ்டனின் விடாமுயற்சியிலே பேரார்வங் கொண்டவன். முதியோனின் அந்திய காலத்தில் அந்த அற்புதக் குதிரையின் கல்வியிலே தானும் ஈடுபட்டதுமன்றி சில வேளைகளில் தானே அதற்குப் பாடங்களும் கற்பித்திருக்கின்றான். வான் ஆஸ்டன் தனது உயிலின்படி லூஜ் ஹான்ஸைத் தன் சிடனுக்கு உரியதாக்கிப் போயினான். இதைத் தவிரத் தானாகவே கிரால் இரு அரபிக் குதிரைகளை வாங்கினான். இவற்றிற்கு மகம்மது என்றும் ஜரிப் என்றும் பெயர் வழங்கப்பட்டன. இவைகளின்

அபார புத்தி சக்தி சில நாளிலெல்லாம் ஹான்ஸையே வென்றது. ஆகவே விஷயம் திரும்பவும் பெருங் கிளர்ச்சி யடைந்தது.

அவனது பாடஞ் சொல்லும் முறையும் வான் ஆஸ்டனின் முறையிலிருந்து வேறுபட்டிருந்தது. முதியோன் தனது நாற்கால் மாணாக்கன் வேண்டுமென்றே முரண்டு பிடித்துத் தன்னை வருத்துவதாகக் கருதி வந்தான். ஆகவே அவனுக்கு அதன்மேல் வெறுப்பு மிகுந்திருந்தது. இருவரும் இரண்டு பகைவரைப் போலவே ஒருவரையொருவர் மதித்து வந்தனர். ஆனால், நேர்மாறாகக் கிரால் தன்னுடைய மாணவர்களை மிகுந்த பாசத்தோடு நடத்தி வந்தான். இந்த அன்பின் தொடர்பால் விலங்கியல்பு குன்றியது. பார்த்தால், தந்தை தன் குழந்தைகளோடு உரையாடுவது போலிருக்கும்' அவர் சொல்வதையெல்லாம் அவைகள் கவனமாய்க் கேட்பது போலவும் அவற்றையெல்லாம் மனதில் பதித்துக்கொள்வது போலவும் தோன்றும். அவைகள் ஏதாவது ஒரு வாசகத்தையோ அல்லது அப்பியாசத்தையோ அறிந்துகொள்ளவில்லை போல் தோன்றினால், அவர் அதைத் திரும்பவும் ஒவ்வொன்றாகப் பிரித்து, பதச் சேதஞ் செய்து, அன்வயித்துப் பத்துத்தடவை விடாது, தாயினும் மிகுந்த பரிவோடு கற்பிப்பார். ஆகவே அவைகளின் புத்தி சக்தியின் வளர்ச்சி வியப்பாக விருந்து வந்தது. முதற் பாடம் தொடங்கின இரண்டு வாரங்கட்குள் மகம்மது சிறு கூட்டல் கழித்தல் முதலியவற்றைத் தப்பின்றிச் செய்யக் கற்றுவிட்டது. ஒற்றைகளுக்கும் பத்துகளுக்குமுள்ள வேற்றுமையை அறிந்துகொண்டது. ஒற்றை எண்களைக் குறிக்கத் தன் வலது காலால் அடிக்கும். பத்தெண்களைக் காட்டத் தன் இடது காலால் தட்டும். கூட்டல் கழித்தல் குறிகளின் பொருளை அறிந்துகொண்டது. பின்னும் நான்கு நாளில் அது பெருக்கல் வகுத்தல் ஆரம்பித்துவிட்டது. நான்கு மாத காலத்தில் கன அளவு முதலியவற்றைத் தெரிந்துகொண்டது. நெடுங் கணக்கிலுள்ள எழுத்துக்களைச் சொற்களாகக் கூட்டவும் படிக்கவும் கற்றுவிட்டது.

ஜாரிப்பும் அறிவு வளர்ச்சியில் தன் ஒரு சாலை மாணாக்கனை மகம்மதை ஒத்ததாகிவிட்டாலும், பெருங்கணக்குப் போடுவதில் மகம்மதுக்குப் பின்னிட்டதுதான். இவ்வாறாக மகமதும் ஜாரியும் அவைகளின் முன்னிலையில் பேசப்பட்ட வார்த்தைகளைத் திரும்பச் சொல்வது, பார்க்க வருகிறவர்களுடைய பெயரின் எழுத்துக்களைக் கூட்டுவது, இட்ட கேள்விகளுக்குப் பதிலுரைப்பது, சில வேளைகளில் தாமாகவே அவைகள் சில செய்திகள் தெரிவிப்பது முதலியனவற்றைச் செய்து வந்தன. ஆதலால் விஞ்ஞானக் குழுக்கள் ஒன்றன் பின் ஒன்றாக எல்பர்பீல்டை அடைந்தனர். அவர்களுடைய அறிக்கைகளும் அளவிலாதவாயின. அவர்கள் "மனோதத்துவக் கலா உலகில் இதுகாறும் எழுந்தனவற்றி லெல்லாம் சாலவும் கிளர்ச்சி தருவது" என்று அறுதியிட் டுரைத்தார்.

ஜாதி இரண்டொழிய வேறில்லை!

மதனாம்பாள்

அல்லது

மறைந்த மாது

(திரு. கே. வி. எஸ். வாஸ்)

“காதலா! தினம் பொழுது விடிந்ததும் பல் விளக்குவதற்கு முன் இந்தப் பத்திரிகைகளைப் புரட்டிப் புரட்டிப் பார்க்கிறீர்களே! இதில் என்னதான் தினம் விசேஷமிருக்கிறது?” என்றாள் வேதவல்லி.

“என்ன விசேஷமா? இதோ பார்!

செட்டியார் பாங்கில் ரூ. 50,000 களவு

பாங்கு குமாஸ்தா மாயமாய் மறைந்தான்

கோடவாசலில் கொடூரமான கொலை!

சமயபுரத்தில் சமயல்காரியின் மறைவு

இவைகளெல்லாம் பார்த்தாயா? ஹூம்! இவ்வளவு விசேஷங்களிருக்கையில் என்ன விசேஷமிருக்கிறதென்கிறாயே!” என்றான் அவள் கணவனான துப்பறியும் பாஸு.

“ஏன் இவைகளில் எதிலேனும் துப்புத் துலக்குவதாக உத்தேசமோ! ஹூம் இந்தத் துப்பறியும் உத்தியோகஸ்தர்களையும் பேனா பிடித்த ஆசிரியர்களையும் மணந்து கொண்டால் அவஸ்தைதான். ஒருவர் வீட்டிலேயே தங்குவதில்லை! மற்றொருவர் வீட்டில் தங்கினாலும் பேனாவை விடுவதில்லையே யன்றி பெண்டாட்டியைக் கண்ணெடுத்துக்கூடப் பார்ப்பதில்லை...............!” என்று வேதவல்லி சொல்லிக்கொண்டேயிருக்கையில் யாரோ ஒருவர் உடனே காண வேண்டி வெளியிற் காத்திருப்பதாகச் சேவகனொருவன் உள் நுழைந்து தெரிவித்தான். “ஹூம்! அதோ வந்துவிட்டது சனியன்! நீங்கள் தினம் வீட்டில் தங்குவதே நான்கு நிமிடம். அப்பொழுதுங்கூட யாராவது வந்து தொலைந்து விடுகின்றார்கள்!” என்று முணுமுணுத்துக் கொண்டே வேதவல்லி உட்புறஞ் செல்லவும், தடித்துக் கருத்த ஓர் மனிதர் வந்தனஞ் செய்துகொண்டே அறையினுள் நுழைந்து ஓர் ஆசனத்திலமர்ந்தார்.

“நண்பரே! தாங்கள் யார்? என்னை நாடிவந்த காரியமென்ன?” என வினவினார் பாஸு.

“என் பெயர் ரங்கசாமியென்பது. இவ்வூரின் ஐந்து மைல்களுக்கப்பாலுள்ள சமயபுரம் என்னும் ஊரில் ஓர் சாப்பாட்டுக் கிளப் வைத்திருக்கிறேன்.

“களவு நடந்த செட்டியார் பாங்கு இருக்கிறதே அந்த சமயபுரத்திலா?” என்று இடை மறித்து வினவினார் பாஸு.

“ஆம்! இன்று காலைப் பத்திரிகைகளில்கூடப் பார்த்திருக்கலாம். என் ஓட்டலில்கூட அதே பாங்குக் கிளார்க்கு ஒருவர்கூட விருக்கிறார்!”

“அதே பாங்குக் கிளார்க்கா? அவர் உங்கள் ஓட்டலில்தான் தங்கியிருக்கிறாரோ? அவர் பெயர் என்னவோ?” என்றார் பாஸு.

“அவரை ஜகன்னாதன் என்றழைப்பார்கள். சென்ற நான்கு வருடங்களாக எங்கள் ஓட்டல் மாடியிலேயே தான் தங்கியிருக்கிறார். அதைப்பற்றி இப்பொழுதென்ன? என் விஷயத்தைச் சொல்லுகிறேன், கேளுங்கள். என் ஓட்டலில் மதனாம்பாள் கமலம் என்ற இருபெண்கள் சமயல் செய்கின்றனர். ஒவ்வொருவரும் இரண்டிரண்டு நாட்களாக முறை செய்துகொண்டு சமயல் செய்வது வழக்கம். இரண்டு நாட்கள் முன்னர் மதனாம்பாளுக்கு விடுமுறை நாளாகையால் ஏதோ புடவைகள் வாங்கவேண்டுமென்று கடைவீதிக்குச் சென்றவள் திரும்பி வரவேயில்லை. நேற்றுக் காலை ஒருவன் மேல்நாட்டான்போல் உடையணிந்துகொண்டு மதனாம்பாள் தன் பெட்டிகளையெல்லாம் கொண்டுவரும்படி தன்னை யனுப்பியதாகக் கூறி ஒரு கடிதத்தை அளித்தான். அதில்,

நண்பரே,

நான் திடீரென வேலையை ராஜிநாமா செய்வதற்கு என்னை மன்னிக்கவும். இக்கடிதம் கொண்டு வருபவர் வசம் என் பெட்டிகளை யெல்லாம் அனுப்பி வைக்கும்படி வேண்டுகிறேன்.

தங்கள்,
மதனாம்பாள்.

என்று எழுதியிருந்ததேயன்றி இப்பொழுது எங்கிருக்கிறாளென்றோ வேலையை ஏன் ராஜிநாமா செய்தாளென்றோ ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. கடிதம் கொண்டு வந்தவனிடம் மதனாம்பாளைப்பற்றிச் சில கேள்விகள் கேட்டும் அவன் பதிலளிக்க மறுத்து விட்டான். நான் தயாராகப் பூட்டி ஸீல் வைக்கப்பட்டிருந்த அவள் பெட்டிகளையெல்லாம் அந்த மனிதன் மூலம் அனுப்பி விட்டேன்............!

“ஆனால் மதனாம்பாள் வீட்டை விட்டுப் போகும் போதே தன் பெட்டிகளையெல்லாம் பூட்டி ஸீல் வைத்து விட்டுதான் சென்றிருக்கிறாளோ” என்றார் பாஸு.

“ஆம்! இதைக் கவனித்தால் வேலையை ராஜிநாமா செய்யும் யோஜனை மதனாம்பாளுக்கு வெகு காலமாகவே யிருப்பதாகத் தெரிகிறது. அவளைப்போல் வெகு திறமையாகச் சமையல் செய்ய வேறு எவராலும் முடியாது. என் ஓட்டலுக்குப் பலர் சாப்பிட வருவதன் காரணம் அவளே. அவள் எங்கிருந்தாலும் கண்டு பிடித்து மறுபடி வேலைக்கு வரும்படி செய்ய வேண்டும். முதலில் அவள் எங்கிருக்கிறாளென்பதைக் கண்டு பிடிக்க வேண்டும்!” என்றார் ரங்கசாமி.

“மதனா எப்படிப்பட்டவள்?” என்றார் பாஸு. வயது பதினெட்டுத் தானிருக்கும். பருவ மங்கை; மிகவும் அழகான பெண். அவள் அழகே ஆடவர்களை என் ஓட்டலுக்குச் சாப்பிட இழுப்பது. சமையல் செய்வதில் மிகவும் கெட்டிக்காரி. ஆனால் பண ஆசை கொண்டு கொஞ்சம் முறை தவறிச் சில சமயங்களில் நடப்பதாகக் கேள்வி. ஆனாலும் நான் அதைப்பற்றிச் சிறிதும் கவனிப்ப

தில்லை. எங்கு வேலையை விட்டுப் போய் விடுவாளோ வென்று அஞ்சி அவள் மனம் கோணும் வண்ணம் நான் நடந்து கொள்வதில்லை !" என்றார் ரங்கசாமி.

சரி, மதனம்பாளுக்கும் கமலத்திற்கும் ஏதேனும் சண்டை சச்சரவுகளுண்டோ ?" என்றார் பாஸு.

"ஹூம்! அடிக்கடி இருவரும் ஒருவரை யொருவர் தூஷித்துக்கொள்வதுண்டு. ஆனால் சில நிமிடங்களுக்கெல்லாம் சண்டைகளை மறந்து நண்பர்களாகி விடுவர். இருந்தாலும் நான் மதனையிற்கு அதிக உரிமை கொடுப்பதாகக் கருதி கமலத்திற்கு அவளிடம் சிறிது பொருமையே!"

"சரி, பாங்குக் கிளார்க்கு ஜகன்னாதன் எப்படிப்பட்ட மனிதரோ?"

"ஏன், தங்கமான மனிதர்! சாப்பாட்டு நேரம் தவிர மற்ற நேரங்களில் அவர் அதிகமாக ஒருவருடனும் பேசுவதில்லை. மாடியிலுள்ள நான்கு அறைகளுள் மூன்றில் நான், கமலம், மதனா மூவரும் தங்கி யிருக்கிறோம். நான்காவது அறையில் ஜகன்னாத னிருக்கிறார்!"

"50,000ரூவைச் செட்டியார் பாங்கியினின்று களவாடிக் கொண்டு மறைந்த சச்சிதானந்தம் என்னும் கிளார்க்கிற்கும் மதனம்பாளிற்கும் ஏதேனும் சம்பந்தமிருக்குமென் றெண்ணுகிறீர்களோ?" என்றார் பாஸு.

"ஒருக்காலுமிருக்க விடமில்லை. சச்சிதானந்தம் அடிக்கடி ஜகன்னாதனைப் பார்க்க வருவதுண்டேயாயினும் கமலத்துடனோ அல்லது மதனம்பாளுடனோ அவன் பேசுவது மில்லை. இவர்களும் அவனுடன் பேசுவதில்லை !"

"சரி, பாங்கியில் களவு நடந்ததும், மதனம்பாள் மறைந்ததும், சச்சிதானந்தம் மறைந்ததும் ஒன்றிற் கொன்று சம்பந்தப்பட் டிருக்குமோ வென்று நினைத்துத்தான் கேட்டேன். பாங்கியில் களவு நடந்த மறுதினம் தான் மதனம்பாள் மறைந்தது. அன்று ஜகன்னாதன் ஓட்டலிலிருந்தாரா அல்லது ஆபீஸிலிருந்தாரா ?" என்றார் பாஸு.

"மதனம்பாள் மறைந்த தினத்தன்று ஜகன்னாதன் ஆபீஸுக்குப் போகவில்லை. அவருக்கு உடம்பு சௌகரியமில்லையாம் ! முதல் நாள் இரவு களவு நடந்திருப்பதாகக் கேள்விப்பட்டதும் ஜகன்னாதன் திடுக்கிட்டுப் போனாரேயாயினும் அவர் தேக சௌகரியம் ஆபீஸுக்குச் சென்று விஷயத்தை விஜாரித்து வா அனுமதிக்கவில்லை !"

"அன்று ஜகன்னாதனை யாரேனும் ஓட்டலில் சந்தித்தார்களா ?" என வினவினர் பாஸு.

"நான் அன்றுகாலை பக்கத்துக் கிராமத்திற்குச் சென்றிருந்தே னாகையால் ஜகன்னாதனை யார் சந்தித்தார்க ளென்று தெரியாது. நான் கிராமத்தினின்று திரும்பி வந்தவுடன் தான் பாங்குக் களவைப்பற்றிக் கேள்விப்பட்டேன். அன்றிரவுதான் மதனம்பாள் திரும்பி ஓட்டலுக்கு வாராமலிருந்தது. மறுநாட் காலை, அதாவது நேற்றுக் காலைதான் மதனம்பாள் தன் சாமான்களை அனுப்பி விடும்படிக் கடித மனுப்பியது!" என்றார் ரங்கசாமி.

"சரி, என்னால் இயன்ற வரையில் மதனம்பா ளிருக்குமிடத்தைக் கண்டு பிடிக்க முயற்சி செய்கிறேன். அதற்கு முன் நான் கமலத்துடன் சற்று பேச விரும்புகிறேன். அவள் மூலம் மதனம்பாளின் இருப்பிடத்தைப் பற்றிய உளவுக ளேதேனும் கிடைத்தாலும் கிடைக்குமென்று நம்புகிறேன். நீங்கள் முதலில் செல்லுங்கள். இன்னும் சிறிது நேரத்தில் நானும் ஓட்டலுக்கு வருகிறேன் !" என்று கூறி ரங்கசாமிக்கு விடைகொடுத் தனுப்பிவிட்டு, கோபித்துக்கொண்டு உள்ளே சென்ற தன் மனைவியைச் சமாதானப்படுத்தும் பொருட்டு "ஹலோ! மை டியர் வேதா!" என்று கூப்பிட்டுக் கொண்டே வேதவல்லியின் அறையை நோக்கிச் சென்றார் பாஸு.

* * *

மதனம்பாள் மறைந்த தினத்தன்று உங்களுக்கும் அவளுக்கும் ஏதாவது மனஸ்தாப மேற்பட்டதா?" என்று கமலத்தை வினவினர் பாஸு.

"இல்லை ! அன்று எங்களுக்குள் சண்டையே யில்லை! கடை வீதியினின்று எனக்குக்கூட ஓர் ரவிக்கை வாங்கி வருவதாக மதனம்பாள் கூறிவிட்டுச் சென்றாள்" என்றாள் கமலம்.

"சரி, மதனம்பாள் சச்சிதானந்தத்துடன் ஏதாவது சம்பந்தம் வைத்துக் கொண்டிருந்தாளா ?" என்றார் பாஸு.

"இல்லை ! அவனுடன் மதனம்பாள் பேசுவதுகூடக் கிடையாது. மதனம்பாளுக்கும் ஜகன்னாதனுக்கும்தான் வெகு நாட்களாக நட்புண்டு. ஜகன்னாதன் தன்னை மணம் செய்து கொள்ளும்படிக் கூடக் கேட்டதாக மதனம்பாள் கூறியிருக்கிறாள் !" என்றாள் கமலம்.

"பாங்குக் களவு நடந்த மறுநாட் காலைதானே மதனம்பாள் மாயமாய் மறைந்தது ? அன்று ஜகன்னாதனை யாரேனும் ஓட்டலில் சந்தித்தனரா ?

ஆம் ! அன்றுமாலை ஆறு மணி சுமாருக்குச் சச்சிதானந்தம் ஜகன்னாதனைக் காணவந்தார், அப்பொழுது என் எஜமானரும் ஓட்டலி லில்லை. ஆகையால் நான் அதிக வேலையாக விருந்தேன். சச்சிதானந்தம் எப்பொழுது திரும்பிச் சென்றாரென்பது எனக்குத் தெரியாது. அதே இரவுதான் மதனம்பாள் ஓட்டலுக்குத் திரும்பிவாராம லிருந்ததும் !" என்றாள் கமலம்.

"அன்று முழுதும் ஜகன்னாதன் ஓட்டலைவிட்டு வெளியிற் செல்லவேயில்லையோ ?" என வினவினர் பாஸு.

"அன்று காலை சிறிது நேரம் வெளியிற் சென்றிருந்தார். அதாவது டாக்டர் வீட்டிற்குச் சென்று மருந்து வாங்கிவந்தார், அதன்பின் அன்று முழுதும் வேறெங்கும் செல்லவில்லை. அதற்குப்பின் மறுநாட்காலை மதனம்பாளின் ஆள் பெட்டியைக்கேட்க வருதற்கு அரைமணி நேரத்திற்கு முன் தான் வெளியிற் சென்றார். மதனம்பாள் மறைந்ததற்கு உண்மையில் அதிகம் வருந்தியவர் அவர் ஒருவர்தான் !" என்றாள் கமலம்.

"சரி, இது போதுமானது. இப்பொழுது ஜகன்னாதன் அறையிலிருக்கிறாரா ?" என்றார் பாஸு.

"இல்லை; அபீஸுக்குச் சென்றிருக்கிறார். மாலை 5 மணிக்குத்தான் திரும்புவார் ?"

"நல்ல வேளை, நான் அவர் அறையைச் சோதனையிட விரும்புகிறேன். நான் அவர் அறையில் நுழைவது வெகு இரகசியமாக விருக்கவேண்டும். ஆமாம், ஜாக்கிரதை !" என்று கூறிவிட்டு ஜகன்னாதனின் அறையைத் தன் மறு சாவிகள் ஒவ்வொன்றையும் உபயோகப் படுத்திப் பார்த்துக் கடைசியில் திறந்தார்.

* * *

கொழும்பு நகரின் விசாலமானதோர் வீதியில் உன்னதமான மாளிகையொன்

றன் முன் அறையில் மாயமாய் மறைந்ததாகக் கருதப்பட்ட மதனம்பாளும், துப்பறியும் நிபுணன் பாஸுவும் சம்பாஷித்துக்கொண்டிருக்கின்றனர்.

“நண்பரே, முதலாவதாக நான் கொழும்பி லிருப்பதாக உங்களுக்குயார் சொன்னார்கள்?” என்றாள் மதனம்பாள்.

“அம்மணி, உங்கள் பெட்டிகள் ரெயில்வே பார்ஸலில் மேல்நாட்டுடையணிந்த ஆசாமியின் மூலமனுப்பப்பட்டிருப்பின்,—ரயில்வே ஸ்டேஷனில் விசாரித்தால் பெட்டி எந்த ஊருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றதென்பதும், நீங்கள் எங்கிருக்கின்றீர்களென்பதும் விளங்கி விடுமென்றெண்ணி ஸ்டேஷனில் விசாரித்தேன். நீங்கள் ஊரை விட்டுச்சென்ற மறுநாள் சமயபுரம் ஸ்டேஷனிலிருந்து கொழும்பு ஜங்ஷனுக்குப் பெரிய பெட்டிகள் நான்கை மேல்நாட்டு உடையணிந்த ஒரு மனிதன் பார்சல் செய்ததாயும் “நேரில் வந்து கேட்கும் வரையில் கொழும்பு ஜங்ஷனிலேயே யிருக்க வேண்டுமென்று” பார்ஸலின்மீது எழுதி யிருப்பதாயும் சமயபுரம் ஸ்டேஷன் மாஸ்டர் தெரிவித்தார். தங்களுக்கும் ஜகன்னாதனுக்கும் அதிக நட்பு உண்டு என்று கமலம் தெரிவித்ததினின்று தங்கள் மறைவிற்கு அவன் ஏதேனும் காரணமாக விருக்கக்கூடுமோ வென்றெண்ணி அவன் அறையைச் சோதனையிட்டதில் ரத்தக் கறைபட்ட சில வஸ்திரங்களும், மேல்நாட்டு உடுப்பு ஒன்றும் வெகு ஜாக்கிரதையாக ஓர் பெட்டியில் பத்திரம் செய்யப்பட்டிருந்ததைக் கண்டு பிடித்தேன். மேல்நாட்டு உடுப்பின் சட்டைப் பையில் தபாலாபீஸ் ரசீது ஒன்று கிடந்தது. அதில் தங்கள் விலாசமுமிருந்தது. தங்களுக்கு ஜகன்னாதன் மிஸ்டர் மாத்யூஸ் என்ற பெயருடன் ஏதோ ரிஜிஸ்டர் கவர் அனுப்பி யிருப்பதாக அந்த ரசீதின் மூலமறிந்தேன்!” என்று கூறிச் சற்று நிறுத்தவும் மதனம்பாள், “ஆம்! என் பெட்டிகளை ரயிலில் அனுப்பிவிட்டு அவைகளின் ரயில்வே ரசீதையும் கடிதமும் ரிஜிஸ்டரில் அனுப்பி யிருந்தார். நானும் ரசீதைக்கொண்டு என் பெட்டிகளை ஸ்டேஷனிலிருந்து கொண்டு வந்தேன். என் நான்கு பெட்டிகளுள் ஒரு பெட்டியில் மாத்திரந்தான் ஏதோ சில சாமான்கள் வைத்திருப்பதாயும், தான் வரும் வரையில் திறக்கவேண்டாம் என்றும் மாத்யூஸ் கடிதத்தி லெழுதி யிருந்தார்!” என்றாள்.

மறுபடியும் பாஸு மேலே தொடங்கி, “ரத்தக் கறைபட்ட வஸ்திரங்களில் காணப்பட்ட வண்ணான் குறியை அடையாளமாகக் கொண்டு இவ்வூர் லாண்டரிகளில் விசாரித்ததில் ஷை வஸ்திரங்கள் சச்சிதானந்தத்தினுடையதே யெனத் தெரிந்தது. மேலும் நீங்கள் மறைந்த தினத்தன்று மாலை சச்சிதானந்தம் ஜகன்னாதனின் அறைக்கு வந்திருக்கிறான். அதன் பின்னர்தான் சச்சிதானந்தம் மறைந்தது. ஆகவே ஜகன்னாதனே சச்சிதானந்தத்தைக் கொலை செய்திருக்க வேண்டுமெனத் தீர்மானித்தேன். ஆனால் சச்சிதானந்தத்தைக் கொலை செய்கையில் அவன் சப்தமிட்டால் ஓட்டலி லிருப்பவர்களுக்குத் தெரிந்து விடுமேயென்று பயந்து உன்னையும் கொழும்பிற் கனுப்பி விட்டான். ஓட்டல் மானேஜரும் அப்பொழுது ஓட்டலிலிருக்க மாட்டாரென்பது ஜகன்னாதனுக்கு முன்னதாகவே தெரிந்திருக்கிறது. கமலமும் சமயலறையில் வேலையாக விருப்பாளாதலின் ஜகன்னாதனுக்கு மிகவும் சௌகர்யமாகி விட்டது. ஆனால் சச்சிதானந்தத்தின் சவத்தை ஜகன்னாதன் என்ன செய்தான் என்பதைத்தான் இப்பொழுது கண்டு



அக்பர் பீயர்பாய் என்ற இந்தியர், இங்கிலாந்தில் இந்து, மகமதியச் சட்டங்களில் தேர்ச்சி பெற்று, பதக்கம் பரிசளிக்கப்பட்டு சென்ற வாரம் பம்பாய் வந்திறங்கினார்.
—S. P. B.

பிடிக்கவேண்டும்! என் மனதில் ஒன்றிருக்கிறது. அவ்வழியாகத்தான் அந்த சவத்தை ஜகன்னாதன் பிறர் கண்களிற் படாவண்ணம் மறைத்தானோ அல்லது வேறு ஏதாவது செய்தானோ வென்பது உங்கள் உதவியால்தான் புலனாக வேண்டும்! முதலாவதாக நீங்கள் ஊரைவிட்டு வரும்போது நீங்கள் உங்கள் பெட்டிகளை யெல்லாம் பூட்டி ஸீல் வைத்து விட்டு வந்தீர்களா?” என்று வினவினார் பாஸு.

இதைக் கேட்டதே மதனம்பாள் சற்றுத் திடுக்கிட்டாள். “என் பெட்டிகள் ஸீல் வைத்திருந்தனவா? இல்லையே நான் ஓட்டலை விட்டுக் கிளம்புகையில் கொழும்பிற்கு வருவதாக உத்தேசமிருந்தாலல்லவா அப்படிச் செய்யவேண்டும்?” என்றாள்.

“ஆனால் நீங்கள் திடீரெனக் கொழும்பிற்குப் புறப்படவேண்டிய காரணமென்ன?” என்றார் பாஸு.

“நான் ஓட்டலை விட்டுக் கடைவீதியினருகில் வந்துகொண்டிருக்கையில் மேல் நாட்டு உடையணிந்த ஒருவர் என்னையணுகி “நீர்தானா மதனம்பாள் என்பவர்?” என்றார். நான் “ஆம், நீங்கள் யார்?” என்று கேட்டேன். அதற்கு அம்மனிதர் தன் பையினின்று என்று

டைய புகைப்படமொன்றை யெடுத்துக் காட்டி, இப்படத்தின் உதவியால் தான் உங்களைச் சட்டென்று அடையாளம் கண்டுகொண்டேன். இப்பொழுதுதான் நீங்கள் தங்கியிருக்கும் ஓட்டலில் விசாரித்துவிட்டு வருகிறேன். நீங்கள் கடை வீதிக்குச் சென்றிருப்பதாகக் கூறினார்கள். நான் ஆப்பிரிகா தேசத்தைச் சார்ந்தவன். அங்கு உங்களுடைய மாமன் . ஒருவர் வெகு நாட்களாக விருக்கிறார். அவர் பிள்ளை பெண்ணென்று மில்லாமல் திடீரென இறந்துவிட்டார். அவருடைய சொத்துக்கள் முழுமையும் தங்கள் பெயரில் உயில் எழுதி வைத்துவிட்டு இறந்துவிட்டார். நாளை மாலை நான்கு மணிக்குள் அவருடைய வீடுகளை நீங்கள் உரிமையாக்கிக்கொள்ள வேண்டும். இன்றேல் ஒருலட்ச ரூபாயையும் நீங்கள் இழக்க நேரிடும். அதற்காகவே நான் தங்களைத் தேடி யலைகிறேன். நான் உங்கள் மாமனது வக்கில்" என்றார். நான் அவர் கூறுவதைக் கேட்டு முதலில் வியப்படைந்தேனே யாயினும், அவர் காண்பித்த சில பத்திரங்கள் என்னை நம்பும்படிச் செய்தன. மேலும் ஆப்பிரிக்காவில் என் மாமன் ஒருவர் இருப்பதும் உண்மைதான் !"

"உங்கள் மாமன் ஆப்பிரிக்காவிலிருப்பது ஜகன்னாதனுக்குத் தெரியுமோ ?" என்று நடுவே வினவினார் பாஸு.

"ஓ! நன்கு தெரியும். நான் அவரிடம் அடிக்கடி என் மாமனைப் பற்றிக் கூறுவதுண்டு. மேல் நாட்டான் நான் உடனே அடுத்த மணி வண்டியிலேயே புறப்பட்டுச் சென்னைக்குப் போய் அவ்விடமிருந்து கொழும்பை யடைந்து அங்கு என் மாமனுக்குச் சொந்தமான வீட்டை உரிமை செய்து கொள்ள வேண்டு மென்று வற்புறுத்தியதாலும், அதற்குள் நான் ஓட்டலுக்குத் திரும்பிச் சென்று என் எஜமானரிடம் விஷயத்தைக் கூறி விடை பெற்றுக்கொண்டு என் பெட்டிகளையும் எடுத்துக்கொண்டு ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்ல நாழிகை யில்லாமலிருந்ததாலும், என் பெட்டிகளை யெல்லாம் எஜமானரிடமிருந்து வாங்கி யனுப்பும்படி மேல் நாட்டான் கூறியதைப் போல் எஜமானருக்கு ஓர் கடித மெழுதிக் கொடுத்துவிட்டு, அவர் என் வழிச் செலவிற்குக் கொடுத்த ரூ. 100-யும் பெற்றுக்கொண்டு நேராகக் கொழும்பிற்கு வந்துவிட்டேன். நேற்று மாலைதான் என் பெட்டிகளையும் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வீட்டிற்குக் கொண்டு வந்தேன் !" என்றாள் மதனம்பாள்.

"ஆனால் நீங்கள் ஓட்டலைவிட்டுக் கிளம்புகையில் உங்கள் பெட்டிகளை யெல்லாம் பூட்டி ஸீல் வைக்கவில்லையோ" என்று மறுபடி வினவினார் பாஸு.

"இல்லை !" என்று மதனம்பாள் பதிலளிக்கவும், "சரி, அப்படியானால் நான் நினைத்தது சரியாகத்தா னிருக்க வேண்டும் ! மேல் நாட்டான் நீங்கள் திறக்கக்கூடாது என்று கூறிய பெட்டி எங்கே யிருக்கிறது ?" என்று பாஸு வினவவும், மதனம்பாள் பாஸுவைப் பக்கத்து அறைக்கு இட்டுச்சென்று நீளமானதோர் ஸீல் வைத்த பெட்டியைச் சுட்டிக் காட்டினாள். பாஸு மறு நிமிடம் ஸீல்களை உடைத்துப் பெட்டியைத் திறந்தான். அதிலிருந்த சாமான் இருவரையும் அப்படியே பிரமிக்கச் செய்தது. அதற்குள் செட்டியார் பாங்குக் கிளார்க்குகளி லொருவனான சச்சிதானந்தம் கத்தியால் கொலை செய்யப்பட்டுப் பெட்டியில் அடக்கம் செய்யப்பட்டிருந்தான்.


"அம்மணி ! இதுதான் நடந்த விஷயம். முதல் நாள் மாலை ஜகன்னாதன் பாங்கியினின்று ரூ. 50,000த்தைக் களவாடியிருக்கிறான். அவ்விஷயம் மறுநாள் வெளியாகி விடுமெனக்கருதி பாங்கிக்குச் செல்லாமல் ரஜா எடுத்துக் கொண்டிருக்கிறான். அன்று காலை மேல்நாட்டின் உடையுடன் உங்களைக் கொழும்பிற் கனுப்பி யிருக்கிறான். அதற்கு இரண்டு காரணமுண்டு. ஒன்று சச்சிதானந்தத்தை அன்று மாலை வரவழைத்து அவனைக் கொலைசெய்து சவத்தைப் பெட்டியிலடக்கம் செய்து கொழும்பிற்கனுப்பி விடுவதால் சச்சிதானந்தத்தின் மறைவு, அவனே பாங்கியில் களவாடினான் என்று பழியுண்டாகுமே யன்றி தன்னை ஒருவரும் சந்தேகிக்க மாட்டார்கள் என்பது ஒன்று. மற்றொன்று ஜகன்னாதன் உங்களைக் காதலிப்பதால் தானும் கொழும்பிற்கு ரூ. 50,000 உடன் வந்து நிம்மதியாய்க் காலம் கழிக்கலாமென்பது மற்றோர் காரணம். அவ்வாறே அன்று மாலை சச்சிதானந்தம் ஜகன்னாதன் அறைக்கு வரவும் அவனைக் கொலை செய்து, உங்கள் அறையைக் கள்ளத்தனமாகத் திறந்து சவத்தையும் உங்கள் பெட்டிகளொன்றில் அடக்கம் செய்து ஸீல் வைத்திருக்கிறான். இதைச் சிறிதும் சந்தேகியாத ஓட்டல் மானேஜர் நீங்களே ஓட்டலை விட்டுச் செல்கையில் பெட்டிகளை யெல்லாம் ஸீல் வைத்துவிட்டுச் சென்றிருப்பதாக எண்ணினார். இவற்றிற்கு ஜகன்னாதன் அறையில் காணப்பட்ட சச்சிதானந்தத்தின் உடைகளும், ரிஜிஸ்டர் ரசீதும், புதிய மேல் நாட்டான் உடையும், உங்கள் அறைக்குச் சரியான கள்ளச் சாவி யொன்றும், பாங்கியில் களவாடப்பட்டதாகக் கூறப்பட்ட சில பத்திரங்களும் அத்தாட்சி யளிக்கின்றன. நீங்களிருக்கும் இந்த வீடு உங்கள் மாமனுடையது மல்ல; ஜகன்னாதனுடையது மல்ல வென்பதை இன்று காலைதான் விசாரித்துத் தெரிந்து கொண்டேன். நீங்கள் வசிப்பதற்காக ஜகன்னாதனால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட விடுதியே இதுவாகும்........!" என்று பாஸு கூறிக்கொண்டே இருக்கையில் வாசலில் ஓர் வண்டி வந்து நின்றது. அதினின்று மேல் நாட்டான் உடை அணிந்து கொண்டிருந்த ஜகன்னாதன் கீழிறங்கி உள் நுழைந்தான். அவன் அறையினுள் பிரவேசித்ததும் மதனம்பாளுக்கு முன் துப்பறியும் பாஸு நிற்பதையும், அவர்கள் இருவர் முன்னிலையிலும் சச்சிதானந்தத்தின் சவம் பெட்டியி லிருப்பதையும் கண்டு முகம் சவம்போல் வெளுக்க அப்படியே ஸ்தம்பித்து நின்றான் ஜகன்னாதன்.

"ஜகன்னாதன் ! கையை உயரே தூக்கு ! இன்றேல் தாட்சண்யமின்றி சுட்டு வீழ்த்துவேன் !!" என்று கூறி பாஸு தன் கைத்துப்பாக்கியை யெடுத்து ஜகன்னாதனுக்கு முன் நீட்டிய வண்ணம், அவன் இருகாங்களிலும் விலங்கை மாட்டினான். ஜகன்னாதன் எந்த வண்டியில் வீட்டிற்கு வந்தானோ அதே வண்டியில் பாஸுவால் போலீஸ் ஸ்டேஷனுக்குக்கொண்டு போகப்பட்டுத் தண்டனை யடைந்தான். மதனம்பாள் இவ்வளவு விஷயங்களும் நடந்த பின்னர் மறுபடி சமயபுரத்திற்குத் திரும்ப மனமின்றி கொழும்பிலேயே ஓர் ஓட்டலில் வேலைக்கமர்ந்து நிம்மதியாய்க் காலம் கழித்து வரலானாள்.

சிரம்பானில் செட்டியார் பாரிஸ்டர் சொற்பொழிவு

24-6-1934 மாலை 5 மணிக்கு சிரம்பான் விவேகானந்த மாணவர் ஹாலில் திரு. சி. மு. ராம. சிதம்பரஞ் செட்டியார் அவர்கள் தலைமையில் பாரிஸ்டர் செட்டியார் அவர்களுக்கு ஓர் பெரிய தேனீர் விருந்து நடத்தப்பெற்றது. அது பொழுது பல இந்தியப் பிரமுகர்களும் நகரத்தார்களும் இருநூற்றுக்கு மேல் கூடியிருந்தனர். விருந்தினர் திரு. அழகப்பா அவர்கள் வந்ததும் புகைப்படம் எடுக்கப்பெற்று வந்திருந்த பெரியார்கள் அனைவருக்கும் திரு. செல்வநாயகம் அவர்கள் அறிமுகம் செய்வித்தார்கள். தேனீர் அருந்திய பின்னர், தலைவர் சிதம்பரஞ் செட்டியார் திரு. அழகப்ப செட்டியாரை அறிமுகப் படுத்திப் பேசினர். பேசும்போது திரு. அழகப்ப செட்டியார் அவர்களை அவர் நியாயவாதத் தொழிலில் சிறந்து சி. ஆர். தாஸ், மோதிலால் நேரு போன்ற தேசபக்தராயும் வழக்கறிஞராயும் வரவேண்டுமென்று குறிப்பிட்டார்.

பிறகு சங்கக் காரியதரிசி பழ. அ. பழ. பழநியப்ப செட்டியார் வரவேற்புப்பத்திரம் ஒன்று வாசித்துங்கொடுக்க, திருவாளர்கள் வி. பெரி. விஸ்வநாதன் செட்டியார், பழ. காசிவிஸ்வநாதன், பழ. கா. லெ. ராம. இராமநாதன் செட்டியார், சார்ட்டர்டு பாங்கு பிரதம குமாஸ்தா செல்வநாயகம் முதலியோர் முறையே விருந்தினரைப் பாராட்டிப் பேசினர்கள். அப்பால் பெருத்த கரகோஷத்தினிடையே திரு. அழகப்பா அவர்கள் பேசியதாவது.



பீஜப்பூர் ஜில்லா போர்டு, பம்பாய்க் கவர்னர் மே. த. லார்டு பிராபோர்னுக்கு ஒரு வரவேற்புப் பத்திரத்தை, சென்னை சுராஜ்மால் கம்பெனியாரால் விமான உருவில் செய்யப்பட்ட பேழையில் போட்டுக் கொடுத்தது.

—P. P. B.

தலைவர்களே, நண்பர்களே,

நான் இந்தியாவை விட்டுப் புறப்பட்டபொழுது எனக்கு இத்தகைய வரவேற்புகளும், விருந்துகளும் நடைபெற்று நான் பேசும்படி நேரிடுமென்று சற்றும் எதிர் பார்க்கவில்லை. இருந்தாலும் என்னுடைய மனத்திலே பதிந்துகிடந்த எண்ணங்கள் பல வற்றை வெளியிடுவதற்குச் சந்தர்ப்பங்கள் இவ்வகையாகக் கிடைத்தது பற்றியும் பல பெரிய இந்திய அன்பர்களைக் கண்டுபேச நேர்ந்ததைப் பற்றியும் மிக்க மகிழ்ச்சி யடைகிறேன்.

சிரம்பானில் என்னுடைய சமூகத்தார் தொழில்செய்து வருகின்றார்கள் என்ற ஒன்றைத்தவிர எனக்கு வேறு தொடர்பு எதுமில்லை. அவ்விதமிருந்தும் என்னை மிகச் சிறப்புடன் இங்கு வரவேற்று உபசரித்ததற்கு உங்கள் அனைவருக்கும், என்னைப் பாராட்டிப் பேசி ஆசிமொழிகள் பல பகன்ற அன்பர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வந்தனங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *

குழந்தைகளை வளர்க்கும் முறை

முன்பு பேசிய இளைஞர் ஒருவர் தம்மைப் போலுள்ள ஏனைய இளைஞர்களுக்கு இப்பாகங்களில் போதிய கல்வி நிலையங்கள் இல்லையென்றும் அவைகளை விரைவில் நிறுவுவதற்கு ஏற்ற வழிகள் செய்ய முற்படவேண்டுமென்றும் கூறினர். நான் பேசிய விடங்களிலெல்லாம் இதைக்குறித்து வற்புறுத்திப் பேசியிருக்கிறேன். கல்விச் சாலைகள் பல காணுவதற்கு வேண்டிய சாதனங்களை இந்நாட்டில் வாழும் பெரியோர்கள் முக்கியமாக ஊக்கத்தை யெடுத்துக் கொள்ளவேண்டும்.

செட்டியார்கள் அவர்களுடைய தொழிலைச் செம்மையுடன் நடத்துவதில் திறம்பட்டவர்கள். அதுபோலவே மற்றத் துறைகளிலும் இருக்கவேண்டும். நாம் நம்முடைய தொழிலுக்காக மட்டும் பாடுபடுகின்றோமே யல்லாது நம்முடைய மக்களை நேரிய முறையில் வளர்த்து நாட்டின் நல்ல அணிகலன்களாய் இருக்குமாறு இதுவரை ஒன்றும் செய்தோமில்லை. ஒரு சாமானை உயர்ந்த பொருள் கொடுத்து வாங்கினல், அதை நாம் ஒழுங்கான முறையில் பேணவேண்டுமென்று பெரிதும் விரும்புகிறோம். கார் வைத்துக்கொண்டால் அதை ஓட்டுவதற்கு ஆளும், இன்னும் அதற்குவேண்டிய சாமான்களையும் வாங்கி வரியும் கொடுத்து வைத்துக் கொள்ளுகிறோம். ஆனல் இதற்காகக் கொள்ளும் கவலையில் ஒரு சிறிது

கூட நம்முடைய மக்களை வளர்ப்பதில் நாம் காட்டுவதில்லை. குழந்தையில்லையென்று ராமேஸ்வரம், காசி முதலிய க்ஷேத்திர யாத்திரை சென்று பிள்ளைகளைப் பெறுகின்றோம். அவர்களை நல்ல வழியில் கொண்டுவந்து நமது தேசத்துப் பிற்காலத்திய வீரமக்களாகச்செய்ய வேண்டுமன்றோ!!! அத்தகைய குணந்தான் நம்மிடத்தில் மிக அரிது. குழந்தைகளைப் பெற்றுவிட்டு இந்நாட்டில் வந்து மூன்றுஆண்டுகளிருக்கின்றோம். அப்பொழுது தாய்மார்கள் பாதுகாக்க வேண்டியவர்களாகிறார்கள். அவர்களும் குழந்தைகளைத் தம்முடன் அழைத்துச்சென்றால் நாம் செல்லுமிடங்களிலுள்ளவியாதிகள் பிடிக்குமென்று பயந்துவிட்டிலுள்ள வேலைக்காரனிடத்தில் இரண்டு மூன்று மாதங்களுக்குப் போதுமான முறுக்கு, வடை, தேன்குழல் முதலிய பக்ஷணத்தைக் கொடுத்துவிட்டு ஸ்தல யாத்திரை செய்யப் புறப்பட்டு விடுகிறார்கள். இப்படியாயின் குழந்தையின் கதி என்ன? வேலைக்காரன் தன்னுடைய இஷ்டம்போல் குழந்தைகளுக்கு உணவை அளித்து வருகிறான். குழந்தைகளுக்குத் தேகப் பயிற்சியுமில்லை. மற்ற சௌகர்யங்களுமில்லை. வெளிநாடுகளிலுள்ள தந்தையார் பையன் சுறுசுறுப்பாகவிருக்கிறான், நன்றாகப் பேசுகிறான், என்று தமதுரர்களிலிருந்து வரும் நண்பர்களிடம் அறிந்து அளவில்லாத ஆனந்தம் கொண்டு பையனுக்கு வை டாலர்கள் செய்து அனுப்புகிறார்கள். இதனால் குழந்தைகளின் அறிவு வளர்க்கப் பெறுகின்றதா? அன்றி தேக நலம் சீர்பெறுகின்றதா? இக்குழந்தைகளெல்லாம் கடவுளின் திருவருளினால் அறிவு பெற்றாலன்றி வேறு வகையில் பெறுவதற்கு மார்க்கமில்லை. குழந்தைகளுக்கு உணவையும் உடையையும் நகையையும் செய்து கொடுத்தால் மட்டும் போதாது. அவைகளுக்குக் கல்வி ஊட்டி சிறந்த வழியில் தேக ஆரோக்கியத்துடன் வளர்க்கப்படும் முறைகள் கையாளப்பட வேண்டும். நாம் இவ்விதம் செய்யாது கடவுளின் கருணைக்கு விட்டுவிட்டு வாளாவிருந்தால், அக்கடவுளின் தண்டனைக் குள்ளாவோம். நாமும் பெரிய பாவத்தையும் செய்தவர்களாவோம். ஐரோப்பியர்களுடைய குழந்தைகள் எவ்வாறு வளர்க்கப்படுகின்றன வென்பதைப் பாருங்கள். தந்தையார் வெளிநாடு சென்றிருந்தால் குழந்தைகளைப் பாதுகாத்துவர தகுந்த பொறுப்பாளர் இருக்கின்றனர். அவர்களுக்குப் போதிய பணம் அனுப்பப் பெறுகின்றது. விடுமுறை நாட்களில் மலைகளுக்கும் கடலோரங்களுக்கும் அழைத்துச் செல்லப்படுகின்றார்கள். அக்குழந்தைகளுக்குப்போதிய தேகாப்பியாசம் புகட்டப் பெறுகின்றது. திறந்த வெளிகளிலும் பசும் புற்றரைகளிலும் ஓடியாடி விளையாடுகின்றார்கள். குழந்தைகள் தேக ஆரோக்கியத்துடன் இருப்பதோடல்லாமல் அறிவுள்ள குழந்தைகளாகவுமிருக்கின்றன. எனவே, அன்பர்களே, நம்முடைய குழந்தைகளை நல்ல திடகாத்திரமுள்ள குழந்தைகளாக வளர்க்க வழிகள் பல காணுங்கள்.

* * *

ஜெர்மனியில் வியாதியுள்ளவர்களுக்குக் குழந்தைகள் பெறாவண்ணம் இன்ஜெக்ஷன் செய்து விடுகிறார்கள். இதனால் வியாதியுள்ள குழந்தைகள் பெரும்பாலாக அந்நாட்டிலில்லை. ஆனால் நம்முடைய நாட்டில் அவ்விதமில்லை. பெற்றோர்களுடைய பிணி, பிள்ளைகளையும் பற்றிப் பெரிதும் வாட்டுகின்றது. வியாதியுள்ள குழந்தைகளைப் பெற்று நம்முடைய தேசத்தின் ஜனத்தொகையைப் பெருக்குவதால் யாது பயன்?

நாம் ஓர் பெரிய கோவிலில் அணிவெட்டுக்கால் நிறுவ வேண்டுமென்றால் சாஸ்திரப்படி எல்லா நியமங்களுடனும் செய்கிறோம். ஆனால் குழந்தைகளை வளர்ப்பதிலோ எவ்விதச் சிறத்தையும் காட்டுவதில்லை. மக்களுக்குப் போதிய கல்வியில்லாது விடுத்தால் அவர்களுடைய பிற்கால வாழ்க்கையில் எவ்வாறு தொழில்களைத் திறன்பட நடத்த முடியும்? ஆகையால், சகோதரர்களே! திண்ணைப் பள்ளிக்கூட படிப்புப் போதுமானதென்று நினைக்காமல் புதிய கலைகளை நன்கு கற்று தேர்ச்சியடையும்படி செய்யுங்கள். இது ஒருபுறமிருக்க, பால் மணம் மறக்காத சிறு குழந்தைகளையெல்லாம் இங்கே கொண்டு வந்து கல்வி பயிலும்படி செய்யாது பெட்டியடியில் போட்டு வாட்டாதீர்கள். அவர்களைச் செம்மையான வழிக்குக் கொண்டு வாருங்கள்.

தொழில் தேட்டம்

நம்முடைய லேவாதேவித் தொழிலில் இனி விசேஷமான ஊதியம் கிடைக்காது என்பதை ஒவ்வொருவரும் நன்குணர வேண்டும். வேறு தொழில்களை நடத்த முற்படவேண்டும். தற்பொழுது சில நண்பர்கள் புதிய தொழிலை நடத்தி வருகிறார்கள். ஒருவர் கிராமபோன் கம்பனியோ அல்லது மெடிகல் ஹாலோ வைத்தால், அதைப்போலவே மற்ற நண்பர்களும் வைத்து விடுகிறார்கள். இதனால் எல்லோரும் நஷ்டமடைய நேரிடுமேயன்றி விசேஷ இலாபம் சம்பாதிக்க இயலாது. புதிய தொழில்களை ஆரம்பித்தால் மிக்க நலம் உண்டு. பினாங்கிலுள்ள ஆங்கிலம் அறியாத நண்பர்களில் சிலர் ஸ்டாக்ஸ் அண்டு ஷேர் தொழில் செய்து மிக்க ஊதியம் அடைந்திருக்கிறார்கள். பல புதிய தொழில்களை நடத்த நல்ல திறமையாளர்கள் வேண்டும். அதற்கு

நம்முடைய பொது மகமைப் பணங்களிலிருந்து நல்ல அறிவுள்ள இளைஞர்களை மேல் நாட்டிற்கு அனுப்பித் தொழில் கல்வி பயின்று வரும்படி செய்ய வேண்டும். இப்பொழுது கட்டியிருக்கும் கோவில்கள் போதுமானது. நம்முடைய பக்தியை வெளியிடுவதற்கு வெள்ளி இரதத்தைத் தங்க இரதமாகச் செய்வது தான் என்று நினைக்கக் கூடாது. நம்முடைய சமூகத்தினர் முன்னுக்கு வர வேண்டிய திட்டங்களை அமைக்க வேண்டும். சிறுவர்களுக்கு வேண்டிய கல்விச் சாலைகளை ஏற்படுத்திக் கட்டாயமாகக் கல்வி கற்கும்படி செய்ய வேண்டும். பொதுப் பணங்களிலிருந்து ஒருபாகத்தைக் கொண்டு நம் சமூக இளைஞர்களுக்கு, இளைஞருள் அறிவுள்ளவர்களைத் தொழிற் கல்வி பலவற்றைப் பயிலும்படி செய்ய வேண்டும்.

இங்கிலீஷ்காரரைப் பாருங்கள்

நூறாண்டுகளுக்கு அதிகமாக நாம் இந்நாட்டில் வசித்து வருகிறோம். இந்நாட்டில் அமைக்கப் பெற்றிருக்கும் வீடுகளையும் மற்ற வசதிகளையும், சாலைகளையும், கண்டு மகிழ்கிறோம். ஆனால் நம்முடைய ஊர்களில் அத்தகைய சுகாதார விதிகளுடன் வீடுகள் கட்டப்படவில்லை. வீடுகள் கட்டும் போது பஞ்சாயத்துக் கோர்ட்டாருடைய பொதுவிடத்திலும் கொஞ்ச பாகம் சேர்த்து மதில் சுவர்கள் எழுப்புகிறோம். அரசாங்கத்தார் பல கட்டிடங்களை விலைக்கு வாங்கி இடித்துச் சாலைகளை விசாலப்படுத்தும் பொழுது நாம் இவ்விதம் செய்வது மிகவும் வருந்தத்தக்கக் காரியமாகும்.

அம்மை முதலிய கொள்ளை நோய்கள் நம்முடைய நாட்டில் பரவும் பொழுது அவைகளைத் தடுப்பதற்கு வேண்டிய காரியங்களைச் செய்யாது 'ஸ்வாமியைப் பவனி வரும்படி செய்ய ஐந்து ஆயிரங்களுக்கு அதிகமாகச் செலவுகிறோம். இந்தப் பணத்தைக் கொண்டு அக்கொடுமையான நோய்களைத் தடுக்க ஏற்பாடுகள் எவ்வளவோ செய்யலாம். பகவானுக்குப் பிரார்த்தனை செய்ய வேண்டாமென்று நான் சொல்ல வரவில்லை. இவ்விதமாகப் பணத்தை வாரி இறைத்து மேளம் கொட்டுவதைக் காட்டிலும் அதைச் சுகாதார வழிகளில் செலவிட வேண்டுமென்பதே. இங்கிலீஷ்காரர் ஒருவர் சிலகாலம் மற்றொரு நாட்டில் தங்கியிருந்து தம்முடைய சொந்த தேசம் திரும்பிய பிறகு, தாம் அத்தேசத்திற் கண்ட நல்ல விஷயங்களைப் பரப்புவதற்கு வேண்டிய முயற்சிகள் பல செய்வர். ஆனால் நாம் இங்கு ஆண்டுகள் பல வதிந்தும், இந்நாட்டில் காணும் சுகாதார வழிகளை நம்முடைய நாட்டிலும் செய்து கொள்ள வேண்டுமென்பது விருப்பம் ஒரு சிறிதுமில்லை. இதைப் பற்றி நான் தங்களுக்கு அதிகமாகக் கூற வேண்டுவதில்லை. இந்நாட்டில் அரசாங்கத்தில் வேலைபார்த்து வரும் சிறிய உத்தியோகஸ்தர்களும் அவர்களுடைய அழகிய சிறு கட்டிடங்களில் சுகமாக வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் நாம் ஒரேயிடத்தில் இருபது கடைகளுக்கு அதிகமாக வைத்துக் கொண்டு அறுபது நபர்களுக்கு அதிகமாக ஒருவர் மேல் ஒருவராக அடைந்து வாழ்ந்து வருகிறோம். நாம், மற்ற விசேஷ வைபவங்களில் பல்லாயிரக் கணக்காகச் செலவிடும் பொழுது இங்கு சௌக்கியமாக வாழ்வதற்கு வசதிகள் பல ஏன் அமைத்துக் கொள்ளக் கூடாது. 15 அல்லது 20 டாலர்கள் அதிகமாகத் தனிக்கட்டிடங்களுக்குச் செலவுசெய்து வருவதால் நம்முடைய தொழில் நசித்து விடாது. மிக்க கவனமாகவும் நேரிய முறையிலும் தொழிலைப் பாதுகாத்து வந்தால் தகுந்த வருமானம் கிடைக்குமென்பதில் ஐயமில்லை.

எது சிக்கனம் ?

நேற்று நான் சில ஐரோப்பிய நண்பர்களுடன் விருந்துசாப்பிட்டுக் கொண்டிருக்கும்பொழுது அவர்களில் ஒருவர் என்னுடைய காரியாலயத்திற்கும் தம்மை அழைத்துச் செல்லவேண்டுமென்று சொன்னார். நம்முடைய கடைகள் இருக்கும் நிலைமையை அறிந்து சரியான பதில் ஒன்றும் சொல்லாது திகைத்தேன். ஏன் நம்முடைய காரியாலயங்களிலிருக்கும் நண்பர்களுக்கே உட்காரவிடமில்லை, ... நாம் கடன் கொடுப்பதற்கு வீடுதேடிச் செல்கிறோம். அதைத்திரும்பப் பெறுவதற்கும் அவர்களுடைய வீடுகளுக்கே போகிறோம். இதுமிகவும் வெட்கக்கேடான காரியமல்லவா? நம்மிடத்திலே தொழில் செய்பவர்கள் நம்முடைய நிலயங்களுக்கு வந்து நிற்பதற்குக்கூட இடமில்லை. இவ்விதமிருந்து வருவது மிகச் சிக்கனமான முறையாகுமென்று சிலர் கருதுகின்றனர். ஆனால் மூன்று அல்லது நான்கு பேர் வாழ்வதற்குப் பல ஆயிரக்கணக்காகவும் லட்சக்கணக்காகவும் பொருள் செலவழித்து நம்முடைய, ஊரில் வீடுகள் கட்டுகிறோமே அவைகள் சிக்கனமான முறையாகுமோ....கல்யாணங்களுக்கும் மற்ற விசேஷங்களுக்கும் ஆடம்பரச் செலவு செய்வது சிக்கனமான முறையோ....நீங்களே சிந்தித்துப் பாருங்கள். நிற்க,

ஆங்கிலேயர் கணக்கு

தொழிற் செய்யும்பொழுது முதல் கணக்கில் லாபம் வந்ததாகவே கூறுவது நம்மவர் வழக்கம். உண்மையாக ஒருவருக்கு ஒன்றரை லட்சம் டாலர் லாபம் முதல் கணக்கில் வரலாம். அவர் தாம் வாங்கினவீடு கார் முதலியவைகளையும் அன்று அவைகளுடைய விலைகளையும் கொண்டே அந்த லாபத்தைக் கணக்கிடுகிறார்கள். இவ்விதமாக ஒவ்வொரு கணக்கிலும் லாபத்தைக் கூட்டிக் கொண்டே போவார்கள். இதனால் தங்களுக்கு இவ்வளவுதான் உண்மையான முதல் என்று தெரியாது. ஆங்கிலத்தில் டிப்ரிசியேஷன் என்று சொல்வது போல் இவர்கள் வீடு, கார், முதலியவைகளுக்காக ஒருபாகத்தை ஒவ்வொரு கணக்கிலும் கழித்துக்கொண்டு கணக்குப் பார்ப்பதில்லை. ஆனால் மற்ற கம்பனிகளெல்லாம் இவ்விதம் செய்வதில்லை. சில கம்பனிகளின் கட்டிடங்களுக்கு இவ்விதமாக வரும் லாபத்தில் கழித்துக் கொண்டே வந்து இப்பொழுது அவைகள் கொள்முதலில் சேர்த்துக்கொள்ளப் படாமலிருக்கின்றன. நாம் நம்முடைய லாபத்தை எட்டில் பெருக்கிப் பார்க்காமல் இவ்விதம் ஒரு பாகத்தைக் கழித்துக் கொண்டே வந்தால் நமக்கு உண்மையான லாபம் இவ்வளவு என்று தெரியும்.

மற்றும் ஒரு கடையில் எவ்வளவுக்கெவ்வளவு திட்டங் குறைகின்றதோ அதற்கேற்ப அந்தக்கடை பெரிதென்று நாம் பேசுகிறோம். நாற்பது அல்லது அன்பது டாலர் திட்டக்குறைவு ஏற்பட்டால் அது மிகப் பெரிய கண்ட அதனாற்றான் இவ்விதம் ஏற்படுகின்றது என்று உயர்வுடன் பேசுகின்றோம். ஆனால் ஆங்கிலேயரவர்களால் பல கோடிகள் கொண்டு செய்யப்படும் கம்பனிகளில் அரைக்காசுகூட குறைவதில்லை. ஏன், அவர்கள் கணக்குகள் எழுதும் முறையே அதற்குக் காரணம். நாம் கணக்குகள் எழுத பல புத்தகங்களை

வைத்திருந்தாலும் சில்லரையாக ஒவ்வொருவரும் எடுத்துக்கொண்டுபோகும் போது எழுதுவதில்லை. பின்னால் எழுதும்போது மறந்து விடுகிறோம். ஆனால் அவர்களுடைய கம்பனிகளில் ஒவ்வொன்றுக்கும் கணக்கு எழுதியே எடுத்துச் செல்லவேண்டும்.

முன் வாருங்கள்

பாங்குகள் அமைப்பதற்கு வேண்டிய வசதிகள் செய்யும்படி உபசாரப் பத்திரத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். சில நண்பர்கள் சிறு முதலைக்கொண்டு எத்தனையோ பாங்குகளைச் செவ்வனே நடத்தி வருகின்றனர். நாமும் பாங்கு ஆரம்பிக்க நம்மிடையே போதிய செல்வமிருக்கின்றது. ஆனால் ஒன்று சேர்ந்து சிறந்த அறிவாளர்களைக் கொண்டு ஆரம்பிக்கவேண்டுவது தான் தாமதம். நாம் ஒற்றுமையுடன் செய்ய ஆரம்பித்தால் நம்முடைய பாங்கும் பல கிளைகளுடன் விசேஷமாக நடைபெறும். இந்தியன் பாங்கி திறப்பதற்கு உதவிசெய்யப் பலர் முன்வரவேண்டும்.

மற்றும் செட்டியார் சமூகத்தார், எவருக்கும் சட்டரீதியாகக் கடன் கொடுக்கக் கூடாதென்று அரசாங்கத்தார் நியமித்திருக்கிறார்களோ அதற்கு மாறாக ஒருநாளும் தொழிற் செய்யக் கூடாது. மலாய்க்காரர்களுக்குத் தனியாகப் பாதுகாக்கப் பெறும்........மலாய் ரிசர்வேஷன் நிலங்களை டம்மிகள் மூலமாக வாங்கும்படி செய்து நாம் அதன் பலன்களை அடைய முற்படக் கூடாது. ஏனெனில் இதை அரசாங்கத்தார் தடை செய்திருக்கும்போது, அதற்கு ஏற்பவே நாம் நடக்கவேண்டும். இன்னும் அதிக லாபம் சம்பாதிக்க வேண்டுமானால் நம்முடைய காலத்தை ஊர்களிலிருக்கும்பொழுது சீட்டாடி பொழுது போக்காமல் வேறு வியாபார வழிகளில் நம்முடைய கவனத்தைச் செலுத்தி ஊதிய மடையலாம்.

செட்டியார் சமூகத்தைப் பற்றி ஐரோப்பியர் முதலிய பல நண்பர்களுக்கு எடுத்துக் கூறியிருக்கிறதாக என்னைப் பாராட்டி யிருக்கிறீர்கள். இப்படியே இனியும் நம்முடைய சமூகத்தைப் பற்றி நாமே எடுத்துப் பேசாமல் மற்றவர்கள் தாமாகவே நம்முடைய சிறப்பை அறிந்து கௌரவிக்க, பொது வாழ்க்கையில் ஈடுபட்டு முன்னணிக்கு வருவீர்களென்று நம்பி என்னுடைய பேச்சை நிறுத்திக் கொள்கிறேன்.

பிறகு பழ. கா. லெ. ராம. ராமனாதன் செட்டியார் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பெற்று கூட்டம் இனிது நிறைவெய்தியது.

அமெரிக்காவில்தான் உலகில் அதிகம் சூடான பிரதேசமிருக்கிறது என்று சொல்லலாம். பர்னெஸ் என்ற விடத்தைச் சேர்ந்த "மாணச் சால்" என்னும் பகுதியில் 1911-ம் வருடத்திற்கிப்புறம் தினசரி சூடளந்து குறிப்பிட்டு வருகிறார்கள். அதன்படி 1913-ம் வருடம் ஜூலை மாதம் 10-ந் தேதி 134 டிக்ரி சூடிருந்ததாகத் தெரிகிறது என்பது வருடங்கட்கப்பால் பிரஞ்சு நிபுணர் சிலர் சஹாரா மணல ரணியத்தைச் சார்ந்த அஜீஜியா என்ற இடத்தில் 136 டிக்ரி சூடிருப்பதாகக் கண்டார்கள்.



கும்மி.

ராய. சொ.

உரிமை ஆக்கியோனுடையது.

காந்தி யறம்தனை எங்கும் வளர்ந்திடக்
கைகொட்டிக் கும்மி யடியுங்கடி!
ஏந்திழை வெண்ணகை மாதர்க ளேநல்ல
எழிலொழு கப்பாடிக் கும்மியடி! (௧)

ஆடும் மயிலுங்கள் சாயற்குத் தோற்றே
அடைந்தது கானென நாடறியக்
கூடிப்பஞ் சூட்டிய மெல்லடி நைந்திடக்
கூர்ஜரன் பேர்சொலிக் கும்மியடி! (௨)

இந்த உலகினில் மாதர் இழிவென
எண்ணு பவர்க்கினி வாழ்வேது?
அந்தப் பழங்கதை மண்ணிற் புதைந்ததென்
றாரவா ரமாகக் கும்மியடி! (௩)

தாலாட்டும் கும்மியும் என்ற நூலிலிருந்து
[illegible] எடுக்கப்பட்டது.

பரிமளா அல்லது பரிதவித்த பாவை

(நாகப்பன்)

"கண்மணி! கலங்காமல் நீ எனக்கு விடை தருவாயாக! நான் எங்கு சென்றிடினும் உனது காதலை மறக்கமாட்டேன். உன் உருவம் முழுதும் எனதுடனிருப்பது போலவே நினைத்து எனது காரியத்தைக் கழிப்பேன்! என்னை வேறு மனிதர்களைப்போல நினையாதே. காந்தி அடிகளின் ஆணையின் பேரில் நான் இந்திய மக்களுக்கு முக்கியமாக ஹரிஜனங்களுக்கு—கிராமாந்தர வாசிகளுக்குப் பிரசாரம் செய்து அவர்களைச் சீர்திருத்த—இந்தியாவின் நிலைமையையும் விளக்கி அவர்களின் முன்னேற்ற வழிகளில் உபந்நியாசம் செய்ய நினைக்கிறேன். இது ஒரு வருடத் திட்டம். இந்த ஒரு வருடமும் எனக்கு விடைகொடு. இது எனக்காக அல்ல—இந்திய ஏழை மக்களுக்கு! பரிமளா! நினது திருவாயால் எனக்கு விடைகொடு" என்று இருபத்தைந்து அல்லது இருபத்தாறு வயதுடைய ஓர் இளம் வாலிபன்—தூய கதராடை அணிந்த அணங்கைப் பார்த்து மேற்கண்டவாறு கூறினான்.

"காதலரே! இவ்வளவு நாட்களாக உங்களைத் தினமும் பார்த்தாவது காலத்தைக் கழித்தேன்—இனி எப்படி இருப்பது? என்ற ஒரு எண்ணம் தான் எனது மனதைவிட்டு அகல மாட்டேன் என்கிறது. வீட்டிலோ என்னை எனது சிறிய தாயார் செய்யும் கொடுமை இவ்வளவு—அவ்வளவு என்று கூற முடியாது. எனது தகப்பனார் என் செய்வார்? என் தாயார் இருக்கும் வரை அவளுக்கு மறுத்துப் பேசியவரல்லர்—இப்பொழுதும் அப்படியேதான்—எனது சிறிய தாயாருக்கு மறுத்துப் பேசார்—அவள் இட்டது சட்டம்" என்றாள் பரிமளா.


"இன்னும் ஒரு 12 மாதங்களைக் கழித்துவிடு—அப்புறம் சுகப்படலாம்.—கஷ்டப்பட்டால்—சுகம்—இது உலக இயற்கை என இயம்பினான் காதலன். "கடவுள் ஒருவர் இருக்கிறார் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்! நீர்—சுகமே சென்று வாரும்" என்று கண்ணீர் உதிர்த்த வண்ணம் பரிமளா என்ற பெயருடைய அக்காரிகமணி பகர்ந்தாள்.

"பரிமளா! கண்ணீர் உதிர்க்காதே! என் மனம் பதறுகிறது! சுகமே இரு" என்று கூறியவனாய் அவளுடைய இரு கரங்களையும் பிடித்து முத்தமிட்டுப் பிரிந்தான்.

* * *

ஆறு மாதங்கள் ஓடி மறைந்தன.

என்ன போங்கள், கொஞ்சம் கூட உங்களுக்குப் புத்தியென்பதே யில்லை



சமீபத்தில் தம் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டுப் போன மிஸ்டர் இ. சி. கொ. ஸ்மித் அவர்கட்குப் பதிலாக ராவ் பகதூர் ஆர். சுப்பய்யா நாயுடு அவர்கள் சென்னை சர்க்கார் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஐரோப்பியச் சுற்றுப் பிரயாணத்தின் பின் வந்த அவருக்கு சென்ட்ரல் ஸ்டேஷனில் நன்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. —P. P. B.

போலத் தோன்றுகிறது? உங்கள் மகளுக்கு வயசு என்ன ஆச்சு? கலியாணம் செய்துவைக்க வேண்டாமா? அவள் பாட்டிற்குக் குதிர்போல் வளர்ந்துவிட்டாள்-இப்படியே வைத்துக் கொண்டிருந்தால் யார் கட்டிக் கொள்வார்கள்? இப்பொழுதே ஊரில் பலர்—பலவிதமாகப் பேசிக் கொள்கிறார்கள்—'உலை வாயை மூடலாம்—ஊர் வாயை மூட முடியுமா?' என்ன செய்யலாம் என்று உங்களுடைய உத்தேசம்?" என்று அம்மணி அம்மாள்—சோமசுந்தர முதலியாரைப் பார்த்துக் கேட்டாள்.

"என்ன அவசரம்? குடிமுழுகிப் போனமாதிரி கேட்கிறாயே. வருகிற ஐப்பசியில் மணம் செய்துவிட்டால் போகிறது" என்றார் பரிமளாவின் தந்தை.

"யார் மாப்பிள்ளையோ?"

"என்ன இப்படிக் கேட்கிறாய்? அவன் தானிருக்கிறானே நமது ரமணிகாந்தன்"

"நல்ல ரமணிகாந்தன் சிக்கினன் உங்களுக்கு? அவனைவிட உங்களுக்கு வேறு யாரும் இல்லைபோலும்" என்று வெறுப்புடன் கூறினாள்.

"அவனுக் கென்ன குறை?"

"குறைவு ஒன்றுமில்லை—அவன் ஏதோ காந்திப் பயித்தியம் பிடித்துத் திரிகிறான்—ஜெயிலுக்குப் போகிறான்—வருகிறான்—வீட்டிலேயே இருப்ப

தில்லை—அதுவுமன்றி—சொத்தா? ஒன்று....?"

"சொத்தைப் பற்றி நமக்கென்ன கவலை? படித்தவனாகவும்—யோக்கியனாகவும் இருந்தால் போதாதா? அவனைத் தவிர வேறு யாருளர்?"

"அழகு;....அழகு—நன்றாகக் கூறினீர்?" என்று சொல்லிக் கொண்டு சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"அவனைத் தவிர ஒருவருமில்லையா?"

"நீதான் சொல்லேன்"

"வேறு அயலான் ஒருவனுக்குக் கொடுப்பதைவிட, ஏன் எனது சகோதரனை..........

"யாருக்கு உனது தம்பிக்கா? குடிகாரனுக்கா? தாசி லோலனுக்கா?" என்று கோபத்துடன் எப்பொழுதும் பேசாத அவர்—கேட்டார்.

"ஆம்! அப்படித்தான் சொல்வீர்கள் இப்பொழுது—அவனுக்கு என்ன தெரியும்—சிறு பயலுக்குக்–கலியாணம் செய்து வைத்துவிட்டால் ஒழுங்காகி விடுகிறான்"

"பரிமளாவின் இஷ்டத்தைக் கேட்டுச் சொல்லுகிறேன்" எனலும் சம்பாஷணை முடிவுற்றது.

* * *

"அன்பும் பிரியமுமுள்ள பரிமளா! நினது லிகிதம் கிடைக்கப் பெற்றேன். நீ க்ஷேமமாகக் காலத்தைக் கழிப்பதாகத் தெரிந்து அளவிலா ஆனந்தம் கொண்டேன்—இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் சென்னைக்கு வருவேன்—அதன் பிறகு உன்னை வந்து காணுகிறேன்.

சதா உனது நினைவிலேயே காலத்தைக் கழிக்கும் காதலன்.

ர. கா."

இக்கடிதத்தைப் பரிமளா மாலை சுமார் ஆறு மணிக்குத் தனதுவீட்டிற்குப் பின்புறமுள்ள பூந்தோட்டத்தில் உட்கார்ந்து கொண்டு—பார்த்துக் கொண்டிருந்தாள். இச் சமயம் அங்கு யாரோ வருவதை அறிந்து கடிதத்தை மறைவாக இடுப்பில் வைத்துக் கொண்டு—தலை நிமிர்ந்து பார்த்தாள்.

தனது சிறிய தாயாரின் தம்பியான அருணகிரி தன் முன்பு நிற்பதை அறிந்து "மாமா" எப்பொழுது ஊரிலிருந்து வந்தீர்கள்" என்று கேட்டாள்.

"பரிமளா! இப்பொழுது தான் 5½ மணி வண்டியில் வந்தேன்! நீ சௌக்கியமா" என்று கேட்டான்.

"ஏதோ இருக்கிறேன்"

"சிறியவளாக இருந்த நீ இப்பொழுது மிகவும் 'பெரியவளாக இருக்கிறாயே? ஏன் நின்று கொண்டிருக்கிறாய்? உட்கார், என்று கூறிக்கொண்டு அவன் அங்கு போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்தான்.

"ஊரில் எல்லோரும் க்ஷேமந்தானே"

"எல்லாரும் க்ஷேமந்தான்–உட்கார்"

"இல்லை—வேலையிருக்கிறது. வீட்டிற்குச் சீக்கிரம் போக வேண்டும்" என்றாள்.

"பரிமளா! நான் ஒன்று உன்னைக் கேட்க வேண்டுமென்று இங்கு வந்திருக்கிறேன். அதற்குப் பதில் சொல்வாயா?"

என்ன மாமா இப்படிக் கேட்கிறீர்கள்—நீங்கள் கேட்டால் நான் பதில் சொல்லாம லிருப்பேனா?"

"நல்லது; நான் உன்னை மணம் செய்து கொள்ளலாம் என்று முடிவு செய்திருக்கிறேன்—உனது தந்தையை அக்காள் கேட்டதற்குப் பரிமளாவைக் கேட்கும்படி கூறினாராம்–உனது அபிப்பிராயமென்ன? (மௌனமாக விருந்தாள்) ஏன் பேசாமலிருக்கிறாய்? என்னை மணந்து கொள்வதற்குப் பிரியமில்லையா? அல்லது வேறு யாரையாவது காதலிக்கிறாயா?"என்று அருணகிரி ஒன்றும் தெரியாதவன் போல் கேட்டான்.

"மாமா! உங்கள் மேல் எனக்கு வெறுப்பில்லை—ஆனால் இந்த விஷயத்தில் மட்டும் எனக்கு வெறுப்பு—பிரியமில்லை" என்று நாணத்துடனும் தைரியத்துடனும் சொன்னாள்.

"அப்படியா! சரி இருக்கட்டும்—நீ மட்டும் என்னைத் தவிர வேறு யாரை மணம் செய்து கொள்வாயோ பார்க்கிறேன்" என்று தனக்குள் கூறிக்கொண்டிருக்கப் பரிமளா விர் என்று எழுந்து வீட்டுக்குள் போனாள். போகையில் இடையில் செருகியிருந்த கடிதம் நழுவி விழுந்து விட்டது. அதனைப் பொடுக்கென எடுத்தான் அருணகிரி. அதன் மேல் அதனைத் தன் சகோதரியிடம் கோடுக்க, அவள் தன் புருஷன் மூலம் கலாட்டா செய்யத் தொடங்கினாள். பரிமளா யார்யாருடனோ சிநேகமாக இருந்தாளென்றும் கடிதப் போக்குவரவுகூடச் செய்து கொண்டிருந்தாளென்றும் புகார் சொல்லி வீட்டுக்குள் குழப்பம் செய்யப்பட்டது. ஆதலால் பரிமளாவின் தந்தை குழப்பமுற்றுத் தன் புதல்வியைக் கண்டிக்கத் தொடங்கினார். ருதுவாகி வீட்டிலிருக்கும் ஒரு பெண் கடிதம் பெறுவது குடும்பத்திற்கே இழுக்கென்றும் தன் வம்சம் ஊரால் தூற்றப்படுதற்கு அவள் காரணமாயிருந்து விட்டாளென்றும் கூறி மிகுந்த கவலைப்பட்டார்.

இக் கவலையும் இடிப்புரையும் வீட்டோடு நின்றுவிட வில்லை. அருணகிரியினுடையவும் அவன் சகோதரியினுடையவும் பிரசாரத்தால் வெகு சீக்கிரத்தில் அவர்கள் வெளியிலெல்லாம் பரப்பிவிட ஊர் முழுதும் பரிமளா தீயொழுக்கமுடையவள் என்று கதை பரப்பப்பட்டது. அதோடு யாரோ ஒருவரிருவர்—அருணகிரியின் கையாட்கள்—ரமணீகாந்தனுக்கும் கடிதமெழுதினார்கள். அத்துடன் பரிமளாவின் தந்தை பற்பல கடும் சட்டங்களைப் போட்டு அவளைத் தொல்லைப் படுத்தவும் செய்தார்.

"சோமசுந்தர முதலியார்—சோமசுந்தர முதலியார்–தந்தி ஒன்று உங்களுக்கு வந்திருக்கிறது" என்று தந்திச் சேவகன் ஒருவன் சோமசுந்தர முதலியாருடைய வீட்டின் முன்புறம் நின்று கொண்டு அழைத்தான்.

"தந்தி" என்றதுமே யாருக்கும் பயந் தோன்றுவது சகஜம் தானே! அதே போல சோமசுந்தரமும்—அம்மணி அம்மாளும்—பரிமளாவும் வெளியே வந்தனர். பரபரப்புடன் தந்தியைப் பெற்று உடைத்துப் பார்த்தார் முதலியார்.

"ரமணீகாந்தன் இறந்தான்—போலீஸாரால்" என்று இருந்தது. அப்படியே வீறிட்டலறினாள் பரிமளா! ஏன்? அவமான மடைந்த நிலைமையில் தன்னைக் கட்டவிருந்த ஒருவனுங்கூட இறந்தான்!

தலைமேல் கையை வைத்துக்கொண்டு சோமசுந்தர முதலியார் அங்கு போடப்பட்டிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்தார். அம்மணி அம்மாள் மௌனமாக நின்று கொண்டிருந்தாள்.

* * *

ஐப்பசி மாதம்—குளிர்ந்த காற்று எங்கும் ரமணீகமாக வீசிக்கொண்டி

ருக்கிறது. ரமணி காந்தனுடைய பிரிவாற்றுமையால் பரிமளாவினுடைய உடம்பு-பாதியாகிவிட்டது. துக்கமே உருவாக இருந்த பரிமளா என் செய்வாள் பாவம்?

"என்னங்கோ! ஐப்பசி மாதம் வருகிற வாரம் நல்ல முகூர்த்த மிருக்கிறது. அருணகிரிக்கும்-பரிமளாவிற்கும் மணம் செய்து விடுவோமே? இன்னும் கோக்கியா? ஊர் முழுதும் சிரிப்பாய்ச் சிரிக்கிறது அவளைப் பார்த்து. அதோடு ரமணிகாந்தனும் போனுன் இனியென்ன என்று அம்மணி அம்மாள் சோமசுந்தர முதலியாரைக் கேட்டாள்.

"இனியும் தடைசெய்து கொண்டிருந்தால் வீட்டில் சச்சரவு ஏற்படும்—குடும்பக் கலகம் அதிகமாகிவிடும்—பரிமளா-கஷ்டப்பட நேரிடும்-காரியத்தை முடித்து விடலாம்" என்று யோஜித்தவராய் முதலியார் "சரி! உன்னிஷ்டம் போலவே முடித்து விடலாம்" என்றுர்.

இச் சம்பாஷணையை முற்றிலும் பக்கத்தறையிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த பரிமளாவின் மனம் துடி-துடித்தது. "இருந்திருந்து இவனையா மணம் செய்து கொள்வது!" என்று எண்ணியவளாய்க் கண்ணீர் சொரிந்தாள்.

அன்று இரவு நடுநிசி; எங்கும் நிசப்தம். கார் இருள். நாய்களின் ஊளையைத்தவிர வேறு சப்தமே யில்லை. நமது முதலியாரின் வீட்டினின்றும் ஓர் உருவம் வெளிப்பட்டுத் தெற்கு நோக்கி நடந்துசென்று கொண்டிருந்தது. ஆம்! அது மனித உருவந்தான்! சந்தேகமில்லை! அதிலும் பெண்ணுருவம்! பேயல்ல!

அவள் வேறு யாருமல்ல—முதலியாரின் குமாரத்தியான பரிமளாதான். "எங்கு செல்லுகிருள் இந் நடு நிசியில்?" என்று வாசகர்கள் கேட்கலாம்! அவள் வேறு எங்கும் செல்லவில்லை. அவ்வூர் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றுள். அப்பொழுது புறப்படத் தயாராக இருந்த (சென்னைக்கு) "பூநமல்லி எக்ஸ்பிரஸில்" ஏறினள்.

எக்ஸ்பிரஸும் 60 மைல் வேகத்தில் சென்னையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. காலை ½ மணிக்குச்சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனை அடைந்தது பூநமல்லி.

பரிமளா ஸ்டேஷனை விட்டு வெளிச்சென்று நேரே கோவிந்தப்பநாய்க்கன் வீதியை நோக்கிச்சென்று கொண்டிருந்தாள் (முன்பு இரண்டு முறை சென்னை முழுவதையும் நன்றாக அறிந்தவள்) கோவிந்தப்ப நாய்க்கன் வீதி 210-ம் நெம்பர் வீட்டிலுள்ள—மேல் மாடியில் ஓர் சிறு அறையை வாடகைக்கு வாங்கி அதில் குடி புகுந்தாள்.

"திருவல்லிக்கேணி —கடற்கரையில் இன்று மாலை ஓர் பொதுக் கூட்டம்—முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பலர் பேசுவார்கள். எல்லோரும் விஜயம் செய்ய வேண்டியது" என்ற துண்டுப் பிரசுரமொன்று பரிமளாவின் கையில் இருந்தது. பரிமளாவிற்கு இரண்டு மூன்று நாட்களாக உடம்பு அசௌக்கியமாக இருந்ததால் கூட்டத்தில் தனியாக உட்கார்ந்திருந்தாள்.

கூட்டம் ஆரம்பிக்கப்பட்டதும், ஒருவர் எழுந்து "தோழர்களே! இன்று இக்கூட்டத்திற்கு இந்தியா முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து வந்தவரும் காங்கிரஸ் தலைவரில் ஒருவருமான—ரமணி காந்தன் இக்கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார்" என்று கூறினர்.

இதைக் கேட்ட பரிமளாவிற்குத் தூக்கி வாரிப்போட்டது. இறந்துபோனதன் காதலர் தான் ஒருசமயம் ....என்று நினைக்கும் சமயம் அங்கு உயரமாகப் போடப்பட்ட நாற்காலியில் ஒருவர் உட்கார்ந்தார். 'ஆம்! அவர்தான்—பரிமளாவின் காதலரான ரமணிகாந்தன். ஸ்தம்பித்து அப்படியே உட்கார்ந்து விட்டாள் பரிமளா. "இறந்தவர் எப்படி உயிருடன் இங்கு தோன்றினர்; அவர்தானு இவர்? அல்லது அவரைப் போல வேறு ஒருவரோ?" என்று யோஜித்துக் கொண்டிருந்தாள்.

கூட்டம் கலைந்தது. எல்லோரும் சென்று விட்டனர். பரிமளா தன்னந்தனியே வீற்றிருப்பதை அறிந்த கூட்டத்தில் கடைசியில் சென்றுகொண்டிருந்த தலைவரும்-மற்றும் சில தொண்டர்களும் கவனித்து இவளைநாடி அங்கு வந்தனர்.

"இதுயார்? பரிமளா போல இருக்கிறதே!" என்று கேட்டார் ரமணிகாந்தன்.

"ஆம்! நான்தான்! தனிமையாக இரண்டொரு விஷயங்கள் பேச வேண்டும் என்னுடன் வருகிறீர்களா?" என இருவரும் தனியாக கோவிந்தப்பநாய்க்கன் வீதியை அடைந்து—பரிமளாவின் அறையில் உட்கார்ந்தனர்.

"பரிமளா! இங்கு எங்கு வந்தாய்?" என்று கேட்டார் ரமணிகாந்தன்.

சங்கதி முழுவதையும் தெரிவித்தாள் பரிமளா.

"இது உனது மாமனுடைய சூழ்ச்சி. அவன் செய்த மோசந்தானிது! அந்தத் தந்தி எங்கிருந்து வந்தது என்பதைக் கவனித்தாயா?" என்று கேட்டான் ரமணிகாந்தன்.

"அவசரத்தில் குழப்பத்தில் அதை ஒருவரும் கவனிக்க வில்லை. அப்படி நான் நினைப்பதற்கே அப்பொழுது சந்தர்ப்பமில்லை. மோசம் போனேன். கஷ்டப்பட்டேன். கடைசியில் உங்களை அடைந்தேன். இதுவே போதும் எனக்குக் காதலரே!" என்றுள் பரிமளா.

"காதலி! உனது கஷ்டம் என்னுல் அன்றே ஏற்பட்டது. என்னை மன்னிப்பாயாக" என்று கூறி முத்த மீந்தான் ரமணிகாந்தன்.


மறுநாள் இருவரும் சோமசுந்தர முதலியார் இருக்கும்படியான இடத்திற்குச் சென்று உண்மையைத் தெரிவித்தனர். உண்மையை அறிந்த அவர் ஆனந்தப்பட்டுத் தன் மகளை ரமணிகாந்தனுக்கு மணம் செய்து வைத்தார்.

இப்பொழுது ரமணிகாந்தனும் பரிமளாவும் சுகமே வாழ்ந்து வருகின்றனர்.

ஊழியன் சந்தா.

உள்நாடு வருடச் சந்தா ரூ 6-0-0
,, ஆறு மாதங்கட்கு ,, 3-0-0
வெளிநாடு வருடச்சந்தா ,, 10-0-0
,, ஆறு மாதங்கட்கு ,, 5-0-0


காரியஸ்தர்,
ஊழியன் ஆபீஸ்,
56, தம்புசெட்டித் தெரு,
சென்னை.




சிட்னிக் கடலில் ஒரு பெண் நீந்தத் தயார் செய்கிறாள். —N. I. A.



திருவாங்கூர் திவான் சர். ஹபிபுல்லா அவர்கள் திருவாங்கூர்ச் சட்ட சபைகளின் வரவு செலவு திட்டக் கூட்டத்தில் தலைமை வகித்தார். —P. P. B.




பிரன் போட்டோ பீரோ சொந்தக்காரருக்கு திருவனந்தபுரம் திவான் சர். ஹபிபுல்லா அவர்கள் விருந்தளித்தார்கள். —P.P.B.



சங்கரன் கோவிலுக்குச் சமீபம் செந்தட்டியூரில் சாமி யாடுகையில் கொட்டகைக்கு நெருப்பேற்பட்ட இடம். நெருப்பினால் மொத்தம் 85 பேர் இறந்து போனார்கள். —P. P. B.




சென்ற வாரம் பங்களூர் ஹாக்கி விளையாட்டாளர்கட்கும் சென்னை ஹாக்கி விளையாட்டாளர்கட்கும் எம். வி. வி. மைதானத்தில் போட்டி நடைபெற்றது. சென்னைக் கட்சி வெற்றி பெற்றது. —P. P.B.



சேலம் சுதேசிக் காட்சியைத் திறந்து வைத்துவிட்டு மீண்டுவந்த ஸ்ரீமதி சென்குப்தாவுக்கு ஸ்ரீமதி ராதபாய் சுப்பராயன் எழும்பூரில் ஒரு உபசார விருந்து நடத்தினர். படத்தில் நடுவில் ஸ்ரீமதி குப்தாவும் வலது கடைசியில் ஸ்ரீமதி ராதாபாயும் காணப்படுகின்றனர். —P. P. B.



சென்னை விவசாய டைரக்டர் திரு. என். வி. ராமமூர்த்தி அவர்கள் கோடம்பாக்கத்தில் ஒரு புதிய கைத்தொழில் பாடசாலையைத் திறந்து வைத்தார். படத்தின் நடுவில் திரு. ராமமூர்த்தியும், திரு. நாகேஸ்வர ராவ் பந்துலுவும் காணப்படுகிறார்கள். —P. P. B.



விகடத்திரள்

ஒரு ஹோட்டலில் புகுந்த ஒருவர் சாப்பிட்டு முடிந்ததும் :—என்னிடம் பணமில்லையே.

ஹோட்டல்காரன்:—பரவாயில்லை. உங்கள் பெயரை ஹோட்டல் சுவரில் எழுதிப் போட்டிருக்கிறோம் ; எப்பொழுதாவது வந்து பணத்தைக் கொடுத்து அழித்துவிட்டுப் போங்கள்.

சாப்பிட்டவர் :—அது அசிங்கமல்லவா? ஹோட்டலுக்கு வருபவர்களெல்லாம் பார்த்துச் சிரிப்பார்களே.

ஹோட்டல்காரன் :—அதுபற்றி வருத்தம் வேண்டாம். பெயரின்மீது உங்கள் அங்கவஸ்திரத்தையும் சட்டையையும் போட்டு மூடிவிடுவோம்.

* * *



ஜட்ஜ் :—"ஹீயரிங்" முடிவுற்றிருக்கும் இப்போதுகூட நீ குற்றவாளி என்பதை ஒப்புக்கொள்ள மாட்டாய் ; அல்லவா ?

குற்றவாளி :—என்பக்கத்து வக்கீலின் வாதத்தைக் கேட்ட பிறகு நான் உண்மையில் குற்றம் செய்திருக்க மாட்டேனென்று எனக்குத் தோற்றுகிறது.

* * *



ஒருவர் :—என் மனைவி ஓயாது அவளுடைய முதல் கணவனைப்பற்றிப் புகழ்வதைக் கேட்டுக்கொண்டிருந்து இருந்து தலையெல்லாம் வலியெடுத்துப் போய் விடுகிறது.

வக்கீல் :—உங்கள்பாடு பரவாயில்லை போலிருக்கிறதே ; என் மனைவி நிமிஷமும் விடாது இனி வரப்போகும் புருஷனையல்லவா புகழ்ந்து கொண்டிருக்கிறாள் ?

* * *

கல்யாணம் நடைபெற்ற மறுநாள் காலையில் தெருவில் கூட்டிக்கொண்டிருந்த வேலைக்காரி ஒரு காண்டியை (ஸ்பூன்)க் கண்டெடுத்தாள்.

அவள் :—யாரோ ஒரு விருந்தாளியின் சட்டைப்பைக் கிழிந்தது போலிருக்கிறது.

* * *

தாயார் :—(புதல்வனிடம்) தம்பி அதோ அந்த மாதா கோவிலில்தான் நானும் உன் தந்தையாரும் கல்யாணம் செய்து கொண்டோம்.

சிறுவன் :—ஆமாம் ! அம்மா ! அப்போது என்னை யார் வைத்துக்கொண்டிருந்தார்கள் ?

* * *

இருகாதலர் இரகசியமாக உறுதிமொழி யளித்துக் கொள்கிறார்கள்.

காதலி :—உங்கள் எல்லாத் துன்பங்களிலும் பங்கு கொள்வேன் நான்.

காதலன்:—எனக்குத் துன்ப மில்லையே!

காதலி :—நாம் கல்யாணம் செய்து கொண்ட பிறகு நடப்பதைக் கூறுகிறேன்.

* * *

நோயாளி :— ஐயா வைத்தியரே ! என் இருதயமெப்படி இருக்கிறது ?

வைத்தியர்:—சுத்தமாய்த் தோற்றவில்லை ; இருந்தாலும் நீ சாகும் வரையிலும் உம்மோடு இருக்கும்.

பொட்டுப் பொடி

உடம்பு, முகம் ஆகியவற்றில் பொதிந்து கிடக்கும் வசீகரம், வீடு வாசல், நிலபுலம், பொன் வெள்ளி முதலியவற்றை விடப்பெரிதாகும். உண்மையான அழகு உடம்பின் ஆரோக்கிய நிலைமை, மனதின் தூய்மை, பெருந்தன்மை முதலியவற்றைப் பொறுத்திருக்கின்றது.

—பண்டித T. W. ஷானன்.

* * *

பொதுவாக எவ்வளவுக் கெவ்வளவு ஒரு பெண் அழகுடைய வளாகின்றாளோ அவ்வளவுக் கவ்வளவு அவள் புத்தி மிகுந்திருக்கின்றாள். அவலட்சணம் மிகுந்தோறும் புத்தியும் குறைகின்றது. ஒரு சிலர் அழகு குன்றிப் புத்தி மிகுந்தும், புத்தி அதிகரித்து அழகு குறைந்து மிருப்பவர் புறநடையே யாவர்.

—ஹெரால்டு மிட்வீக் சஞ்சிகை.

நீலாநாகினியின் அவதூறு

காந்திஜியைப் பற்றி ஏளனம்

காந்திஜீயோடு சில வருடங்கள் சிஷ்யையா யிருந்துவிட்டு அப்பால் அமெரிக்காவுக்குத் துரத்தி விடப்பட்ட நீலநாகினி தேவி என்ற நீலா கிராம் குக் அமெரிக்காவி லுட்கார்ந்துகொண்டு இந்தியாவைப் பற்றியும்—விசேஷமாக காந்திஜீயைப் பற்றியும்—விஷமத்தனமாக வியாசங்க ளெழுதி வருகிறாள்.

ஒரு கட்டுரையில் பூனா ஜெயிலில் எவ்வாறு தான் முதல் தடவை காந்திஜீயைச் சந்தித்தா ரென்பதை அடியில் வருமாறு எழுதுகிறாள்:—

"நான் இதுவரையிலும் பார்த்த எந்தப் புகைப்படமும் காந்திஜீயின் முழு அவலட்சணத்தையும் காண்பிக்கவில்லை. அவர் உலர்ந்த சரீரத்தோடும் சுருங்கியுமிருப்பார். உடல் கனம் 100 ராத்தலுக்குள்ளேயே இருக்கும். எலும்பெல்லாம் தவிட்டு நிறமான தோலைக் கிழிக்கிற முறையில் உடம்பு முழுதும் குத்திக்கொண்டிருக்கும். காதுகள் மங்குப் பாத்திரத்தின் கைப்பிடியைப்போல் நீண்டிருக்கும். உதடு நீலவர்ணத்துடனிருப்பதோடு அடி உதடு முன்னே தள்ளியிருக்கும். அவர் பல்லில் பலம் இல்லை. இருக்கும் ஒன்றிரண்டுக்கு இடையே பெரிய வெளி காணப்படும்.

"நான் முதலாவது நெருங்கியதும் அவர் புன்சிரிப்புக் காண்பித்தார். அந்தச் சிரிப்பை வசீகரமிக்கது என்று கொள்கின்றார்கள். என்னை அது வசீகரிக்கவில்லை. அதற்குப் பதிலாகத் துன்புறுத்தியது."

மனோவசிய சக்தி

நீலாநாகினி மேற்கூறியவாறு சில பாராக்கள் எழுதியதும் ஓரிடத்தில் குறிப்பிடுவதாவது:—

"நான் அவரோடு பேசிக்கொண்டிருந்ததும் ஒருவிதமான மனோவசிய சக்தியால் என்னைக் கவர்ந்தார். ஆதலால் நான் அவரது சரீர அவலட்சணத்தை மறந்து விட்டேன். சில நிமிஷ நேரங்கட்குள் அவருடைய வேடிக்கைகளிலும் தமாஷ்களிலும் ஈடுபட்டுச் சிரித்துக் கொண்டிருப்பதாகக் கண்டேன். அவரிடம் தமாஷ் பேச்சு நீங்காத ஒன்றாகும். எங்களுடைய முதல் சம்பாஷணையில் தீண்டாதார் உத்தாரணத்தைப்பற்றிப் பேசினோம். இதன் விளைவு என்னை உற்சாகப்படுத்தி நம்பிக்கை கொள்ளும்படிச் செய்துவிட்டது."

அப்பால் அவள் பெங்களூருக்கு வந்து அங்கு சிலநாள் தங்கிவிட்டு ஆதிதிராவிடர்களோடு வசிக்க ஒரு கிராமத்திற்குப் போனதில் அங்கு நோயாக விழுந்துவிட்டாளாம்.

அவளுடைய தீயவொழுக்கத்திற்கு ஓர் அபூர்வமான வியாக்கியானம் சொல்லி அவள் எழுதுவதாவது:—

"காந்தி, நான் ஏன் ஹரிஜனங்களோடு வசிப்பதற்காகப் போனேன் என்பதை விளக்கி ஒரு கடிதமெழுதச் சொன்னார். நான் விஷமத்தனத்திலிருந்து தப்பிக் கொள்வதற்காகப் போனேனென்றும் விஷமத்தனம் ஒருவிதமான தீயவொழுக்க மென்றும் பதில் கூறினேன். தீயவொழுக்கமென்ற மதப் பிரயோகம் துரதிர்ஷ்டமாக முடிந்துவிட்டது. எனது கடிதம் காந்தியின் பத்திரிகையான ஹரிஜனில் பிரசுரம் செய்யப்பட்டு விட்டது. அதனால் பெரிய புகார் எழும்பியது. ஆகையால் மீண்டும் பதில் சொல்லும்படி வற்புறுத்தப்பட்டேன். இம்முறை நான் வாயைத் திறவாது மௌனமாக விருந்துவிட்டேன்."

காந்திஜியின் எளிய வாழ்க்கை முறையைக் கண்டித்து அவள் எழுதுவதாவது:—அவர் இடுப்புத் துணிமட்டிலும் அணியும் எண்ணம் பிந்தி ஏற்பட்டதாகும். இந்த நல்ல எண்ணம் நடுவயதில்தான் வந்தது. அதாவது வாலிபப் பருவத்தில் செய்ய வேண்டுபவை யெல்லாம் செய்து முடிந்தபிறகு வந்தது. இடுப்புத் துணி மட்டிலும் அணிவது இதர இந்துக்களிலிருந்து தன்னிடம் தனியடையாளம் தோற்றுவதற்காகும். வாலிபப் பருவத்தில் லண்டன் தெருக்களில் நன்றாக ஆடையுடுத்திக்கொண்டு இரா வாழ்க்கையில் மூழ்கினார். அவர் தபோ வாழ்க்கையைப் பிரசாரம் செய்யும்போது தாம் இளமையில் அனுபவித்த எதையெதைத் தம் துணைவர்களிடம் விடச் சொல்கிறாரென்பதை அவர் அறிவார்.

"பகல் பொழுதில் அவர் வேலை செய்யும்போது ஒரு பாயில் உட்கார்ந்துகொண்டு ஏராளமான தலையணைகளைக் குவித்து வைத்துக் கொள்வார். சில வேளைகளில் ராஜரீகம் நடத்தினாற்போல் காணப்படுவார். அவரது ஆடை முழுதும் கைத்தறியில் நெசவு செய்யப்பட்டதென்பதைத் தவிர மற்றப்படியெல்லாம் ஒரு அரசருக்கிருப்பது போல் தோற்றும். இரண்டு பெண்கள் ஓயாது வீசிக் கொண்டே பக்கத்திலிருப்பார்கள். அவர்கள் கையோய்ந்தால் விடுதலையளிக்க ஒரு வரிசைப் பெண்கள் தயாராக எப்போதும் நின்றுகொண்டிருப்பார்கள்.

"ஒவ்வொரு நாளும் பகல் 11 மணிக்கு ஒரு பெரிய பரபரப்புக் காணப்

படும். ஏனெனில் அது ஸ்நான சமயம். ஒரு தடவை நான் பேசிக்கொண்டிருந்தபோது அவரது ஸ்நான வேளை நெருங்கி விட்டதாக அடையாளம் தெரிவிக்கப்பட்டது. அவர் என் நேருக்குக் கண்ணைக் காண்பித்துக்கொண்டு "இப்போது நான் இந்த வேலையை மேற்கொள்ள வேண்டும். அது ஒரு நீண்ட வேலை என்பது உனக்குத் தெரியும்" என்றார்.

"மெடலீன் ஸ்லேட் (ஸர். எஸ் மண்ட் ஸ்லேட் என்ற ஆங்கில ராணுவ அதிகாரியின் புதல்வி) தான் ஸ்நானச் சடங்கின் எஜமானி. இந்த மீராபாய் தான் காந்தியின் வஸ்திரங்களை யெல்லாம் சுத்தமும் செய்தாள். அவர் குளிக்கும்போது "நான், நீ" என்று உதவி செய்வதில் பெண்கட்குள் பெரிய குழப்பம் உண்டாகும். அவர் உடம்பில் என்னையும் தடவுவார்கள்."

நீலாநாகனியைக் காந்திஜியே அவளது தபோ வாழ்க்கையிலிருந்து துரத்தி ஆஸ்ரமத்திலும் இந்தியாவிலுமிருந்து போகச் சொல்லிவிட்டாரெனக் கூறுகிறாள்.

மோகனதாஸ் பாட்மின்டன் கிளப்

பினங்கு தனவணிகச் சிறுவர்களால் ஒரு பாட்மின்டன் கிளப் ஆரம்பிக்கப் பெற்று சுமார் ஒரு மூன்று திங்களாக மிகவும் நன்முறையில் திறமையாய் நடைபெற்று வருவதோடு, அதற்குப் பெரிய செட்டியார்களும் ஆதாவளித்துச் சிறுவர்கள்பால் ஊக்கங்காட்டி வருகின்றார்கள். சின்னஞ்சிறு சிறுவர்களும் திறமையாய் ஒற்றுமையுடன் விளையாடி வருகின்றனர். சிறுவர்களின் ஆர்வமிக்க ஆற்றலுக்கிணங்க விளையாட்டிற்கு இட வசதி தந்து உதவிய நம் பெரியாருக்கு எங்களின் மனமார்ந்த நன்றியறிதல் உரியதாகுக என்று தலைவர் திரு. கரு. மாணிக்கம் அறிவிக்கிறார்.

இலங்கை சென்ற தனவணிகர்

தேவகோட்டை திரு. அரு. லெ. வெ நடராஜன் செட்டியார் தம்பதிகளும் அன்னாருடன் வந்திருந்த இரண்டு ஆச்சிகளும் 3-8-34ல் மெயிலில் கொழும்பு கோட்டை ஸ்டேஷனிலிருந்து தேவகோட்டைக்குப் பிரயாணித்தார்கள். திரு. நடராஜன் செட்டியாரவர்களை வழியனுப்ப ஏராளமான நண்பர்கள் கோட்டை ஸ்டேஷனுக்கு வந்திருந்தனர் என்று ஒரு இலங்கை நிருபர் எழுதுகிறார்.

இத்தாலியப் பெண்மணியாகிய மாரனோ வென்பவர் தூங்கும்போது அவரது உடம்பிலிருந்து வெள்ளி போன்ற காந்தி வீசி சுற்றிலும் ஒரு கோளமாக அமைகின்றது. இதன் காரண மென்னவென்று விஞ்ஞானிகளால் கண்டுகொள்ள முடியவில்லை.

* * *

தேளை, தவளையாகிய இரண்டுக்குமுள்ள வித்தியாசங்களில் முக்கியமானது தேளைக்குப் பல்லில்லை தவளைக்குப் பல்லுண்டு என்பதாம்.

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்.

மின்வெட்டு

மாமியை அடித்த மருமகன்.

—தலைப்பு

முன்னேற்றத்தின் அறிகுறி பெண்டாட்டியை அடிப்பது முன்னுளைய வழக்கம் தானே.

* * *

அடுத்தவாரம் முதல் நான்கு தினங்களில் பிரிட்டனின் ஆகாயப் பாதுகாப்பை உத்தேசித்து ஒருவிமானம் மற்றொன்றை எதிர்ப்பது போலவும் வேறொன்று தற்காப்பிற்காகச் செல்வதைப்போலவும் ஒரு தமாஷ் சண்டை செய்து காண்பிக்கப்படும். அதற்காக 364 யுத்தவிமானங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

—செய்தி

இந்தச் சண்டையை ஆயுதபரிஹாரண மகாநாட்டுத் தலைவரும் மெம்பர்களும் போய்ப் பார்ப்பார்களா?

* * *

சீனப்பெண்கள் தங்களுக்கு எப்பொழுதாகிலும் பிள்ளைகள் பிறக்குமா என்பதை யானையின் மீது கல்லெறிவதன் மூலம் தெரிந்து கொள்கின்றனர். எறியப்பெற்ற கல் யானையின் முதுகில் நின்றால் பிள்ளை பிறக்குமென்று தெரிந்து கொள்கின்றனர்.

—செய்தி

நல்லவேளை! யானையின் பக்கத்தில் நின்று கல்லை கட்டியை எறிந்தார்களானால் எக்காலமும் குழந்தை பெறவழியே இல்லாமலாகி விட்டாலும் விடலாம்.

* * *

கூலி கேட்டதற்குத் துடைப்பக் கட்டை அடியாம்.

—தலைப்பு

திட்டமாக இன்னதுதான் கூலியென்று பேசிக்கொள்ளா திருந்திருப்பார்களோ ஒருநாள்!

* * *

இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

—பிரசங்கி

முடித்துக் கொள்வதல்ல; மூடிக்கொள்ளவேண்டும்; அல்லது கிழித்துக் கொள்ள வேண்டும்.

* * *

பதின்மூன்று வயதுடைய டேவிட் ரிலே என்னும் மாணவன் தன் பழைய பாடங்களைச் சுலபத்தில் தலை கீழாக எழுதவும் படிக்கவும் செய்கிறானும்.

அராபி மனப்பான்மை படைத்தவன் போலும் இச்சிறுவன்—

* * *

சுக்கூர் ரெயில்வே ஒர்க்ஷாப்பில் மாதம் 20 ரூபாய் சம்பளமுள்ள 20 காலிப் பதவிகளிருக்கின்றன. இவற்றிற்கு 2000 பேர் மனுச்செய்துகொண்டனர். இதிலிருந்து வேலையில்லாத்திண்டாட்ட மிகுதி எவ்வளவு உக்ரமாக இருப்பதென்பது தெரியவரும். ஆபீஸுக்குள் நுழைய மனுதார்கள் ஒருவரையொருவர் நெருக்கித் தள்ளிக்கொண்டு சச்சரவு செய்ததனால் பலர் காயமடைந்தனர். ரெயில்வே அதிகாரி வெறுப்படைந்து ஆட்களைத் தெரிந்தெடுக்கும் நாளை ஒத்தி வைத்து எல்லோரையும் வீட்டுக்குப் போகச் சொல்லிவிட்டார்.

கலாசாலைகளின் வெளிச் சுவர்களில் எழுதிப் போடவேண்டிய திருவாசகம் இது!

* * *

நான்கு வயதுடைய பையன் ஒருவன் மீனைப் போல் தண்ணீரிலேயே வசிக்கிறான். பாசி, மீன் முதலியவற்றை ஆகாரமாக உட்கொள்ளுகிறான். தூக்கமும் தண்ணீரிலேயே. தரையைக் கண்டால் அவனுக்குப் பிடிப்பதில்லை.

மச்சவல்லபனின் அவதாரம் போலிருக்கிறது இவன்.

* * *

பாதம் பருப்பை விட வேர்க்கடலையில் அதிக ஜீவசத்து அடங்கியிருக்கிறதாம்.

உண்மைதான்; சிலகால் வேர்க்கடலையைத் தின்று வயிறு வலிக்கத் தொடங்கியதானல் ஜீவசத்து அடங்கிப் போவது உண்மைதான்.

சென்னை நகர எல்லைக்குள் செம்பியத்தைச் சேர்த்துவிட வேண்டுமென்று ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

சென்ற ஒரு மாதத்தில் இலங்கையிலிருந்து ஒரு லட்சத்து அறுபத்தோராயிரம் தேங்காய் இந்தியாவில் இறக்குமதியாயிருக்கிறது.

---

30 அடி நீளமுள்ள எலும்புக்கூடு

தாயகா எஸ்டேட்டிலுள்ள பெயின்தியா என்ற கிராமத்துக்குப் பக்கத்தில் நதிக்கரையில் ஒரு கலியுக விநோத வஸ்து கண்டுபிடிக்கப்பட்டது. மணலுக்கு மேல் ஒரு எலும்புக் கூடு தென்படுவதை ஒரு விவசாயி பார்த்தார். அவர் அதை வெளியே இழுக்க எவ்வளவோ முயற்சி செய்தும் முடியவில்லை. பிறகு அதைத் தோண்டி எடுப்பதற்கு அந்த எஸ்டேட்டின் சொந்தக்காரர் அனுமதி கோரப்பட்டது. சொந்தக்காரர் அனுமதி கொடுத்ததின் பேரில் கிராம வாசிகள் மணலைத் தோண்டி 31½ அடி நீள முள்ள ஒரு எலும்புக் கூட்டை வெளியே எடுத்தனர். எல்லா விஷயங்களிலும் அந்த எலும்புக்கூடு மானிட எலும்புக் கூடாகக் காணப்படுகின்றது. அதன் கால் பாகம் மட்டும் 10 அடிக்கு மேல் இருக்கின்றது. அதைத் தூக்க மூன்று மனிதர்களின் பலம் தேவையாக இருந்தது. ராம்காரில் அந்த எலும்புக்கூடு வைக்கப்பட்டிருக்கிறது.

"என் புருஷன் உடம்பில் 139 டிக்ரி சூடிருக்கிறது! ஐயோ! உடன் ஓடி வாருங்கள்! டாக்டர்! டாக்டர்!" என்று டெலபோனில் ஒரு பெண் சத்தம் போட்டாள்.

அதற்கு டாக்டர்:—(அமைதியாக) என்னால் ஒன்றும் செய்யமுடியாது. நெருப்பணைக்கும் படைக்குச் செய்தி சொல்லு.

சுயராஜ்ய வாழ்வே

சுக வாழ்வு!

வைடமின்

(சத்துப் பொருள்)

வைடமின் என்பது போஷணைதரும் ஒருவகைப் பொருளாகும். இது பற்பல உணவுப் பொருள்களில் காணப்படுகிறது.

மனித வுடம்புகள் பற்பலவித தாதுப் பொருட்களின் கலவை யாதலால் அடிக்கடி (அத்தாதுப் பொருட்கள் செலவாகும் தோறும்) புதிது புதிதாகச் சேர்க்கப்பட வேண்டும்.

வைடமினைப் பல பகுதிகளாகப் பிரிக்கின்றார்கள் சாஸ்திரிகள்.

அதில் முதன்மையானது வைடமின் A யாகும். இப்பகுதி கண் காது ஆகியவற்றிற் கேற்படும் கெடுதிகளைத் தடை செய்வதோடு தளர்ந்த ஈரலை வலுப்படுத்தி, ஜீரண சக்தியைப் பெருக்கி, பசியை அதிகப்படுத்துகிறது.

பால், வெண்ணெய், முட்டை சில பாற்கட்டிகள், பச்சை நிறமான இலைகள் (கீரைகள்) ஈரல் ஆகிய பொருட்களில் வைடமின் ஏ மிகுந்துள்ளது. காட்லிவர் ஆயில் என்னும் மீன் எண்ணெய் A வைடமினுக்குச் சிறந்ததாகும்.

வைடமின் B என்பது உடல் தளர்ச்சியைத் தடைசெய்து மலபந்தத்தை நீக்குகிறது. இதனை பால், கோதுமை ரொட்டி, கள் மண்டி ஆகியவைகளிலும் மொச்சை, பருப்பு, முட்டைகோஸ், உருளைக்கிழங்கு முதலியவை போன்ற தாவரப் பகுதிகளிலும் ஏராளமாகக் காணலாம்.

வைடமின் C பெரும்பான்மையும் பழங்களில் காணப்படுகின்றது. விசேஷமாக ஆரஞ்சு, லெமொண், எலுமிச்சம் பழம் ஆகியவற்றில் காணலாம். பாகம் செய்யப் பெறாத முட்டகோஸ் நீர்க்கீரை, டொமெட்டோ முதலியவற்றில் அதிகமாக வைடமின் C காணப்படுகின்றது.

வைடமின் D சூரிய வெளிச்சத்தால் கிடைப்பதாகும்.


வைடமின் E, G ஆகிய இரண்டும் மேலே சொன்ன உணவுப் பொருட்களில் அடங்கி யிருக்கின்றன.

இதுகாலை மக்கள் உடல்பலம் குறைந்து தோற்றுவதற்குக் காரணம் அவர்களது வாழ்க்கை முறை மிகவும் மாறுபட்டுப் போயிருப்பதும் முன்னொரு காலத்தில் இருந்தது போலில்லாதிருப்பதுமாம்.

தற்போது உணவுப் பொருட்கள் எங்கோ சேமிக்கப்பட்டு ஏற்றுமதி செய்து வெகுதூரமான விடங்கட்கு அனுப்பப்பட வேண்டி யிருக்கின்றன. அஃதுடன் சமைக்கப்பட்ட (பாகம் செய்யப்பட்ட) உணவுகளும் கூட விற்பனை செய்யப்படவும் ஏற்றுமதி செய்யப்படவும் செய்யப்படுகின்றன.

இவ்வாறு அனுப்பப்படுவதில் பாதகமொன்றுமில்லை. என்றாலும் நாம் சாப்பிடும் முறையால் கெடுதி ஏற்படுகின்றது. நாம் ஏதோ ஒரு பொருளை அதிகமாக சாப்பிட்டுவிட்டு வேறு சிலவற்றைத் தள்ளிவிடுகிறோம். எந்தெந்தப் பொருளை எவ்வளெவ்வளவு சாப்பிட வேண்டுமோ அவ்வாறு செய்வதில்லை.

ஆதலால் நாம் அவசியம் வைடமினைப் பற்றிய ஞானம் பெற்றிருக்க வேண்டும். அப்படியானால் தகுதியானவற்றை அளவோடு சாப்பிட்டு நலமடையலாம். தினசரி நாம் சாப்பிடும் ஆகாரத்தில் பால், கீரை வகைகள், காய்கறிகள், பழங்கள், கோதுமை ரொட்டி ஆகியவை இடம்பெற்றிருக்க வேண்டு மென்பதைத் தெரிந்திருக்க வேண்டும்.



உலகம் முழுதும் சுற்றுப் பிராயணம் செய்து வரும் டாக்டர் ஸ்டான்லி ஜோன்ஸ் பூனமல்லி Y. W. C. A. கட்டிடத்தில் கிருஸ்தவப் பெண்கள் கூட்டத்தில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். படத்தில் வலது கடைசியில் டாக்டர் ஜோன்ஸ் நிற்கிறார். —P. P. B.

ஜெபு நிசா

அவரது உன்னத வாழ்க்கை

(R. M. ஸின்ஹா, M.A.)

குழந்தைப் பருவம்

மொகலாயர்கள் பிரபல உச்ச ஸ்தானத்திலிருந்த காலத்திலே, ஆணிலும், பெண்ணிலுமான அனேகர்கள் தங்கள் அசாதாரண புத்தியின் நுட்பத்தால் செய்த செயல்கள் இன்றுள்ள மக்களின் மனதைவிட்டு நீங்காதிருக்கிறது. அவர்கள் யுத்தத்திலே சண்டை போட்டதாலோ அல்லது தங்கள் ரத்தத்தைச் சிந்தியதாலோ அவர்களை நாம் இன்று எண்ணவில்லை. அவர்கள் மரணத்திற்குப் பிறகும் நாம் அவர்களை நினைத்திருப்பதெல்லாம் அவர்கள் தங்கள் காலத்தை அறிவு வளர்ச்சியில் செலவிட்டதேயாகும். அரசாங்கங்களால் புரட்சி ஏற்படும் தன்மையினின்று அவர்கள் விலகியவர்கள். இப்படிப் புரட்சி ஏற்பட்டு மனித சமூகத்திற்குத் தாழ்வை உண்டாக்கும் வகையினின்றும் வேறானவர்கள்.

இப்படி அறிவியல் வளர்ச்சியிலே சிறந்து விளங்குபவரான ஒருவரைப் பற்றிப் பேசுவோம். அவர் பெயர்தான் ஜெபுநிசா என்பது. ஜெபுநிசா என்றால் மாதர்களுக்கு அணிகலம் என்ற பெயர். பெயருக் கொப்பவே ஜெபுநிசாவும் அந்தக் காலத்திலிருந்த மாதர்களுக்கு அணிகலமாகவே விளங்கினள்.

ஜெபுநிசா டெக்கானைச் சேர்ந்த டௌலட்பாத் என்ற ஊரில் 1638-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 15-ந் தேதி பிறந்தார். இவரது தகப்பன்தான் பிரசித்திபெற்ற மொகலாய மன்னன் ஒளரங்கசீப். இவரது தாயார் ஷாநவாஸ்கானின் பர்சிய பணிவியான டில்ராஸ் பானுபேகம் என்பவர். இவரே இவர்களுக்கு மூத்த மகள். ஜெபுநிசா உயர்ந்த மேன்மையான குழந்தை. குழந்தைப் பருவத்திலேயே இவரிடம் அறிபுத்திசாலித்தனமான குறிகள் காணப்பட்டன. எட்டு வயதானதும் "கொரான்" முழுமையும் நன்கு படித்து மனனம் செய்துகொண்டு, அதன் பயனால் தனது தகப்பனிடமிருந்து 30 ஆயிரம் தங்க நாணயங்களைப் பெற்றார். அப்படிப் பெற்ற தங்க நாணயங்களை ஏழை எளியவர்களுக்குத் தானம் செய்தார். இதனால் சைனியம் முழுமைக்கும் டெல்லியிலுள்ள மைதானத்தில் விருந்தளிக்கப்பட்டது. பொதுக் காரியாலயங்களும் இரண்டு தினங்கள் மூடப்பட்டன. மியாபாய் என்ற அறிவு மிகுந்த



திரு. K. P. S. மேனன், I.C.S.
ஜான்ஸிபார் இந்தியர் துயரங்களை விசாரணை செய்வதற்காக இந்தியச் சர்க்காரால் அனுப்பப்பட்டிருக்கின்றார்.
—S.P.B.

மாது ஜெபுநிசாவிற்கு அரபி சொல்லிக் கொடுக்க நியமிக்கப்பட்டார். இவர் அரபி பாஷையை நான்கு வருடங்களுக்குள் கற்றுத் தேர்ந்தார். பிறகு கணித சாஸ்திரத்தையும், வான சாஸ்திரத்தையும் முறையே கற்று இவ்விரண்டிலும் அதிபாண்டித்தியம் பெற்றார். மற்றும் "கொரானுக்கு" உரை எழுதவும் தொடங்கினர். ஆனால் இதை ஜெபுநிஸாவின் தந்தை எழுதக் கூடாதென்று தடுத்துவிட்டார்.

பிரத்தியேக சுயேச்சை

தனது இளமையிலேயே முதன் முதலாக அரபியில் செய்யுள் செய்தார். அதை ஒரு அரபிய கலைஞன் பார்த்த பொழுது சொன்னதாவது:—"இதை யாரெழுதி யிருந்தாலும் அவர் ஒரு இந்தியரே யாவார். செய்யுள்கள் யாவும் திறமையாகவும் புத்திசாலித்தனமாகவுமே செய்யப்பட் டிருப்பினும், வார்த்தையின் அமைப்பு இந்தியராகத்தான் காட்டுகிறது. அந்நியர்கள் அவ்வளவு நன்றாக அரபி பாஷையை அறிந்துகொள்ள முடியாது" என்றார். இந்தச் சொற்கள் ஜெபுநிஸாவின் மனதிலே பதிந்து தூண்ட அவரது ஆசை மேம்பட்டுத் தனது தாய் மொழியான பார்சியில் செய்யுள் செய்யலானர். இப்படியாக ஜெபுநிசா உயர்வுக்குறிய சின்னங்களைக் காட்டலானர். எனவே அவரது பரிசுத்த பழைய தகப்பனும் ஜெபுநிசா ஆதரித்தவும், போற்றவும் செய்த கல்வியாளர்கள் யாவரும் அவரோடு சேர்ந்திருக்கும்படி செய்தார். அந்தப்புர மாதர்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகள் பலவற்றையும் ஜெபுநிசாவிற்கு அவர் தந்தை ஒளரங்கசேப் அளித்தார். கல்வியாளர்களோடு எழுதவும் அவர்களோடு தர்க்க மிடவு மானள். இந்தப் படித்த கூட்டத்தினரால் உண்டான ஹாஸ்யங்கள் முதலியனவும் பர்சிய நூல்களில் காணக் கிடக்கின்றன.

இப்படி ஜெபுநிசா அந்தக் காலத்திலிருந்து கல்வி அறிஞர்களோடு நெருங்கிய பழக்கம் வைத்துக் கொண்டதானது அவரை எதிர்ப்பதற்குள்ள ஒரு காரணமாயிற்று. இதனால் சென்ற நூற்றாண்டிலுள்ள உருது ஆசிரியர்களால் ஜெபுநிசா அவதூறுக் காளாக்கப் பட்டதோ டின்றி அவர்களது கதைகளிலும் காதல் கற்பனைகளைக் கட்டி விட்டார்கள். பழைய காலத்து ஜனங்கள் ஆண் பெண் பேசினாலே சந்தேகப்படும் பழக்கக்காரர்களாம், அந்தச் சந்தேகத்தையே உறுதிப் படுத்தும் தன்மையும் வாய்ந்தவர்கள். ஆனால் சரித்திரமானது இம்மாதிரி சந்தேகப்படுவது சரியல்ல வென்பதைக் காட்டா நிற்கிறது. சித்தூர் மகாராணி

யும் ராஜபுத்திர திலகமும் இந்துக்களின் மணி ரத்னமுமான ராணி மீராபாய், அந்தக் காலத்திலிருந்த வைதீகர்களால் தூற்றப்படவும் ராணி சிறைப்படவும், உயிர் போகவும் காரணமாக விருக்கவில்லையா ?

வெறுங் கட்டே

மனிதர்கள் காதலை விரும்புகிறார்கள். ஆனால் பெண்கள் ஆண்களின் இன்பத்திற்கும் மாறுதல்களும் சிருஷ்டிக்கப்பட்டிருப்பது என் என்பது கடினமாயிருக்கிறது. இதுபோலவே ஜெபுநிசாவும் உற்சாகத்திற்கும் சந்தோஷத்திற்குமுள்ள ஒரு பொருளாகக் கருதப்பட்டாள். அரசாங்க முக்கிய மந்திரியின் புதல்வன் ஜெபுநிசாவின் அறைக்கு ரகசியமாகப் பின் வழியாக வந்து அவருடன் காரியாடியதாகக் கூறப்பட்டது. இப்படிப்பட்ட அவமான காமானச் செய்தியை எழுத ஐரோப்பிய ஆசிரியர்களும் யாத்ரீகர்களுமான மானுக்கி, பெர்னர் இருவரும் பின்னடையவில்லை. கடைத் தெருவிலே கேட்ட சாக்கை அப்படியே உண்மைச் சரித்திரத்திலும் பொதிந்து விட்டார்கள். தேசத்திற்கே ஒரு பொக்கிஷமான ஜெபுநிசாவின் மேல் தூற்றப்படும் இந்த மாசு மண் காற்றெல்லாம் சரித்திரம் என்ற உண்மையைப் பார்க்கும் பொழுது பறந்து போகிறது. எப்படி ஒரு சிற்பியாயிருந்தாரோ, அப்படியே தனது ஒழுக்க நடக்கையிலும் ஜெபுநிசா விளங்கினார். பழைய கட்டுப்பாடுகளுக்கும் மூட பழக்க வழக்கங்களுக்கும் ஜெபுநிசா அடிமையாகவில்லை. ஆனால் சமூகத்திற்கு விரோதமாக அவர் நடந்து கொள்ளவில்லை. ஆகவே ஜெபுநிசாவைப் பற்றி அவதூறாக எழுதியதும் தூற்றியது மெல்லாம் வெறும் கட்டும்; சோம்பேறிக் கூட்டத்தாரால் அழகும்—நல்ல தோற்றமும்—வசீகரமும் வாய்ந்த ஓர் உன்னத ஸ்திரீயின் மீது—அவர் ஸ்திரீ என்ற ஹோதாவில் பிதற்றியதுமே யாகும்.

மதப் பித்தல்ல

ஜெபுநிசா பிறப்பிலேயே கவிதைகள் பாடும் தன்மையோடு பிறந்தவர். இது அவரது ஆசான்களாலும் அதிகமாகப் பிரக்யாதி பெறும்படியான உயரிய தன்மை அவரிடம் விளங்கிற்று. ஜெபுநிசாவின் (காவியங்களும்) செய்யுள்களெல்லாம் பொருள் நயமும் சொல் நயமும் கொண்டு சிறந்த கருத்துடன் எந்த உயரிய கவிகளின் பாட்டையும் ஒப்பவே யிருக்கின்றன. அவர் சாதாரணமாகப் பேசும்போழுதே செய்யுள் தன்மையாகவே இருக்கும். இதனால்தான் செய்யுள் செய்வது அவருக்கு மிக சுலபமாக முடிகிறது. அவரது உயரிய கற்பனா சக்தியும், சிறந்த வார்த்தை அமைப்பும் அவரது உயர்ந்த கல்வித் தன்மையைக் காட்டா நிற்கும். அவர் முஸ்லீம்களின் வேதத்தை அறிந்ததோடில்லாமல் ஹிந்து வேதத்தின் தன்மையும் போதுமானபடி கற்பிக்கப்பட்டிருந்தார். ஜெபுநிசாவுக்கு தாராஷிக்கோ என்பவரிடம் அதிகப் பிரீதியுண்டு. அவரது உயர்ந்த நோக்கமும், தூய்மையான மேன்மை பொருந்திய மனமும் ஜெபுனிசாவின் மனதைக் கவர்ந்தது. அவர் தனது தந்தையைப்போல் மதப் பித்துப் பிடித்தவராயில்லாதிருந்தாரென்பதைக் கீழ்க்கண்ட அவரது பாட்டின் கருத்தே விளக்கும்.

“நான் முஸ்லிமல்ல; ஆனால் நான் விக்கிரக ஆராதனை செய்பவள். எனது அன்பான விக்கிரகத்தின் முன்னர் நான் நமஸ்கரிக்கிறேன். அந்த அன்பு உருவத்தை அர்ச்சிக்கிறேன். மசூதியிலே ஸ்ரீ உருவத்தைத் தேடுகிறேன்” என்றும் கூறுகிறார்.

சோக ரசம்

ஜெபுநிசாவின் பாடல்களிலே சோக ரசப்போக்கே யிருக்கும். இவைகளை அவர் தனது சோககாலத்தில் பாடினார் போலும். “நமது சந்தோஷமான பாடல்களெல்லாம் துக்க நினைப்பை உரைப்பவைகளே” என்று ஷெல்லி கூறுவது போல் அவரது பாட்டுகளுமிருந்தன. அவைகளெல்லாம் சிறந்த உயரிய அழகான எண்ணங்களுக்காக மாத்திரமிலக்காயிருந்ததோடின்றி கருணை வடிவகாகவும் காணப்பட்டன.

ஜெபுநிசா துக்ககரமான உடைந்த மனதையே கொண்டவர் ; இருப்பினும் எந்தவிதமான துக்க சமுத்திரத்தில் மூழ்கியிருந்தாலும் வேறு எவரிடமும் சொல்லாது தனது குறையை மனதிலேயே வைத்துக் கடவுளிடம் மாத்திரமே வேண்டி நிற்பார்.

ஹிந்து சாஸ்திரம், ஜோராஸ்டிரியானிசம், இஸ்லாம் முதலியவைகளை அறிந்திருந்தும் வாய் திறந்து இம்மதமே சிறந்ததென்று சொல்லவில்லை. ஆனால் பழைமையாயிருந்து வீண் அவதூறு பேசுவதை அவர் கண்டிக்கிறார். மதம் என்று சொல்வதைவிட அதன்படி ஒழுகுவதே நல்லதென்று நடந்தவர்.

சிறந்த புத்தகசாலை

இவர் மிகவும் அரிதான ஒரு புத்தகசாலை வைத்திருந்தார். அந்தப் புத்தகசாலையில் மிகவும் அரிதான சுவடிகளும் பலநாடுகளிலிருந்து வந்த உயரிய நூல்களுமிருந்தன. பல அறிவாளிகளைப் பல தேசங்களுக்கும் சென்று உயரிய புஸ்தகங்களைக் கொண்டுவரவோ அல்லது காபி எடுத்துக்கொண்டு வரும்படியோ அனுப்பியிருந்தார். லாகூரில் ஒரு சோலை கண்டார் ; பிறகு அதைத் தனக்குப் பாடம் கற்பித்த மியாபாய் என்பாருக்குக் கொடுத்துவிட்டார்.

முடிவுரை

வைதீகமும் தொந்தரவும் நிரம்பியிருந்த காலத்தில் சுயேச்சையாயிருந்து அவைகளை ஒழித்துத் தலை நிமிர்ந்து நின்றவர் ஜெபுநிசாவே. அரண்மனை வித்வான்களான பலால் போற்றப்பட்டவர். அந்தக் காலத்திலிருந்தவர்களுக்கு ஜோதி போன்று விளங்கியவர். தாராளமும், பெருந்தன்மையும் வாய்ந்தவர். எவ்வளவு முயன்றும் அன்பின் கோயிலை அடைய முடியாத யாத்ரீகர்களுக்கு ஒரு வழி காட்டியானவர்.

ஜெபுநிஸாவின் வாழ்க்கை முழுதும் சமாதானமும், கஷ்டமும், சிறை வாழ்க்கையுமானதாகும். அவரிடம் மஹான்களுக்குரிய உன்னதத் தன்மைகள் விளங்கின. “அவர்கள் எப்படி எழுதினார்களோ, அப்படியே வீட்டிலும்; அதேபோலவே வாழ்க்கையிலும்; மற்ற வகைகளிலும்” என்று எமர்சன் கூறியதுபோல் ஜெபுநிசா விளங்கினார். அவர் ராஜீகத்தில் ஈடுபட்டதே யில்லை. ஒரே ஒரு சமயந்தான் ஈடுபட்டாள். அது சமயம் ஔரங்கசேப் தன் மகளாயிற்றே என்றும் எண்ணாது இவளையும் சிறையிலிட்டார்.

கடைசியாக ஜெபுநிசா 1702-ம் வருஷம் மேமீ 20உ இவ்வுலக வாழ்க்கையை நீத்து ஆண்டவனின் பேருளை நாடிச் சென்றனர். தந்தையான ஔரங்கசேப் தன் மகளுக்கு மிகவருந்தி டெல்லியின் பக்கத்தில் காபூலிகேட் என்ற இடத்திலுள்ள 30 ஆயிரம் மரங்களுள்ள தோட்டமொன்றிலே சமாதி செய்தார்.

ஹரிஜனச் சுற்றுப் பிரயாணம்

மகாத்மா தெரிந்துகொண்டது என்ன?

காந்திஜி தன் ஹரிஜன சுற்றுப் பிரயாணத்தைப்பற்றி ஹிந்துஸ்தான் டைம்ஸ் நிருபரிடம் கூறியதாவது:—

நான் அவ்வப்போது போட்டுக் கொண்ட திட்டப்படியும், யாதொரு தடைகளுமில்லாமலும் எனது ஹரிஜன சுற்றுப் பிரயாணம் முடிவுற்றது மிகுந்த சந்தோஷமளிப்பதாகும். என் பிரயாணத்தால் தீண்டாமை கடைசி அடி எடுத்துவைக்கத் தொடங்கி விட்டதென்று கண்டு கொண்டேன். நான் போன விடங்களிலெல்லாம் லக்ஷக் கணக்கில் ஜனங்கள் வந்து கூடினார்கள். அவர்கட்கு நான் கூறியது என்னவென்பது தெரியும். அவர்கள் உபேக்ஷையாயிருக்கவில்லை. சனாதனிகள் எங்கும் மிகக் கடுமையாகப் பிரசாரம் செய்து பார்த்தார்கள். என்றாலும் பொதுஜன இயக்கமாகிய நம்மியக்கத்தின்மீது எதுவும் செய்துவிட முடியவில்லை. சனாதனிகள் பிரசாரத்தால் பெரிய பொய் எது என்பதே வெளியாயிற்று. ஆதலால் என் கூட்டங்கட்கு வந்த பெரும் ஜனக்கும்பல் எனக்காக வந்தது என்றும் எனது உபதேசத்திற்காக வரவில்லை என்றும் கூறுவது தவறானதாகும். நான் கூறியவற்றைப் பொது ஜனங்கள் நன்கு ஏற்றிருக்கின்றார்களென்று மதிக்கிறேன். ஆனால் பிரசங்கத்தைக் கேட்டவர்களெல்லாம் தாம் கற்றுக் கொண்டதை நடைமுறையில் காண்பிக்கத் தயாராயில்லை என்பதையும் அறிவேன். ஆனால் பொதுவாக ஜனங்கள் என் அதின் உட்கருத்தை உணர்ந்து கொண்டது ஒருபெரும் வெற்றியாகும். இதனால், இனிமேல் வேலை செய்பவர்களுடைய வேலை இலேசாக முடியலாம். பொது ஜனங்கள் எவ்வளவு மனப்பூர்வமாக இவ்வியக்கத்தை ஏற்றிருக்கின்றார்களென்பதற்குக் கடந்த 9 மாதங்களிலும் வசூலான 8 லட்சமும் ஏழைகளின் பணம் என்று தெரிந்து கொண்டால் போதும். பல நாட்கள் வசூலான செம்புதுட்டுகளையும் தம்பிடிகளையும் எண்ணுவதில் நமது ஜனங்கள் பல மணி நேரங்களைப் போக்கவேண்டி வந்தது. இந்தக் கஷ்டம் பொதுக்கூட்டங்களில் வசூல் செய்தாலும் ரயில்வேஸ்டேஷன்களில் வசூலித்தாலும் ஏற்பட்டே வந்தது. எந்த மக்களும் தங்கட்கு அறவே தெரியாத ஒரு விஷயத்திற்குப் பணம் கொடுப்பதில்லை. எனது இயக்கத்தைப் பற்றிக்கூற விரும்புகிற மூன்றாவதொரு விஷயம் ஹரிஜனர்கட்கிடையே ஒருமிகப் பெரிய விழிப்பு ஏற்பட்டது என்பதாம். அவர்களில் பலர் நான் கேளாமலே தற்போது நிலைமை மிகவும் சீர்திருந்தி விட்டது என்றும், தாங்கள் அதிசீக்கிரத்தில் தீண்டாமை ஒரு பழங் கதையாய்ப்போய் விடுமென்று நம்புவதாகவும் கூறினார்கள். அவர்களுடைய நம்பிக்கையோடு நானும் பங்கு கொள்கிறேன். இப்போதிருப்பது போலவே வேலை நடந்து கொண்டே இருந்தால்—இருக்குமென்று நம்புகிறேன். ஆதிதிராவிடர்கள் அதிகமாக ஊக்கம்கொண்டு இறுதியாகத் தங்களைத் தாங்களே காத்துக் கொள்வதெப்படி யென்பதை நன்றாக உணர்ந்து கொண்டு, அதனைச் சவர்ண இந்துக்கள் விரும்பினாலும் இல்லையானாலும் நன்கு பாடுபடுவர். சவர்ண இந்துக்கள், உண்மையாகவும், தாங்கள் செய்யும் கொடுமையின் இயல்பினை அறிந்து தங்களைத் திருத்திக்கொண்டு சமாளிக்க முடியாத சந்தர்ப்பங்களில் மாட்டிக் கொள்வதை விடத் தாங்களாகவே வலிந்து தீண்டாமையை விட்டு விடுவதுதான் ஏற்ற முறை. என்னென்ன நிகழ்ந்தாலும் தீண்டாமை இன்னும் பல வருடங்கள் இருந்துவிடப் போவதில்லை.

ஆலய நுழைவையும் ஆலயநுழைவு மசோதாவையும் பற்றி வினவிய போது காந்திஜி கூறியதாவது:—

இந்த விஷயங்களைப்பற்றிக் குறும் புத்தனமான கிளர்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே என் பிரயாண ஆரம்பத்தில் என் நிலைமையை விளக்கியிருக்கிறேன். ஒரு இடத்திலாவது வழக்கமாகக் கோவிலுக்குச் சென்று வணங்குபவர்கள் எல்லோரும் சம்மதிக்காத பக்ஷத்தில் ஆலயம் திறந்து விடப்படவில்லை. ஒரு இடத்திலாவது எல்லோரும் ஆலயம் திறக்கும் போது திறக்க வேண்டாமென்று கூறவுமில்லை.

ஆலய நுழைவு மசோதாவைப் பொறுத்த வரையில் அது ஓர் சட்ட சம்பந்தமான தேவை. நான் எத்தனையோ தரம் குறிப்பிட்டது போல, ஒரு கலந்த மெஜாரிட்டியால் சட்ட சபையில் அந்த மசோதா நிறை வேறுவதை விரும்ப மாட்டேன். அதுபற்றியே ஸ்ரீஜத்—ஸி ராஜகோபாலாசாரியார், சட்ட சபையிலுள்ள இந்து அபிப்பிராயம் எதிராகவிருக்கு மென்று தோற்றினால் மசோதாவை வாபீஸ் வாங்கிக் கொள்ளலாமென்று கூறினார். இப்படிப் பட்ட நிலைமைகளிலெல்லாம் நான் ஏதாவது நம்பிக்கைத் துரோகம் செய்தால்தான் மாறும், எல்லா இந்துக்களும் ஒருங்கு சேர்ந்து ஹரிஜன சேவக சங்கவேலையைச் செய்தால் எவ்வளவு சுலபமாக வேலை நடைபெறும்.

கடைசியாக இந்த ஒன்பது மாதமாகவும் ஆலயப் பிரவேச மசோதாவுக்காகவும் ஹரிஜனர்களின் ஆலயங்கள் கட்டுவதற்காகவும் ஹரிஜன நிதியிலிருந்து ஒரு காசுகூடச் செலவிடப்படவில்லையென்று உறுதி கூறுகிறேன்.

இங்கிலாந்தில் பால் சாப்பிடுவதால் பசுவின் நோய் மனிதனுக்குப் பரவி விடாமலிருப்பதற்காக அநேக விதமான தடைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றிலொன்று நோயுற்ற பசுவைக் கொல்வதாகும். ஒரு பசு நோயுடையதென்று சந்தேகம் கொண்டால் அதனைக் கொன்று பரிசோதிப்பார்கள். அது நோயற்றதென்று டாக்டர்கள் கூறினால் அதன் விலையும், அதிகப்படியாக ஒரு பவுனும் கொடுக்கப்படும். சிறிய நோயினால் பசு பீடிக்கப்பட்டிருப்பதாய்த் தெரிந்தால் அதன் விலையில் மூன்றில் இரண்டு பங்கு கொடுக்கப்படும். இவ்வாறு பரிசோதிப்பதற்காகத் தனிக் கட்டிடங்களை அமைத்துள்ளார்கள்.

சுயராஜ்யம்

பிறப்புரிமை!

பண்டை பொருளாதார சாஸ்திரத்தின் நிலை

மேல் நாடும் கீழ் நாடும்

(K. V. S. V.)

கலை, சிற்பம், பாஷை, சாஸ்திரம், கானம், ஆயுதம் முதலியவைகள் மனிதனால் அவனவன் சௌகர்யத்திற்கும், விருப்பத்திற்கும், திறமைக்கும், ஏற்றவாறு அவ்வப்பொழுது கற்பிக்கப்படுபவைகளே யன்றி உலகில் முதன்முதலாக மனிதன் தோன்றியபொழுதே இவைகளும்கூடத் தோன்றிவிடவில்லை. இதை நிரூபிக்கப் பல அத்தாட்சிகளிருக்கின்றன. பண்டை மனிதன் நாகரீக மற்றவன்; நாணய மற்றவன்; ஆசையற்றவன்; பாசமற்றவன்; தன் வயிற்றை நிரப்ப வேண்டியதற்கு இன்றியமையாத பொருள்களைச் சேகரம் செய்யும் விஷயங்களைத் தவிர மற்றெவ்வகையான அலுவல்களிலும் அவன் நோக்கம் செல்லாதவன். ஆனால் பேசுவதற்கும் எழுதுவதற்கும் எப்படிக் கற்றான் எனக் கேட்பீர்கள். வானத்திற் பறக்கும் பறவைகளின் இனிமையான குரலைத் தானும் கற்றுச் சிறிது சிறிதாகப் பல பாஷைகளை உண்டாக்கினான். அதன் பலன்தான், இப்பொழுது படிப்போர் பிரமிக்கும் வண்ணம் பல்லாயிரக் கணக்கான நூல்கள் உலகில் காணப்படுகின்றன. ஏன், இன்னும் ஒவ்வோர் நிமிடமும் நூல்கள் பல வெளியாகிக் கொண்டே யிருப்பதைக் காண்கின்றோம். தன்னைக் காத்துக் கொள்வதற்கும், வேட்டையாடுவதற்கும், உபயோகப்பட்டு வந்த கல், முள், கழி, வில், அம்பு, ஈட்டி, முதலியவைகளே சிறிது சிறிதாக முன்னேற்ற மடைந்து இப்பொழுது எங்கும், பீரங்கி மயமாயும், விஷக் காற்று மயமாகவுமிருக்கிறது. உடையிலும், உண்ணும் உணவிலும், வசிக்கும் விடுதிகளின் அமைப்பிலும், சமூக வாழ்க்கையிலும் முன்னையைவிட இன்று எவ்வளவு மாறுதல்கள் காணப்படுகின்றன? மலையடிவாரங்களிலும், காரிருள் சூழ்ந்த கானங்களினிடையிலும், இன்றும் வசித்து வரும் பண்டை அநாகரீக மனிதனைச் சற்றுக் கவனித்துப் பார்ப்பின் பண்டையனைவிட நாம் எவ்வளவு மாறுதல்களை இப்பொழுது அடைந்திருக்கிறோமென்பது நன்கு விளங்கும்.

மேற் குறிப்பிட்ட விஷயங்களினின்று சமூக வாழ்க்கையில் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு விஷயமும் மேலும் மேலும் சிறிது சிறிதாக வளர்ந்து கொண்டே போவதை முன்னிட்டு அவைகளை யெடுத்துரைக்கும் சாஸ்திரங்களும் காலம் செல்லச் செல்லப் பெருகிக்கொண்டே செல்வது ஓர் வியப்பில்லையன்றோ? சமூக வாழ்க்கையில் செல்வம் சகலவித முன்னேற்றத்திற்கும் அடிப்படையானதென்பது எல்லோருக்கும் நன்கு தெரிந்த விஷயமேயாகும். ஞானச் செல்வத்தைப் பெறுவதற்கும் பொருட் செல்வம் சிறிது அவசியமானதென எவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். செல்வத்தையும், அதன் சம்பந்தமான மனிதனது செய்கையையும் எடுத்துரைக்கும் நூலே பொருளாதார சாஸ்திர மெனப்படும். மானிட வாழ்க்கைக்குச் செல்வம் பிரதானமானதாயின் பல துறைகளிலும் முன்னேற்ற மடைந்துள்ள இச்சமூக வாழ்க்கையுடன் பொருளாதார நூலும் எவ்வளவு மாறுதல்களை யடைந்து தற்கால நிலைக்கு வந்திருக்க வேண்டுமென்பதை இங்கு கவனிப்போம்.

உரோமானியர்கள் (Romans)

பண்டை உரோமானியர்களின் காலத்தில் பொருளாதாரம் என்ற தனிப்பட்ட நூல் இருந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் அவர்கள் தங்கள் வாழ்நாட்களைப் போரிலும், பகைவர்கள் தங்கள் நாட்டில் புகாவண்ணம் தடுக்கப் போதுமான இராணுவங்களைப் பயிற்சி செய்வதிலும், ராஜீய சீர்திருத்த விஷயங்களிலுமே பெரும்பாலும் கழித்து வந்தார்களேயன்றி செல்வம் சேகர சம்பந்தமான முயற்சிகளதிக மெடுத்துக்கொண்டவர்களில்லை. மேலும், ரோமானியர்களின் காலத்தில் பலமுள்ளவனே சர்வாதிகாரித்வத்தையடைய முன் வருவது வழக்கமாதலின் உள்நாட்டுச் சண்டைகளும் அடிக்கடி நிகழ்வதுண்டு. ஆதலின் இவைகளைக் கவனிக்க அவர்களுக்குப் பொழுதிருந்ததே யன்றி பொருட் சேகரத்தை அவர்கள் ஒரு பொருட்டாக மதித்தவர்களல்ல. எவன் ராஜீய முன்னேற்றத்திற்குப் பாடுபடுகின்றானோ அவனே கொண்டாடப்பட்டு வந்தான். அரசாங்கமே, சுருக்கிக் கூறுங்கால், அவர்கள் தெய்வம். தேசத்தியாகியும், தேசபக்தனுமே சிறந்த தெய்வ பக்தன். அவனே பிறர் புகழ்ச்சிக்கும் பூஜைக்கும் உரியவன். ஆனால் உரோமானியர்களுக்குப் பொருளாதார சாஸ்திரமென்றால் என்னவென்று தெரியாதெனச் கூறிவிடமுடியாது. அவர்களுடைய ராஜீய நூல்களில் ஆங்காங்கு பொருளாதாரத் தத்துவங்களும் விளக்கப்பட்டிருக்கின்றன. அரசியல் நிர்வாகத்திற்குப் பொருளாதாரம் இன்றியமையாததாதலின் ராஜீய நூல்களில் ஆங்காங்கு காணும் பொருளாதார தத்துவத்தினின்று பண்டைய உரோமானியர்களின் காலத்திலிருந்த பொருளாதார சாஸ்திரத்தின் நிலையை ஒருவாறு அறிந்து கொள்ளலாம்.


உரோமுலஸ்—ஸிஸரோ (Romulus cicero)

உரோம ராஜ்ய' ஸ்தாபகனான உரோமுலஸ் என்பவன் கடன் வாங்கிவிட்டுத் திருப்பிக் கொடுக்கச் சக்தியற்றவர்களுக்கு அபயமளித்துப் பாதுகாத்து வந்தான் எனத் தெரிகிறது. கடன்வாங்கியவர்கள் அதைத் திருப்பிக் கொடுக்கத் தங்களுக்குச் சக்தி யில்லையென்று கூறிவிடில் அவர்களைத் தொந்திரவு செய்யக் கூடாது என்பதே உரோமுலஸ் மன்னனது கருத்து. ஸிஸரோ என்னும் உரோம நாவலரோ வெனில் கடன் கொடுத்தவர்கள் முதலுக்கு "வட்டி" வாங்குவதை வெகுவாகக் கண்டனம் செய்கிறார். ஆனால் வட்டி கேட்பது நியாயமானதல்ல வென்பதற்குத் தக்க காரணங்களைக் கொண்டு நிரூபியாது, "ஜனங்கள் கடன் வாங்கிய பணத்திற்கு வட்டி கொடுக்க அனேகமாய் விரும்புவதில்லை. ஆதலின் வட்டிகேட்பது பிசகு!"

என்று மட்டும் கூறும் காரணம் பொருந்தாததே யாகும். உரோமானிய சட்டவாதிகள் சட்ட நூல்களில் மனிதனின் உரிமைகளைப் பற்றியும், அரசியல் நிர்வாகங்களைப் பற்றியும் எடுத்துரைக்கையில் அநேகமாய் எல்லோரும் தனி உடைமையை (Private Property) அநுமதித்தே வந்திருக்கின்றனர் எனத் தெரிகிறது. பொது உடைமை (Socialism or Communal Property) அவர்களிலொருவராலும் போற்றப்படவில்லை யென்று நாம் நிச்சயமாய்க் கூறலாம்.

கிரேக்கர்கள், ப்ளேடோ, அரிஸ்டாடில்

உரோமானியர்களைப் போன்றே கிரேக்கர்களும் தங்கள் மூளையைப் பொருளாதாரத்தில் அதிகம் செலவிடவில்லையாதலின், அவர்களின் நூல்களில் ஆங்காங்கு காணும் சில விஷயங்களைக் கொண்டே நாம் அக்காலத்தியப் பொருளாதார சாஸ்திர நிலைமை அறிந்து கொள்ள வேண்டியவர்களாக விருக்கின்றோம். பிளாட்டோ (Plato) என்னும் கிரேக்க ஞானியார் "நாம் ராஜ்யம்" என்னும் தன் நூலில் அரசாங்கங்களின் ஆதி சரித்திரங்களைப் பற்றியும், அரசிய நிர்வாகத்தில் கவனிக்க வேண்டிய முக்கிய அங்கங்களைப் பற்றியும் கூறி வருகையில், பொருளாதார சம்பந்தமாகப் பல விஷயங்களை எழுதுகின்றார். "அரசாங்கம் என்பது மானிடர்களின்" நன்மைக்குத் தோன்றிய ஓர் திருச் சபையாகும். ஒவ்வோர் மனிதனுக்கும் பல்வேறு விதமான ஆசைக ளிருக்கின்றன. அவைகளைத் திருப்தி செய்துகொள்ளப் பலவிதப் பொருள்கள் தேவையா யிருக்கின்றன. ஆனால் தனக்கு அவசியமான எல்லாவிதப் பொருள்களையும் ஒருவன் தானாகவே உற்பத்திசெய்து கொள்ளச் சக்தியற்றவனாக விருப்பதை முன்னிட்டுப் பிறர் உதவியை அவன் நாடவேண்டிய அவசிய மேற்படுகின்றது. இங்ஙனம் ஒவ்வொருவனும் சிற்சில விஷயங்களுக்குப் பிறனுடைய உதவியை நாடவேண்டி வாவும் அதன் பயனாகவே ஒன்றுபட்ட சமூக வாழ்க்கைத் தலைப்படுகின்றது. சமூக வாழ்க்கை யென்று எப்பொழுது ஒன்றுண்டாகி விட்டதோ அங்கு அவாவர்களின் உரிமைகளைச் சீர்படுத்திக் காப்பாற்ற அரசாங்கமும் தானாகவே தோன்றுகிறது." இதைச் சிறிது கவனித்துப் பார்க்கின் பதினெண்பதாம் நூற்றாண்டில் ஆதாம் சமித் (Adam Smith) என்னும் பிரபல பொருளாதார சாஸ்திர ஞானியார் தொழில் அபிவிருத்திக்கு அவசியமான தெனக் கூறிவந்த தொழிற் பிரிவினையே (Division of Labour) ப்ளேடோவினாலும் முக்கியமான தெனக் கருதப்பட்டு வந்திருக்கின்ற தென்பது நன்கு விளங்கும். ஒருவன் தன் விருப்பத்தைத் திருப்தி செய்துகொள்ள அவசியமான சகல பொருள்களையும் சுயமாகவே உற்பத்தி செய்து கொள்ளச் சக்தி யற்றவனாக விருப்பதால் பிறனுடைய உதவியை



ஜூலை 22-ந் தேதி முதல் ஆகஸ்டு 23-ந் தேதி வரையிலும் நடைபெறும் பெய்ரீத் உற்சவ மண்டபத்தின் படம். ஜர்மனியில் பலவிதமான தேசிய விழாக்கள் இங்கு நடத்தப்படுகின்றன.

நாடுகின்றான் என்று கூறும்பொழுது பண்டை கிரேக்கர்களுக்குத் "தொழிற் பிரிவினை" தெரியாதது மல்ல. அல்லது தொழில் அபிவிருத்திக்கு அது அவசியமானதென்று அவர்களால் உணரப்படாதது மல்லவென்பது விளங்கவில்லையா? இவ்விஷயம் ஒவ்வொருவனாலும் நன்கறியப்பட்டதென் றெண்ணியே கிரேக்கர்கள் இதைப்பற்றி அதிகம் விஸ்தரித்து வரையாதுவிட்டனரே யன்றி தெரியாம லல்ல. பிற்காலத்தில், பதினெண்பதாம் நூற்றாண்டில், தொழிற் பிரிவினையின் உண்மைப் பலன் தெளிவாக விளங்காது. தொழில் மந்தம் ஏற்படவே ஆதாம் ஸ்மித் மறுபடி இதை எடுத்துரைக்க வேண்டிய அவசிய மேற்பட்டது.

ப்ளேடோ சமதர்மவாதியெனச் சிலர் எண்ணுகின்றனர். ஆனால் உண்மையில் அவர் ஓர் பொதுவுடைமைக் காரரே யாயினும் (Communist) இப்பதத்தின் தற்கால அர்த்தம் அவர் காலத்திலிருந்ததற்கு நேர்விரோதமாக விருப்பதால் ப்ளேடோவைச் சமதர்மவாதி யெனக் கொள்தல் தவறாகும். அவருடைய சமதர்மமும், பொதுவுடைமையும் அரசியல் நிர்வாகிகளுக்கு மட்டுமே யன்றி பொது ஜனங்களுக்கல்ல வென்பதைத்தெளிவாக நாம் அறிதல் வேண்டும். அரசாங்க நிர்வாகத்தி லீடுபட்டுள்ளவர்கள் பொருள் சேகரம் செய்ததிலும், கௌரவப் பட்டங்களை அடைவதிலும் ஆசைப்பட்டுத் தங்கள் பொழுதைப் போக்குவார்களே யாயின் அவர்களுக்குள் ஓர் பகையும், போட்டியும் தலைப்பட்டு அரசாங்க நிர்வாகம் சரிவரக் கவனிக்கப்படாது போய்விடுமோ வென அஞ்சியே ப்ளேடோ இவர்கள் சுய உரிமை கொண்டாடக் கூடாதென்

றும், அவர்களுள் பொது உடமையே பிரதானமாக இருக்கவேண்டுமென்றும் அபிப்பிராயப் பட்டார். இது அரசியல் நிர்வாகிகளான Philosopher Kings என்பவர்களுக்கு மட்டுமேயன்றி மற்றவர்களுக்கில்லை. ஆகவே ப்ளேடோ பொது உடமைக்காரரென்றும், பொது உடமையை ஸ்தாபித்த புனித புருஷரென்றும் சிலர் கருதுவது சுத்தத் தவறே. ஒவ்வோர் ஆடவனுக்கும் செல்வத்தை உரிமையாக்கிக் கொள்ளும் விஷயத்திலோ அல்லது அரசியல் நிர்வாகத்தில் பூர்ண ஞானத்தைப் பெறுவதற்கோ சகல உரிமைகளு முண்டென்று ப்ளேடோ பல விடங்களில் கூறியிருக்கிறார்.

கடன் கொடுத்த பணத்திற்கு வட்டி கேட்பது நியாயமல்லவென்பதே இவரது கொள்கையு மாகும். இவர் கூறும் காரணம் ஸிஸரோ கூறுவதைப்போன்று அவ்வளவு குறுகியதல்ல. பண்டை காலத்தில் கடன் வாங்குவதன் முக்கியக் காரணம் உடனே அழிக்கும் உபயோகத்திற்கேயன்றி (Consumption uses) உற்பத்தி உபயோகத்திற்கல்ல. (Productive uses) தற்காலம் பெரும்பாலும் உற்பத்தி உபயோகத்திற்கே கடன் வாங்கப்படுகின்ற தாகையால் அதினின்று கிடைக்கும் இலாபத்தில் ஒரு சிறு பாகத்தை முதல் (Capital) கொடுத்து உதவியவர்களுக்கு வட்டியாக வளிப்பது அவசியமானது. பண்டை காலத்திலோ பணம் உடனேஅழிக்கப்படும் உபயோகத்திற்கே கடன் வாங்கப்படுவதால் அதினின்று எவ்வித லாபமு மில்லாதிருப்பது மன்றி உடனே அழிந்து போவதால் (Fungible) முதலைத் திருப்பி யளிப்பதே சிரமமாகவிருக்க அதற்கு வட்டியும் கேட்பது நியாயமல்ல. கடன் வாங்கியவன் அப்பணத்தினால் எவ்வித இலாபத்தையும் அடையவில்லை. ஆகையால் வாங்கிய பணத்திற்குமேல் அதிகமாகக் கொடுக்க வேண்டிய தவசியமு மில்லை. இதுவே ப்ளேடோ "வட்டி"யைப் பற்றி கொண்டுள்ள கொள்கையாகும்.

அரிஸ்டாடில் (Aristotle)

அரிஸ்டாடிலும் ப்ளேடோவைப் போன்று, தொழிற் பிரிவினை, சமூக வாழ்க்கைக்கு இன்றியமையாத தெனப் பல விடங்களிற் கூறியுள்ளார். ஆனால் ப்ளேடோவின் சமதர்மக் கொள்கைகளை மட்டில் தீவிரமாகத் தாக்குகின்றார். சமதர்மக் கொள்கைகளின் சங்கடங்களைப் பற்றி அரிஸ்டாடில் கொண்டுள்ள அபிப்பிராயங்கள் பின் வருமாறு :—

(1) முதலாவதாக இக் கொள்கைகள் பழக்க வழக்கங்களுக்கு முரணாக விருப்பதால் அப்பியாசத்திற்குக் கொண்டு வருவதரிதாகும். மனிதன் தன் சரீர பிரயாசையினாலுண்டான பலனை (சேகரித்த பொருளை) பிரத்யேகமாக அனுபவிக்க உரிமையில்லையென்றும், எவ்வளவு முயற்சியை யெடுத்துக் கொண்டு பொருளைத் தேடினும் அதைப் பிறருடன் பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்றும் கூறின், எவனும் தன் வயிற்றை வளர்க்கப் போதுமான செல்வத்திற்கு மேல் சேகரிக்கப் பிரயத்னம் செய்ய முன் வரான் என்பதை மனித சுபாவமே தெளிவுறக் காட்டுகின்றது. பொது உடமை பரவுவதால் மனிதனின் முயற்சியும், ஊக்கமும் குன்றி, தேசத்தின் செல்வ வளர்ச்சியும், அதன் மூலம் சமூக முன்னேற்றமும் தடைபடுகின்றது.

(2) இரண்டாவதாக சமதர்மக்கொள்கைகள் மனித சுபாவத்திற்கே எதிரிடையானது. பிரதானமாக மனிதன் ஓர் சுய நலப்பிராணி. சுய நலத்திற்குப் பின்பே பிறர் நலம். சுய நலமின்றேல் பிறர் நலத்தை எக்காலத்திலும் அவன் கோறப் போவதில்லை. ஆதலின் முடிவாக சமூக க்ஷீணமே சமதர்மக் கொள்களின் மூலமடையும் பலனாகும்.

(3) முக்கியமாக செல்வத்தை உரிமையாக்கிக் கொள்வதில் எவ்வித தவறுமில்லை. உரிமையாக்கிக் கொள்ளும் வழிகளில் தான் நியாயமும் அநியாயமுமிருக்கிறது. நியாயமான மார்க்கத்தில் பொருளை உரிமையாக்கிக் கொள்வதைச் சிறப்பித்து அநியாயமான மார்க்கங்களில் சேகரம் செய்வதைத் தடுப்பதிலேயே நம் சீர்திருத் தங்களைச் செலுத்த வேண்டுமேயன்றி சேகரித்த பொருளைச் சமமாகப் பங்கிட்டுக்கொள்ளும்படி கட்டாயப் படுத்துவது தவறாகும்.

அரிஸ்டாட்டில் இவ்வாறு பொதுவுடமையைக் கண்டித்துத் தனியுடமையைப் போற்றுகின்றார். ஆனால் ப்ளேடோவைப் போன்று கொடுத்த பணத்திற்கு வட்டிகேட்பதை இருவரும் பலமாகத்தான் கண்டிக்கின்றார்கள். அவர் கூறும் காரணமும் ப்ளேடோ கூறுவதைப் போன்றதே யாதலின் இங்கு அதிகம் விஸ்தரிக்க வேண்டுவ தவசியமில்லை. அரிஸ்டாடிலும் அநேகமாய்ப் பண்டைச் சமூகச் சீர்திருத்தக்காரர்களிற் பெரும் பாலோரும் "அடிமைத் தனத்தை (Slavery) சமூக வாழ்க்கைக்கு அவசியமானதென்றே வாதித்து வந்திருக்கின்றனர். உலகில் சிலர் அடக்கியாண்டு அதிகாரம் செலுத்துவதற்கும் சிலர் அடிமைகளாகப் பிறருக்குச் சேவகம் செய்வதற்குமே பிறந்திருக்கின்றனராதலின் அடிமைகள் அதிகாரம் செய்யப் பிறந்திருப்பவர்களுடன் சம உரிமைபாராட்டுவது ஒழுங்கீனமாகும். சமூகத்தில் எப்படி ஆண், பெண், கணவன், மனைவி,பிள்ளை, பெண்கள், சமயல்காரன், சேவகன் என்ற பல பிரிவினைகள் இருக்கின்றதோ, எப்படி ஒவ்வோர் வகுப்பினரும் ஒன்றுபட்ட சமூக வாழ்க்கைக்கு இன்றியமை யாதவர்களோ, அப்படியே அடிமைகளும் என்றே இவர்கள் யாவரும் அபிப்பிராயப்படுகின்றனர்.

ஸெனபன் (Xenophen)

கிரேக்க ஞானிகளுள் விவசாய சம்பந்தமாக நமக்கு அதிக விஷயங்களைத் தெரிவிப்பவர் ஸெனபன் என்பவரேயாகும். ப்ளேடோ அரிஸ்டாடில் இவர்களைப் போன்று தொழிற் பிரிவினைகளை இருவரும் விவசாயத்தைப்பற்றிய மட்டில் விபரமாகக் கூறியிருப்பதுடன்,இன்னும் இவரது கொள்கைகள் ஆதாம் ஸ்மித்தின் தொழிற் பிரிவினைக்கொள்கைகளுடன் ஒத்துப்பார்க்கப்படுகின்றது. (Compared).

சுருக்கமாக மேற் கூறியவைகளே மேல் நாட்டில் பொருளாதார சாஸ்திரம் பண்டை காலத்திலிருந்த நிலைமையாகும். இனி பண்டை இந்தியப் பொருளாதார நிலையைச் சற்றுக் கவனிப்போம்.

பாஸ்டன் நகரிலுள்ள மிஸ். டையமண்டு கிட்டி என்ற பெண் 714 ராத்தல் எடை யிருக்கின்றாள். தினசரி கடல் ஸ்நானம் செய்வதில் இவளுக்கு விருப்பமதிகம்.

சினிமாப் பகுதி

ஒரு வருடத்தில் 350 படங்கள்

ஹாலிவுட்டில் முக்கியமாக எழு சினிமா கம்பெனிகள் இருக்கின்றன. அவைகளெல்லாம் ஒத்துப்பேசி செப்டம்பர் மாதத்தோடு ஆரம்பமாகிற காட்சி வருஷத்தில் 350 படங்களைத் தயாரித்துக் காண்பிக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கின்றன. "பாரமவுண்ட்" என்ற கம்பெனி மட்டிலும் 64 படங்களை வெளியிட வாக்குறுதி கொடுத்திருக்கிறது. அவற்றில் 51 க்கு ஏற்கெனவே திட்டம் தயாராகிவிட்டது.

மேற்படி 64 படங்களில் ஒன்று "வங்காள வேல் வீரன் வாழ்க்கை" சரித்திரமாகும். இப்படத்தில் காரி கூப்பரும், காரி கிராண்டும் பொறுப்பெடுத்துக் கொள்வார்கள்.

"பாக்ஸ்" என்ற மற்றொரு சினிமா கம்பெனி 58 படம் தயாரிக்க நிச்சயித்துள்ளது.

எம். ஜி. எம். என்ற கம்பெனி 52 படம் தயாரிக்கும்.

சென்னை நிபுணர் வெற்றி

தண்டையார்பேட்டை ஜெயவாணி சினிடோன் கம்பெனியார் தயாரித்து வந்த தசாவதாரம் என்ற பேசும் படம் தயாராகி விட்டது. இன்னும் சில மாதங்கட்குள் வெளியிடப் படலாம். மிஸ். எஸ். ஆர். கமலம், மிஸ். கே. ஆர். சாரதாம்பாள் முதலிய சில முக்கியமான நடிகைகள் அதில் தோற்றுகின்றார்கள். பொதுவாக இப்படத்தை ஒரு வெற்றி என்று கூறலாமாம்.

இந்தப்படத்தின் ஓசை (பேசும் தொனி) முழுதும் சென்னை சர்க்கார் கைத்தொழில் கலாசாலையி லிருக்கும் திரு பூபதி அவர்களால் கட்டப்பட்ட இயந்திரத்தின் மூலமே எடுக்கப்பட்டது.

சுதேசிப் படம் "டேவலேப்பர்"

சினிமாப் படத்தைத் தாமாக "டேவலப்" செய்யும் இயந்திர மொன்று ஒரு இந்தியரால் செய்யப்பட்டிருக்கிறது. அதில் மின்சார மோட்டார் போன்ற ஒன்றிரண்டு சிறுபகுதிகள் போக மீதமெல்லாம் அவர் சொந்தக் கையினால் செய்யப்பட்டதே. விற்பனைக்கு இப்போது இவ்வியந்திரம் கொடுக்கப்படுகின்றன. பூனாவில் இவ்வியந்திரம் ஒன்றை நிறுவியிருக்கிறார்கள்.

இவ்வியந்திரம் இந்திய சீதோஷ்ண நிலைமைக்கு ஒத்திருக்குமாறு சில விசேஷ அமைப்புகள் பெற்றிருக்கிறது. அதோடு ஒரு படத்தையும் இன்னொரு படத்தையும் யாதொரு வித்யாசமும் தெரியாது சேர்த்துச் செப்பனிட்டு விடலாம்.

சினிமாவில் பரிசுத்த இயக்கம்

சில சினிமாப் படங்களால் சில வகுப்பார் அவமானப்படுத்தப் படுகின்றனர் என்று கண்டிக்கப்படுவதை முன்னிட்டு ஹாலிவுட் சினிமா கம்பெனியார் சிலர் சேர்ந்து சீர்திருத்தம் செய்ய ஒத்துக் கொண்டுள்ளார்கள்.

அக் கம்பெனிகள் முதல் நாஷனல், பாக்ஸ், மெட்ரோ-கோல்ட்வின்-மேயர், பாரமௌண்ட், ஆர். கே. ஓ., யுனைடெட் ஆர்ட்டிஸ்ட்ஸ், வார்னர் சகோதரர்கள், யூனிவேர்சல் ஆகியவைகளாம்.

இவை ஜூலை 15-ந் தேதிக்கு மேல் வெளியிடப்பட்ட படங்களை யெல்லாம் மேலே சொன்ன வாக்குத் தத்தப்படி சீர்திருத்தி அமைத்து ஒழுங்கு செய்யும்.

அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்டின் மனைவியாரும் சமீப காலத்தில் பரிசுத்த இயக்கக்காரர்களோடு சேர்ந்து பாடுபடுவதாகத் தெரிகிறது. அவர் சமீபத்தில் சிகா கோவில் பிரசாங்கம் செய்த போது ஹாலிவுட்டில் தயாரிக்கப்படும் பல படங்கள் இளைஞர்களைக் கெடுத்து வருகின்றன வென்றார்.

அப்பரிசுத்த இயக்காரர்கள் சினிமாப் படங்களையே யன்றி நடன மண்டபங்கள், நாடக மேடைகள், நிர்வாணிகள் மண்டபங்கள், சில பத்திரிகைகள் ஆகியவற்றையும் கூடக் குறி வைக்கத் தொடங்கி விட்டார்கள்.

அண்மையில் ந்யூயார்க்கில் புரோட்டஸ்டாண்டுகள், கத்தோலிக்கர்கள், யூதர்களாகியோர் கூடி ஒரு தேசீய பரிசுத்த இயக்கமே ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று தீர்மானித்தார்கள். இந்தத் தீர்மானம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டால் சுமார் 500 சினிமா தியேட்டர்கள் வரையிலும் அமெரிக்காவில் அடைபட்டுப்போகும்.

ஹாலிவுட் வெளியிட்டிருக்கும் ஒரு கணக்கினால் பரிசுத்த இயக்கம் ஆரம்பமான பிறகு 35 லட்சம் பவுன் வசூல் குறைந்து விட்ட தென்று தெரிகிறது.

காங்கிரஸ் இறந்து விடவில்லை

நிர்மாணத் திட்டத்தைக் கைவிடாதீர்கள்

ஸ்ரீமதி சரோஜினி தேவியின் வீரமுழக்கம்

சென்னைத் திருவல்லிகேணிக் கடற்கரையில் ஆகஸ்டு 12-ந் தேதி ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் ஸ்ரீமதி சரோஜினி நாயுடு பேசியதின் சாரம் வருமாறு:—

காங்கிரஸ் புதைக்கப்படவில்லை என்பதைச் சொல்லவே நான் இங்கு வந்திருக்கிறேன். ஆனால் காங்கிரஸ் இறந்துவிட்டதாகவும், காங்கிரஸ் நசுக்கப்பட்டதாகவும் சிலர் சொல்லுகின்றனர். ஆனால் இக்கூட்டத்தின் அளவைக் கவனித்து எதிரிகளை ஒரு கேள்வி கேட்க விரும்புகின்றேன். இங்கு கூடியிருப்பவர்கள் உற்சாகத்துடனிருக்கிறார்களா? அல்லது அழுது கொண்டிருக்கின்றனரா? 1920-ம் வருஷம் எவ்வளவு உற்சாகம் காட்டப்பட்டதோ அந்த உற்சாகத்திற்கு இன்றுகுறைவேயில்லை. இந்தக்காலத்திற்குள் எத்தனைபேர் சிறை சென்றுள்ளார்கள்? எத்தனை பேர் போலீஸ் தடியடிகளைப் பெற்றனர்? எத்தனை பேர் தங்கள் சொத்து சுகம் எல்லாவற்றையும் தியாகம் செய்துள்ளார்கள்? காங்கிரஸ்தான் இந்தியா? இந்தியர் உயிருடனிருக்குமளவும் காங்கிரஸ் இருந்தேதீரும்.

நான்கு வருட யுத்தம்

சென்ற நான்கு வருடங்களாக நடைபெற்ற யுத்தம் சாமானியமானதா? எவ்வளவு கஷ்டங்கள் இருந்தபோதிலும் காங்கிரஸ் சைன்யம் தளர்ச்சியடையவில்லை. தளர்ச்சி யடைவார்களானால் பாரதமாதா காங்கிரஸ் வீரர்களுக்குப் புதிய உணர்ச்சியையும், உற்சாகத்தையும் அளிக்கத் தயாராக இருக்கிறாள். இதுவே காங்கிரஸின் பலமாகும். கேவலம் ஸ்திரிகள் என்ன செய்ய முடியும் என்று எண்ணியிருந்தீர்கள். அவர்கள் எல்லோரும் வீட்டை விட்டு, குழந்தைகளையும், கணவனையும் விட்டு, ஆசாரத்தை விட்டு சௌக்கியத்தை விட்டு, போரின் முன்னணியில் வீராவேசத்துடன் சண்டை செய்தார்கள்.

ஒரு நூறு வருடங்களில் எற்படுத்த முடியாத நிலைமை ஒரு க்ஷணத்தில் நடைபெறவில்லையா? ஒரு சாதாரண மனிதராகிய காந்தியடிகளின் வாக்குப் பெருமை தான் என்னே!

நல்லுணவு அருந்தி, சுகமாக வாழ்ந்து வந்த பிராமண ஸ்திரிகள் அநேகர் போர்முனைக்கு என் வர வேண்டும்? சுதந்திர தாகம் அவர்களிடை அதிகமாக இருப்பதாலல்லவா? இச் சுதந்திர உணர்ச்சி எல்லா மனிதர்களிடையும் இருக்கையில் காங்கிரஸ் இறந்து விட்டதாக எப்படிச் சொல்லுவது?

போராட்டம் நிறுத்தப்பட்டதேன்?

பின்னர் போராட்டம் என் நிறுத்தப்பட்டிருக்கிறதென்று சிலர் கேட்கக் கூடும். எப்பொழுது சண்டை செய்வது, எப்பொழுது பலம் சேர்த்துக் கொள்ளப் பின்வாங்க வேண்டியது, எப்பொழுது ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டியது என்று அனுபவம் வாய்ந்த சேனாதிபதி நன்கு அறிவார். தலைவர் கட்டளையைத் தவறாக எண்ணுபவர்கள் மூடர்களேயாவர். அம் மூடர்கள் சொல்லுவதை நாம் எப்படி எற்றுக் கொள்ளுவது?

சுதந்தரப் போராட்டத்தில் நாம் ஓர் புதிய யுத்த முறையைக் கற்பிக்கவில்லையா? ரத்தம் சிந்தாது யுத்தத்தை நாம் நடத்தவில்லையா? ஐரோப்பிய நாகரிகம் பயனற்றதென்று ருசுப்படுத்தவில்லையா? காந்தியடிகளின் தீர்மானத்தைப் பற்றி பிரிட்டிஷ் சர்க்கார் நடுக்க முறவில்லையா? இப்பொழுது அவர் உத்திரவிட்டிருப்பதை நாம் எவ்வாறு தவறு என்று நினைக்கமுடியும்?

சிறந்த தியாகம்

காங்கிரசில் ஒப்பற்ற தலைவர்களை நாம் தியாகம் செய்யவில்லையா? பண்டித நேரு இறந்துவிடவில்லையா? தாஸ் நம்மிடையிலிருந்து மறையவில்லையா? பாஞ்சால சிங்கம் லஜபதிராயைக் காங்கிரஸ் இழக்கவில்லையா? விட்டல் பாய் படேல் வெளி நாட்டில் உயிர் விடவில்லையா? காங்கிரஸின் நிலைமை என்ன வாயிற்று? எவ்வளவு பெரிய தலைவர்கள் இறந்தபோதிலும், இருந்து விலகிய போதிலும், காங்கிரசின் பெருமை குறைந்துவிடாது. ஆனால் இறந்தவரைப்பற்றி நாம் நினைத்து வருந்த இடமில்லை. வருத்தம் ஒருபுறம் இருந்தபோதிலும், போர்முனையில் நாம் பின்நிற்பதில்லை. முன்னர் போய்க்கொண்டேதான் இருக்கிறோம். நமது நோக்கமும், லட்சியமுமே நமக்குப் பிரதானம். தேசிய லட்சியம் குறையுமேல் அந்தக் காங்கிரசை நாமே அழித்துவிடுவோம். காங்கிரஸ் வேறு; நீங்கள் வேறு அல்ல.

புதிய வேலை

50 வருடங்களுக்குப் பின்னர் காங்கிரஸ் இப்பொழுது ஓர் புதிய வேலையில் இறங்கியுள்ளது. இதுவும் விசாலமான தேசிய வேலைதான். நிருமாண திட்டம் காங்கிரசுக்குப் புதிய திட்டமல்ல. இந்தத் திட்டத்தைக் காந்தியடிகளே நமக்குக் கொடுத்தருளினர். நமது தேசத்தை ஒன்று கூட்ட இத்திட்டம் அவசியமானதாகும்.

சுதந்திரம் மாத்திரம் கிடைத்தால் நமக்குப் போதுமா? உணவு வேண்டாமா? இருக்க வீடுகள் வேண்டாமா? நம்மவருக்குச் சுயமரியாதை வேண்டாமா? நம்மவருக்கு ஆத்ம பரிசுத்தம் வேண்டாமா! தினசரி வாழ்க்கையை நாம் கௌரவமாய்நடத்த வேண்டாமா?

ஆகவே உங்களிடை இருக்கும் உற்சாகத்தையும், தேசீய உணர்ச்சியையும் காட்ட கிராமங்களுக்குச் செல்லுங்கள். கிராம வாசிகளையும் உங்களைப் போன்ற தேசிய வீரர்களாக மாற்றுங்கள்; அவர்களது அறியாமையை அகற்றுங்கள்; அவர்களிடமிருக்கும் பிணியையும், வறுமையையும் ஓட்டி, உற்சாகத்தை ஊட்டுங்கள்.

அபேதவாதிகளுக்கு ஆசி

அபேதவாதிகளுக்கு என் ஆசீர்வாதத்தையும், ஆதரவையும் அளிக்கிறேன். கிராமங்களிலிருக்கும் ஏழை மக்களின் கஷ்டங்களை ஒழித்து அவர்களுக்குச் சுகத்தை அளிப்பதே அபேதவாதிகளின் விருப்பம். எல்லா ஜனங்களும் சுகமாக வாழ்ந்து வர வேண்டுமென்றே அவர்கள் கோருகின்றனர். இந்த எண்ணத்தை நடைமுறையில் காட்டவேண்டும். இதுவே அறிவாளிகளுக்கு ஒக்கும். நமது தேசிய அமைப்பைக் கிராமங்களிலிருந்து ஆரம்பிப்பதே நலம். கிராமத்தவர்கள்தாம் நாட்டின் ஹிருதயம். அவர்களைச் சீர்ப்படுத்தி நல்ல நிலைமையில் இருக்கச் செய்தால், பிறகு நாட்டின் அபிவிருத்தி தானாகவே ஏற்படும்.

கதர்

கதர் பிரசாரம் கிராமவாசிகளின் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்ப்பதுடன், தேசிய உணர்ச்சியையும் வளர்ப்பதாகும். நமது பண்டைக்கால நாகரிகமும், கைத்தொழில்களும் புத்துயிர் பெறுகின்றன. காங்கிரசில் ஈடுபட்டுத் தியாகம் செய்தவர்களுக்கு வழிகாட்டும்படி எனக்கு அளிக்கப்பட்ட ஓர் பத்திரத்தில் என்னைக் கேட்டிருக்கிறார்கள். கதர் பிரச்னையோ அவர்களுக்கு மட்டுமின்றி நாட்டிலுள்ள கோடிக்கணக்கான ஜனங்களுக்கு வேலை கொடுத்து உணவளிக்கக் கூடியது. இத்தொழிலில் சுயமரியாதைக்கும், கௌரவத்திற்கும் ஹானி கிடையாது.

வகுப்பு ஒற்றுமை

நிருமாண திட்டத்தில் இன்னும் எத்தனையோ பிரிவுகள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் அவகாசம் ஏற்பட்ட பொழுதெல்லாம் வகுப்பு ஒற்றுமைக்குப் பாடுபட வேண்டியது அவசியம். இந்த ஒற்றுமைதான் இந்தியாவின் விடுதலைக்கு ஒரு உத்திரவாதமாகும். வகுப்புச் சண்டை ஜாதிச் சண்டை இவையெல்லாம் நாட்டின் முன்னேற்றத்திற்குக் கெடுதி விளைவிக்கக் கூடியவை. நாட்டில் வகுப்பு ஒற்றுமையில்லையேல் ஒரு வகுப்பினருடைய உரிமையை மற்றொரு வகுப்பினரிடம் எவ்விதம் ஒப்படைப்பார்கள். வகுப்பு ஒற்றுமை ஏற்படாது போனால் நாம் முன்னேற்ற மடைவோமே யாராலும் சிறந்த அபிவிருத்தியடைய முடியாது.

வகுப்பு உணர்ச்சியை வளர்ப்போமானால் நாம் காட்டுமிராண்டிகளுக்கும் தாழ்ந்தவர்களாவோம். பிரிவுகளை ஏற்படுத்துவதால் விடுதலையை நாம் ஒருக்காலும் பெற முடியாதென்பது திண்ணம். ஜாதி, வகுப்பு முதலிய உணர்ச்சிகளெல்லாம் தனிப்பட்டவர்களைப் பொறுத்தது. நாட்டின் அரசியல் போராட்டத்தில் இவற்றைப் பிணைப்பது அறியாமையாகும்.

குடிசைக் கைத்தொழில்கள்

குடிசைக் கைத்தொழில்களை வளர்த்து நாட்டில், தத்தளித்துக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான சிறு கைத்தொழில்களுக்குப் புத்துயிர் அளிப்பது நிருமாண திட்டத்தில் மற்றொரு பகுதியாகும். இதில் ஈடுபட ஒருவருக்கும் தடை கிடையாது. இதில் கட்சி வித்தியாசம் கிடையாது. சர்க்கார் என்ன செய்வார்களோ என்று அஞ்ச வேண்டியதில்லை.

இப்பொழுது காந்திஜி என்ன சொல்லுகிறார். 'என் ராணுவம் போர் முனையில் வெகு விபரிசையாகவும், தைரிய



1—8—34-ந் தேதி தஞ்சை சுயமரியாதைச் சங்க ஆதரவில் அரிமளம் திரு. முரு. தேனப்பச் செட்டியாருக்கும், தஞ்சை ஸ்ரீமதி T. P. ஆதிலட்சுமிக்கும் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. மணமகன் நாட்டுக்கோட்டைச் செட்டியார் வகுப்பைச் சேர்ந்தவரும் மணமகள் வேளாள வகுப்பைச் சேர்ந்தவருமாவர்.

மாகவும், சண்டை போட்டது. சற்று ஓய்வு எடுத்துக்கொள்ளும்படி கட்டளையிட்டிருக்கிறேன். ஆனால் இந்த நேரத்தில் சும்மா இருந்தால் சோம்பேறிகளாகி விட்டால் என்ன செய்வதென்று பயப்பட இடமில்லாதிருக்க வேண்டியும், ராணுவத்தின் கட்டுப்பாடு கெட்டுப்போகாமல் இருக்கவும் ஓர் புதிய வேலை கொடுக்க வேண்டும். ஆனால் இந்தப் புதிய வேலை உண்மையில் புதிதல்ல. 1921-ம் வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஒத்துழையா இயக்கம் அழிவு வேலை முறையை ஆதாரமாகக் கொண்டிருந்தது. வெளி நாட்டார் அதிகாரத்தையும், ஆதிக்கத்தையும் ஒழிக்கும் தன்மையுடைத்தா யிருந்தது. அந்த வேலை முறை மாறுதல் அடைந்திருக்கிறது.

சட்டசபைப் பிரவேசம்

பண்டித மோதிலால் நேரு சித்தரஞ்சன் தாஸ் முதலிய தலைவர்கள் சட்டசபை சென்று ஒத்துழையா இயக்கத்தை நடத்த விருப்பம் கொண்டிருந்தனர். அவர்கள் பார்லிமெண்டரி வேலையில் அதிக புத்திசாலிகளாக இருந்தார்கள். காங்கிரசில் இருந்துகொண்டே சட்டசபையிலும் தேசீயப் போராட்டத்தை நடத்தவிரும்பினர். ஆனால் அப்பொழுது காங்கிரசில் இரு கட்சிகள் இருந்தன. ஒருவருக்கொருவர் மன வித்தியாசம் இருந்துவந்தது. அச்சமயத்தில் சுயராஜ்யக் கட்சியினருக்குக் காந்தி ஒரு சலுகை காட்டினார். அரை மனதுடன் சுயராஜ்யக் கட்சிக்கு அனுமதியளிக்கப்பட்டது. அப்படியிருந்தும் சுயராஜ்யக் கட்சியினர் பூர்ண வெற்றி பெற்றனர். அச்சமயம் அவர்கள் அடைந்த கஷ்டங்களுக்களவே யில்லை. எதிரியின் வீட்டிற்குள்ளிருந்தே பூர்ண ஒத்துழையா இயக்கத்தை நடத்தி வருவதாக திரு. தாஸ் சுயராஜ்யக் கட்சியினரைப்பற்றிக் காந்திஜிக்குத் தெரிவித்தார்.

பாட்னா முடிவு

தற்பொழுது இந்தத் திட்டத்தையே மேற்கொள்ளுமாறு காந்திஜி பாட்னாவில் உத்திரவு பிறப்பித்தார். காந்திஜி அரசியல் வேலையில் ஓர் பெரிய வீரர். தமது கொள்கையைத் திடீரென்று மாற்றிக்கொண்டு எல்லாருக்கும் ஆச்சரியத்தை உண்டுபண்ணி யுள்ளார். காங்கிரசில் ஓர் பார்லிமெண்டரிக் கட்சியை ஏற்படுத்தியுள்ளார். உண்மைக் காங்கிரஸ் வாதிகள் சட்டசபையிலிருந்து கொண்டும் தேசீய வேலை செய்ய முடியும் என்பதை அவர் ஒப்புக்கொண்டுள்ளார். ஓர் சிறந்த சேனாதிபதி போலவே அவர் தமது சைன்யத்தின் பலத்தை நன்கு அறிவார். எல்லாரும் ஒரேவித வேலையைச் செய்ய முடியாதென்பதை அவர் கண்டு கொண்டுள்ளார். அவரவர் ஆற்றலுக்கேற்றவாறு தேசீயப் போராட்டத்தை நடத்த அனுமதித்துள்ளார்.

நமது கடமை

ஆகவே வரப்போகும் தேர்தலில், தேசியத் துரோகம் செய்யாமலும், எதிரிக்குத் தலை வணங்காமலும், காங்கிரஸ் வேலையைக் கடைபிடிக்கும் காங்கிரஸ் பிரதிநிதிகளையே சட்டசபைகளுக்கு அனுப்ப நாம் கடமைப்பட்டுள்ளோம். இன்று காலையில் ஓர் கூட்டத்தில் பேசுகையில் 'திரு. சத்தியமூர்த்தி உங்கள் ஓட்டுரிமையைப் பிச்சை கேட்கிறார்'' என்று திரு. ராஜகோப்பாலாச்சாரி சொன்னார். இதை நான் ஒரு நாளும் அனுமதிக்க மாட்டேன். எந்த ஒரு காங்கிரஸ் வாதியும் பிச்சைக்காரனாக மாட்டான். திரு. சத்தியமூர்த்தி உங்கள் தூதராவார். உங்கள் கௌரவத்தையும், பெருமையையும் நம்பிக்கையையும் அவர் காங்கிரஸ் தூதர் முறையில் வேறு ஒரு அரசாங்கத்தாருக்குத் தெரிவிப்பார். அவர் உங்களைக் காட்டிக் கொடுக்கமாட்டார்.

எனக்குத் திரு. சத்தியமூர்த்தியை வெகுநாளாகத் தெரியும். அவருடைய புத்தி நுட்பத்தையும் காருண்ய சிந்தனையையும், காங்கிரஸிடத்து அவருக்குள்ள உண்மைப் பற்றுதலையும் நான் அறிவேன். அவர் சட்டசபைக்குச் சென்றபொழுது காங்கிரஸ் வேலையையே செய்து வந்தார். காங்கிரஸ் கட்டளையிட்டதும், உத்திரவைச் சிரமேற்கொண்டு சட்டசபையை விட்டு விலகினார். அவர் ஓர் கட்டுப்பாட்டுக்குட்பட்டவராவர். உங்கள் தூதராகச் சிறப்புடன் நடந்து கொள்ளுவார்.

அவர் உங்களுக்கு முன் நின்று கொண்டு உங்கள் வாக்குரிமையைக்கேட்கிறார். இப்பொழுதே அவரை நீங்கள் பரிட்சித்துப் பாருங்கள். தவறுகள் இருந்தால் சொல்லி விடுங்கள். அவற்றையெல்லாம் இன்றே ஒழிக்க அவர் தயார். ஆயிரக்கணக்கான வாக்காளர்களது நம்பிக்கையைப் பெற அவருக்கு யோக்கியதை இருக்கிறது.

தேர்தல் கண்ணியமான முறையில் நடைபெறும் என்றே நம்புகிறேன். எதிராளிகளை அனாவசியமாக அவதூறாகப் பேச வேண்டியதில்லை. அவர்களை நீங்கள் பொருட்படுத்தாது இருப்பதே நலம். இத்தேர்தல் முடிவு காங்கிரசின் சரித்திரத்தில் ஓர் புதிய சகாப்தத்தை உண்டுபண்ணும்.

திரு. சத்தியமூர்த்தியின் வெற்றி காங்கிரசின் வெற்றியாகும்; தேசத்தின் வெற்றி யென்றே நான் சொல்லுவேன்.

காங்கிரஸ் பிரதிநிதிகள் சட்டசபை சென்றபின் வெள்ளைக் காகிதத் திட்டத்திற்குப் பதிலாக என்ன அரசியல் நிலைமை ஏற்படுமென்பதை நீங்கள் அறிவீர்கள். வெள்ளைக் காகிதம் நிராகரிக்கப்பட்டால் இது தேசத்திற்கு மற்றோர் வெற்றியாகும். நாம் ஏற்படுத்தும் திட்டத்தையே நாம் விரும்புவதாகப் பகிரங்கமாக வெளியிட்டவர்களாவோம்.

வகுப்புத் தீர்ப்பு

வகுப்புத் தீர்ப்பைப் பற்றிச் சில தகராறு இருந்து வருகிறது. ஹிந்துக்களும் மற்றச் சிறுபான்மையரும் எவ்வளவு கட்டுப்பாடாக எதிர்த்த போதிலும் வகுப்புத் தீர்ப்பை மாற்ற முடியாது.

ஆனால் ஹிந்துக்களும் முஸ்லீம்களும் பரஸ்பர நல்லுணர்ச்சி கொண்டு ஓர் முடிவுக்கு வந்தால் இத்தீர்ப்பை மாற்ற முடியும். இதனால்தான் வகுப்புத் தீர்ப்பைக் காங்கிரஸ் கமிட்டி ஒப்புக்கொள்ளவு மில்லை. வகுப்பு ஒற்றுமையையே காங்கிரஸ் வளர்க்கும்படி வேண்டுகிறது. இதுதான் காங்கிரசின் செய்தியாகும்.

காங்கிரசுக்கு அங்கத்தினர் சேர்க்கக்கூடாது!

திருவிதாங்கூர் சர்க்கார் விபரீதம்

திருவாங்கூர் சர்க்கார் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள பொதுஉடைமை ஸ்தாபனங்களின் லட்சியத்தை முன்னிட்டு இந்தியத்தேசியக் காங்கிரசுக்கு அங்கத்தினர் சேர்ப்பதற்காகப் பிரசாரம் நடத்தக் கூடாதென அறிவிக்கப் பட்டிருக்கிறது.

காந்திஜியைப் பற்றி அமெரிக்கர்

"உலகத்தில் காந்தியே மகாத்மா"

இப்பொழுது, சிக்காகோ இரண்டாவது உலகச் சந்தையின் காட்சி லண்டனில் நடைபெறுகிறது. அதில் உலகமத சமத்துவ மகாநாடு கூட்டப்பட்டது. அதற்கு இந்தியப் பிரதிநிதியாய் டாக்டர் கே. வி. மூல்பாகலா அவர்கள் சென்றிருந்தார்கள்.

அப்பொழுது அவரை லண்டன் பத்திரிகையின் நிருபரொருவர் பேட்டி கண்டபோது அவர் சொன்னதின் சாரமாவது:—

எனது அபிப்பிராயத்தைப் பொறுத்தமட்டில் அமெரிக்கர்கள் இந்தியாவின் மீது சினேகபான்மையும் அன்பும் கொண்டிருப்பதோடின்றி, இந்தியர்களின் உணர்ச்சிக்கும் முழு ஆதரவும் அளிக்கிறார்கள். தன்னைக் கூடியிருந்த கூட்டத்தில் ஏசுநாதர் எப்படி கௌரவிக்கப் பட்டாரோ, அப்படி அனேக அமெரிக்கர்கள் மஹாத்மா காந்தியை எண்ணுகிறார்களென்பதையும் குறிக்காமலிருப்பதற்கில்லை. ஆகவே உலக மதசமத்துவக் காட்சியின் சபையில் மஹாத்மா காந்தியின் படத்தை ஏசுநாதரின் பக்கத்தில் மாட்டப்பட்டிருந்ததைப்பற்றி நான் ஆச்சரியப்படவில்லை.

மஹாத்மாவால் மதப் பார்லிமெண்ட் சபைக்கு அனுப்பப்பட்ட செய்தியைப் படித்தபொழுது அதிக உற்சாகமும் கரகோஷங்களும் நிரம்பி அச்சபை சப்தித்ததோடின்றி "மஹாத்மா நீடூழிவாழ்க" என்ற ஆரவாரமும் மிகுந்திருந்தது.

"நான் வாழும் வாழ்க்கையிலே நான் ஒன்றும் அனுப்பாதிருக்கும்போது; எனது பேனாவால் நான் என்ன சமாசாரத்தை அனுப்பக்கூடும்? ஆகவே இதுசமயம் நான் கடவுளைத் திருப்தி செய்யும்படி வாழ முயலட்டும். அவர் என்னைச் செய்தி அனுப்பச் சொன்னால் அதை ஆண்டவனே சொல்வார்" என்பதே அவரது செய்தியாகும்.

நமது இந்திய மத போதகர்களைப் பற்றியும், மஹாத்மா காந்தியைப்பற்றியும் அமெரிக்க ரோமன் கத்தோலிக் கோயில்களின் குருவான பிஷப் ஜெனிடாஸ் என்னிடம் நீண்ட நேரம் பேசினார். அந்தக் காட்சியை நான் பிரிந்த பிறகும் மறக்க முடியவில்லை.

"நானும் எனது பல்லாயிரக் கணக்கான தோழர்களும் உண்மையாகவும் நிரந்தரமாகவும் மஹாத்மாகாந்தி இவ்வுலகிலே வாழும் மஹான் என்றே கருதுகிறோம். அவர் எடுத்துக் கொண்ட தீண்டாமைப் போராட்டத்திலே எங்களுக்கு அதிக அனுதாபம் உண்டு. அவர் இரண்டு வருஷங்களுக்கு முன்னால் லண்டனுக்கு வந்திருந்தபோது, எங்கள் நாட்டிற்கு விஜயம் செய்து எங்கள் மரியாதையை ஏற்றுக்கொள்ள அவர் முடியாமல் போகும்படி நாங்கள் ஏமாந்து போனதற்கு மிகவும் வருந்துகிறோம்" என்று அந்த மதகுரு நான் அவரை விட்டுப் பிரியும் போது உற்சாக வார்த்தைளோடு உரையாடினர்.

அமெரிக்கர்கள் மானத வாழ்க்கையில் நாளுக்கு நாள் அதிகரிக்கிறார்கள். அவர்களுக்கு மேல் நாட்டு உலகாதய வாழ்க்கையிலும், தனிப்பட்ட உயர்ந்த வாழ்க்கையிலும் வெறுப் பேற்பட்டு விட்டதென்பது எனது நிச்சயமான நம்பிக்கை என்பதை நான் அமெரிக்கன் பிரசிடெண்ட் ரூஸ் வெல்ட்டின் மனைவியான மிஸர்ஸ் ரூஸ் வெல்ட் "சௌட்டௌகா" என்ற விடத்தில் சொன்ன சொற்பொழிவிலிருந்து உறுதி கொண்டேன். அவர் சொன்னதாவது "நாம் ஒன்று ஒற்றுமையுடன் எல்லோரும் ஒருங்கு சேர்ந்து மேனோக்கிப் போக வேண்டும்; அல்லது கீழே விழ வேண்டும். இம்மாதிரியுள்ள நூதன வாழ்க்கை புது மாதிரியாயுள்ள ! மாற்றத்திலே அமைந்து அது உண்மையான மதத்திற் கொத்ததா யிருக்க வேண்டும். அப்படி எற்பட்டாலொழிய நாம் முன்னேற்றம் பெறுவதற்கில்லை. ஏனென்றால் இப்பொழுதுள்ள வாழ்க்கை நிலையானது பலர் வாழ்வதற்காக ஒவ்வொரு தனி மனிதனும் தனது வாழ்க்கையைத் தியாகம் செய்ய வேண்டி யிருக்கிறது"



11—8—34-ந் தேதி ஸ்ரீமதி சரோஜினி தேவி பெங்களூர் மெயிலில் சென்னை வந்திறங்கினர். சென்னை "பெண்கள் இந்திய சங்கத்தார்" ஓர் சிறந்த வரவேற்பளித்தார்கள்.
—P. P. B.

தீண்டாமை ஒழிக!

ரயில் போக்கு வரவு

மதராஸ்-எழும்பூர்

மெயின் லைன்.

வண்டிப் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
இண்டோ ஸிலோன் எக்ஸ்பிரஸ்	மாலை 9 0	காலை 6 40
செங்கோட்டை பாஸஞ்சர்	காலை 6 55	மாலை 7 25
கூடலூர் பாஸஞ்சர்....	மாலை 4 0	காலை 11 55
திருவனந்தபுரம் பாஸ்டு பாஸஞ்சர்....	மாலை 9 30	காலை 6 5
திருச்சி பார்சல்	மாலை 10 20	காலை 5 35

கார்டு லைன்.

வண்டிப் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
தனுஷ்கோடி பாஸ்டு பாசஞ்சர்	காலை 11 15	மாலை 2 55
திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்	மாலை 7 30	காலை 7 15

மதராஸ்—ஸெண்ட்ரல்

வண்டிப் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
கல்கத்தா மெயில்	மாலை 8 30	காலை 8 35
கிராண்டு டிரங்க் எக்ஸ்பிரஸ்	காலை 8 40	மாலை 4 35
பம்பாய் மெயில்	மாலை 8 40	காலை 5 55
பம்பாய் எக்ஸ்பிரஸ்	காலை 8 30	மாலை 5 0
பங்களூர் மெயில்	மாலை 9 30	காலை 6 15
„ எக்ஸ்பிரஸ்	மாலை 1 0	மாலை 2 10
„ பாஸஞ்சர்	காலை 6 15	மாலை 7 40
„ „	மாலை 9 40	காலை 5 30
ஜோலார்ப்பேட்டை பாஸஞ்சர்	மாலை 12 45	மாலை 2 0
அரக்கோணம் பாஸஞ்சர்	மாலை 5 30	—
„	6 30	—
மலபார் எக்ஸ்பிரஸ்	8 5	காலை 7 15
ப்ளூமௌண்டன் எக்ஸ்பிரஸ்	9 15	6 35

நமது ஏஜெண்டுகள்.

1. காரைக்குடி — S. மெய்யப்ப செட்டியார்.
2. தேவகோட்டை — கொலம்பியா ஹவுஸ், ஆர்சு ரோடு.
3. கோனபட்டு — கோநகர் தனலெக்ஷுமி ஸ்டோர்ஸ்.
4. மதுரை — K. R. முனியாண்டியா பிள்ளை
   திண்டுக்கல் துளிர் வெற்றிலை வியாபாரம்,
   வடக்கு சித்திரைவீதி.
5. விருதுநகர் — P. பழனிக்குமாரு பிள்ளை, நியூஸ் ஏஜண்டு.
6. மாயவரம் — M. K. சுந்தரம், கதர் ஸ்டோர்ஸ்.
7. கோயம்புத்தூர் — L. ராஜகோபால், நியூஸ் ஏஜண்டு, பனங்காட்
   [ரோட்
8. ஒலவக்கோடு — மலபார் நியூஸ் ஏஜன்ஸி, நியூஸ் ஏஜண்டு.
9. திருப்பூர் — P. R. துரைசாமி அய்யர், ஸவுத் இந்தியன்
   [நியூஸ் ஏஜண்டு.
10. ராணிப்பேட்டை — S. மோகன முதலியார்.
11. கோட்டாறு — C. K. கணேசன், நாஷனல் நியூஸ் ஏஜண்டு,
12. ரேங்கூன் — V. B. சாஸ்திரி, ஜெனரல் நியூஸ் ஏஜன்ஸி,
   [244, phayre st.
13. கொழும்பு — K. N. S. பிள்ளை, No 281, 2-வது டிவிஷன்
   மருதானை. (Maradana.)
14. திருச்சினுப்பள்ளி — S. மாசிலாமணிப் பிள்ளை, தெப்பகுளம்.
15. திருவனந்தபுரம் — T. V. ரெங்கனுதன்
   டயம்ஸ் ஆப் இந்தியா ஏஜன்ஸி,
   Pazhavangady, மெயின் ரோடு.
16. தூத்துக்குடி — மு. தி. நல்லசிவன், நியூஸ் ஏஜண்டு.
17. சிவகங்கை — S. K. சோமசுந்தரம்,
   கௌரி மோட்டார் ஸ்டோர்ஸ்.
18. திருப்பத்தூர் — அ. பொ. வீர. வீரபத்திரஞ் சேர்வை,
   Correspondent.

மேற்கண்ட ஊர்கள் தவிர மற்ற எல்லாப் பெரிய ஊர்களுக்கும் நமது "ஊழியன்" பத்திரிகையை விற்பனை செய்ய

ஏஜண்டுகள் தேவை.

நிபந்தனைகட்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுக.
டிபாஸிடில்லாமல் ஏஜன்ஸி ஏற்றுக்கொள்ளப்படமாட்டது.

காரியஸ்தர்,
"ஊழியன்" காரியாலயம்,
56. தம்பு செட்டித் தெரு, சென்னை.

மகாத்மாவின் ஏழுநாள் விரதம்

முடிவடைந்தது.

வார்தாகன்ஜ், ஆகஸ்ட் 14.

இன்று காலை 6-20-க்கு மகாத்மா தேனும் ஸோடா உப்பும் கலந்த வென்னீரை அருந்தித் தமது விரதத்தை இனிது முடித்தார்.

ஆச்ரமத்தில் உள்ளவர்கள் இன்று வெகு காலையிலேயே எழுந்து விட்டனர். மகாத்மா இருந்த அறையைச் சுத்தப்படுத்தி ஜமுக்காளங்கள் விரிக்கப்பட்டன. அறையின் தென் கிழக்கு மூலையிலிருந்த கட்டிலில் மகாத்மா படுத்திருந்தார். அறைமுழுவதும் சாம்பிராணியின் சுகந்தம் பரிமளித்தது. சரியாக 5-45 க்கு ஜபம் ஆரம்பமாயிற்று.

சமரச உணர்ச்சிக்குப் பொருந்த முஸ்லீம், இந்து, கிருஸ்தவ வேதங்களில் கடவுளின் மீது ஸ்தோத்திரங்கள் பாடப் பெற்றன. இறுதியில் திரு. ஆனே தாம் சொந்தமாயியற்றிய வடமொழி சுலோகங்களைப் படித்து அர்த்தம் சொன்னார்.

பிறகு மிஸ் ஜானகி பஜாஜ் கொடுத்த தேனும் சோடாவுப்பும் கலந்த வென்னீரை அருந்தினர்.

பிறகு மகாத்மா பேச எத்தனித்தார். களைப்பினால் பேச முடியவில்லை. அவருடைய ஆசையின் பேரில் கூட்டம் முடிவடைந்தது.

டாக்டர்களின் அறிக்கை


விரதம் முடிவடைந்தவுடன் டாக்டர்கள் மகாத்மாவைப் பரிசோதித்தனர். தேகத்தின் நிலைமையைக் கவனிக்கும் பொழுது, விரதம் இன்று காலை முடிவடைந்தது நல்லது என்று எண்ணுகிறார்கள். அவருடைய இவ் வாரத்தில் அதிகமான இரத்த ஓட்டம் 190-100, நாடி 72 டெம்பெரேச்சர் 97. காலை உணவருந்திய பிறகு மகாத்மா 94 பவுண்டு எடை இருந்தார். ஏழு நாட்கள் விரதத்தினால் 8 பவுண்டு குறைந்து விட்டது.

தென் ஜில்லாக்கள் தொகுதிக்கு ஸ்ரீ குமாரசாமிராஜா அபேட்சகர்

திரு. ஸி. ராஜகோபாலாசாரியார், பார்லிமெண்டரி போர்டு அங்கத்தினர் திரு. ஸி. என். முத்துரங்க முதலியார் இவர்கள் ஆகஸ்டு 10-ந் தேதி காலை திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் மதுரை யடைந்தனர். திருவாளர்கள் ஏ. வைத்தியநாதய்யர், என். எம். ஆர். சுப்பராமன், ராஜபாளையம் பி. எஸ். குமாரசாமி ராஜா, பரமக்குடி வக்கீல் கோபாலராமையர், பாகனேரி எஸ். ஓ. எஸ். பி. உடையப்பா, எல். கிருஷ்ணசாமி பாரதி, வி. சிவராம கிருஷ்ணய்யர், ரகுவீரதயாள மிஸ்ரா உள்பட பல காங்கிரஸ் வாதிகள் தலைவர்களை பிளாட்பாரத்தில் குதூகலமாக வரவேற்று கோஷ திரு. வைத்தியநாதய்யரின் ஜாகைக்கு அழைத்துச் சென்றனர்.


இந்தியா சட்டசபைத் தேர்தலுக்கு மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி தொகுதிக்கு யாரை அபேட்சகராகப் பொறுக்கி எடுப்பது என்னும் விஷயமாகத் தலைவர்கள் இம்மூன்று ஜில்லாக்களைச் சேர்ந்த காங்கிரஸ் வாதிகளுடன் கலந்தாலோசித்துப் பின் பிரபல காங்கிரஸ் ஊழியரும், ராமநாதபுரம் ஜில்லா போர்டு மெம்பரும், ஜில்லா கல்விச் சபை உப தலைவருமான ராஜபாளையம் திரு. பி. எஸ். குமாரசாமி ராஜாவை அபேட்சகராக நிறுத்தி வைப்பதென ஏகமனதாகத் தீர்மானித்தனர்.

சனாதனிகளும் மாஜி இந்தியா சட்டசபை அங்கத்தினர்களுமான திருவாளர்கள் எம். எஸ். சேஷய்யங்கார், கே ராம ஐயங்கார் ஆகியோரும் தலைவர்களைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தனர். திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டியாரை இத் தொகுதியில் ஓர் அபேட்சகராக நிற்குமாறு சில ஜஸ்டிஸ் கட்சி பிரபலஸ்தர்கள் வேண்டிக் கொண்டிருப்பதாக மதுரையில் பிரபஸ்தாபமாயிருக்கிறது.



பக்கோ ஸ்ரீ கணேசாநந்த சபையின் முதலாவது ஆண்டு விழா 1—8—34-ந் தேதி நடைபெற்றது. பாகனேரி திரு. ஆர். வி. சாமிநாதன் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

காந்தி நாமம் ஓங்குக!



வட்டி விகிதம்.

இம்பீரியல் பாங்கு:—மூன்றரை பெர் [சென்டு.

இங்கிலாந்து பாங்கு:—இரண்டு பெர் [சென்டு.

இரங்கூன் நடப்பு வட்டி.

பவ-ஹூ ஆடி	0—4—0

இரங்கூன் தவணை வட்டி.

ஆடி 7-உ	0—3—6

சிங்கப்பூர் நடப்பு வட்டி.

பவ-ஹூ ஆனி	0—5—3

சிங்கப்பூர் 3 மாத தவணை வட்டி.

ஆடி 1-உ	0—4—9

கொழும்பு நடப்பு வட்டி.

ஜூன்	0—6—0

செய்கோன் நடப்பு வட்டி.

பவ-ஹூ சித்திரை	0—5—3
தவணை வட்டி	0—5—3

சென்னை நடப்பு வட்டி

பவ சித்திரை	0—8—0
வைகாசி	0—7—6
ஆனி	0—7—0

உண்டியல் விலை.

ஸ்டெரயிட்ஸ் விற்பனை	157¼
,, 30 நாள் தவணை வாங்குவது	150

ரப்பர்.

லண்டன், ஆகஸ்டு 13உ

புகைப்போட்ட ஷீட் ஸ்டாண்டர்டு (ரிப்) ராத்தல் ஒன்று வாங்குபவர் விலை 7 7/16 பென்ஸ்.

புகைப்போட்ட ஷீட் விற்பவர் விலை 7 9/16 பென்ஸ்.

லண்டன் லிவர்பூல் ரப்பர் இருப்பு

லண்டன் இருப்பு 51555 டன். ஆகஸ்டு 11-ந் தேதியோடு முடிந்த வாரத்தில் வெளியான ரப்பர் 700 டன்.

லிவர்பூல் ரப்பர் இருப்பு 55681 டன். ஒரு வாரத்திற்கு முந்தியிருந்த ரப்பர் 55467 டன். சென்ற வாரம் வெளியான ரப்பர் (செலவான ரப்பர்) 389 டன்.

தங்கம், வெள்ளி.

சென்னை, ஆகஸ்டு 14உ

சவரன் (சில்லரை)	21—12—6
,, மொத்தமாக	21—12—0
ஆலைத்தங்கம் தோலா 1-க்கு	34—6—0
மூணா தங்கம் ,,	34—1—0
வெள்ளி	
1 ரூபா எடைக்கு	0—10—0
100 ரூபா எடைக்கு	60—4—0

கப்பல்.

லண்டன் கிளாஸ்கோ

கிளான் ராஸ்: ஆகஸ்டு 23-ந் தேதி வந்து 27-ந் தேதி புறப்படும்.

கிளான்முரே: செப்டம்பர் 3-ந் தேதி வந்து 6-ந் தேதி புறப்படும்.

ரங்கூன்

எரின்புரா: ஆகஸ்டு 20-ந் தேதி வந்து 24-ந் தேதி புறப்படும்.

எதியோபியா: ஆகஸ்டு 27-ந் தேதி வந்து 31-ந் தேதி புறப்படும்.

எரின்புரா: செப்டம்பர் 3-ந் தேதி வந்து 7-ந் தேதி புறப்படும்.

மலேயா

ரோணு: ஆகஸ்டு 25-ந் தேதி வந்து 28-ந் தேதி புறப்படும்.

ரஜூலா: செப்டம்பர் 8-ந் தேதி வந்து 11-ந் தேதி புறப்படும்.

ரோணு: செப்டம்பர் 22-ந் தேதி வந்து 25-ந் தேதி புறப்படும்.

பாண்டிச்சேரி, சிங்கப்பூர், செய்கோன்

ஜெனரெல் மெட்ஜிங்கர்: செப்டம்பர் 4-ந் தேதியும்,

காமிசெயர் ராமெல்: அக்டோபர் 2-ந் தேதியும்

போர்னூர்டின் டி சேண்ட் பேரி: அக்டோபர் 30-ந் தேதியும் சென்னை வந்து சேரும்.

இந்திய சட்டசபைத்தேர்தல்

இந்திய சட்ட சபைக்கு அபேக்ஷகர் நாமினேஷன் விண்ணப்பம் அக்டோபரில் போடப்பட வேண்டுமென்றும் நவம்பர் 2-வது வாரத்தில் தேர்தல் நடைபெறுமென்றும் தெரிகிறது.

ரொக்கப்பரிசு




1-வது பரிசு ரூ. 500. 2-வது பரிசு ரூ. 250.

விடை கண்டுபிடிக்கும் விதம்.

பக்கத்திலுள்ள படத்தில் ஒவ்வொரு கட்டத்திலுள்ள படம் ஒரு பாட்டின் முதலடியையோ அல்லது அதன் ஒரு பாகத்தையோ குறிப்பிடுகிறது. அந்த பாடல்களின் ஜாப்தா கீழேதரப்பட்டிருக்கிறது. முதல் படம் ஓர் ஆண்டி படம். பாட்டு ஜாப்தாவைக் கவனித்தால் சரியான விடை ஆண்டி பண்டாரம் என்பது தெரியவரும். இதேபோல் மற்ற படங்கள் குறிப்பிடும் எட்டு பாட்டுகளையும் கண்டுபிடித்து தனி காகிதத்தில் தெளிவாக எழுதி அனுப்பவேண்டியது.

சங்கிதப் போட்டிப் பந்தயப் படம்.



நிபந்தனைகள்.

(1) ஒவ்வொரு விடைக்கும் பிரவேசக் கட்டணம் அண 6. கட்டணத்தை மணிஆர்டர் மூலம் அனுப்பவேண்டும். ஒருவர் எத்தனை விடைகளேனும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு விடைக்கும் பிரவேச கட்டணம் அண 6 செலுத்துவதுடன் மணியார்டர் ரசிதும் சேர்த்து அனுப்பவேண்டும். விடை அனுப்பும் கவர்மேல் சங்கிதபோட்டி என்று எழுதி அனுப்பவேண்டும். மணியார்டர் கூப்பனிலும் அனுப்புவரின் முழு விலாசம் எழுதவேண்டும்.

(2) ஆசிரியர் சீல்செய்து கொடுத்திருக்கும் சரியான விடைக்கு முதற்பரிசும், ஒருதப்புள்ள விடைக்கு இரண்டாம் பரிசும் அளிக்கப்படும். 1-க்குமேல் சரியான விடைகள் வந்தால் பரிசுத் தொகைகள் பகிர்ந்தளிக்கப்படும்.

சரியான விடை இவ்விடத்திலுள்ள மலபார் இன்டர்நேஷனல் ஆபீஸில் டிபாஸிட் செய்யப்பட்டிருக்கிறது.

விடைகளும் பிரவேசக் கட்டணமும் 9-9-34 தேதிக்குள் வந்து சேரும்படி அனுப்பவேண்டியது. இதற்கு பிறகு வரும் விடைகள் கவனிக்கபடமாட்டாது. சரியான விடையும் பரிசுபெற்றவர்களின் விவரமும் 21-9-34 தேதி 'ஊழியன்' வாரப் பத்திரிகையில் வெளிவரும்.

குறிப்பு :—1. ஆண்டி பண்டாரம். 2. படமுடியாதினித்துயரம். 3. அலகலேல்ல ஆடகனே. 4. மாலையோ கழுத்தைவிட்டு. 5. வாராங்கவெளுக்க. 6. உடுக்கவோ ஒரு கந்தைக்குமேவில்லை. 7. யான்படும்பாடு. 8. வண்ணான்வந்தானே. 9. வாவாமயில்வாகனு. 10. மாலைவாங்காமலிந்த மங்கையும். 11. ராட்டினமே. 12. ராட்டுபெருத்தியை. 13. கழுத்தில் விழுந்தமாலை. 14. கைராட்டினமாம். 15. விரித்த செஞ்சடையாட.

விடை அனுப்பவேண்டிய விலாசம் :— **சங்கித போட்டிப்பந்தயம். 1.**

மானேஜர், மோதிலால் நிலையம்,

ஒலவக்கோடு, (எஸ். மலபார்.)

Printed and published by Rama Kasinathan for the India Publications Ltd.,
at the Oolian Power Press, 56, Thambu Chetty Street, Madras.